# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 17 சனிக்கிழமை (02-09-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:211




யாழ். மாவட்டத் தேர்தலில் சுயேட்சையாகப்போட்டியிடவிருக்கும் ரெலோ அமைப்பின் முதல்வரும், சட்டத்தரணியுமான என்.ஸ்ரீகாந்தா செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார். படத்தில் இடமிருந்து இரண்டாவதாக என்.ஸ்ரீகாந்தா காணப்படுகின்றார். அவருக்கு இடதுபுறத்தில் வல்வை நகரசபைத் தலைவர் எம்.கே. சிவாஜிலிங்கமும், வலதுபுறத்தில் வைத்திய கலாநிதி கே.சுப்பையா, எஸ்.பத்மநாதன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

## யாழ். மாவட்டத்தில் 18 அணிகள் போட்டி!

யாழ்ப்பாணம்,செப்.2

யாழ். மாவட்டத் தேர்தல் களத்தில் குதிக்கும் அணிகளின் எண்ணிக்கை 18ஆக அதிகரித்துள்ளது.

நாளை மறுதினம் வேட்புமனு ஏற்றுக்கொள்ளும் பணி முடிவடையும் நேரத்தில் -

நேற்றுவரை எட்டுப் பதிவு செய்யப்பட்ட கட்டசிகளும், ஒரு சுயேச்சைக் குழுவும் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளன.

மேலும் ஒன்பது அணிகள் நாளை மறுதினத்துக்குள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வேட்புமனுத் தாக்கல் செய்வதற்காக யாழ். செயலகம் வந்த றுகுணு மக்கள் கட்சி, ஜே.வி.பி., பிரஜைகள் முன்னணி ஆகியவற்றின் பிரமுகர்கள் நேற்றே கொழும்பு திரும்பினர். இவர்களுக்கு பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

ஐ.தே.கட்சியின் பிரமுகர்கள் நேற்றுப் பிற்பகலில் வந்து உடனடியாகக் கொழும்பு திரும்பினர். (16 ஆம் பக்கம் பார்க்க)



அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளரும், கட்சியின் தலைவருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி (மத்தியில்) நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டின்போது எடுக்கப்பட்ட படம் இது. வலதுபுறத்தில் அ.மாணிக்கசோதியும் இடதுபுறத்தில் வி.இரட்ணராஜாவும் காணப்படுகின்றனர். படம்:- பொ.இராஜேஸ்வரன்

# திம்புத் தீர்மானத்தின் அடிப்படையில் தீர்வு

## ரெலோ முதல்வர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,செப்ரெம்பர்2

**தமிழர் தாயகக் கோட்பாட்டையும் சுயநிர்ணய உரிமையையும் வலியுறுத்தும் திம்புத் தீர்மானத்தின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு அமைய வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அந்த அடிப்படையிலேயே எமது சுயேச்சைக் குழு இந்தத் தேர்தலை எதிர்நோக்குகின்றது.**

**யாழ். மாவட்டத்தில் சுயேச்சைக்குழுவின் சார்பில் போட்டியிடவிருக்கும் சட்டத்தரணியும் ரெலோ முதல்வருமான என்.ஸ்ரீகாந்தா மேற்கண்டவாறு கூறினார்.**

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள ரெலோ அலுவலகத்தில் அவர் நேற்று நடத்திய இந்த செய்தியாளர் மாநாட்டில் சுயேச்சைக்குழுவில் போட்டியிடும் வல்வை நகரசபைத் தலைவர் எம்.கே.சிவாஜிலிங்கம்,யாழ். அபிவிருத்திச் சங்கப் பிரமுகர் எஸ். பத்மநாதன்,வைத்திய கலாநிதி கிருஷ்ணர் சுப்பையா, ரெலோ அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் என்.கே.விந்தன் ஆகியோரும் உடனிருந்தனர்.

இன்றுள்ள நிலையில் ஒரு புறத்தில் துணிச்சலுடன் கூடிய தியாகத்தை நாம் பார்க்கிறோம். மறுபுறத்தில் சுயநலமும் சந்தர்ப்பவாதமும் பதவி வெறியும் கொண்ட அரசியல் நடவடிக்கைகளைப் பார்க்கின்றோம்.

(3ம் ஆம் பக்கம் பார்க்க)

# அரசு யுத்த நிறுத்தம் செய்து புலிகளுடன் பேச வேண்டும்

## தமிழ்க் காங்கிரஸ் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்ரெம்பர்2

**அரசு உடனடியாக யுத்த நிறுத்தம் செய்து மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி அமைதியை ஏற்படுத்த வேண்டும்.**

**மேற்கண்டவாறு அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளரும் கட்சியின் தலைவருமான சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்தார்.**

கொக்குவிலில் வைத்து நேற்று மாலை நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

செய்தியாளர் மாநாட்டின் போது கட்சியின் யாழ்மாவட்ட வேட்பாளர்களான அபிமன்னசிங்கம் மாணிக்கசோதி, விஜயரட்ணம் இரட்ணராஜா ஆகியோரும் உடனிருந்தனர்.

செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் கூறியதாவது:-

சமாதானமான முறையில் இரு இனங்களுக்கும் இடையிலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படுவதை தமிழ் காங்கிரஸ் வரவேற்கிறது. இந்தத் தீர்வு திம்புக் கோட்பாடுகளின் அடிப்படையில்தான் சாத்தியமாகும் என்பதையும் எமது கட்சி வலியுறுத்துகிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

# 15 விமானப் படையினர் நேற்று கிளைமோர் தாக்குதலில் பலி!

வவுனியா மாவட்டத்தில் வெலலாங்குளம் பகுதியில் நேற்றுக் காலை 7.45 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கிளைமோர் தாக்குதலில் 15 விமானப் படையினர் கொல்லப்பட்டனர்; 7பேர் காயமடைந்தனர் என விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

விடுமுறையில் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த படையினர் பயணம் செய்த டிராக்டரே தாக்குதலுக்கு இலக்கானதாக அது மேலும் தெரிவித்தது.

காயமடைந்த விமானப் படையினர் உடனடியாக வவுனியா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டனர். (இ-3-8)

# லங்கா முடித்த, ஹெந்தல கப்பல்களில் ஆயிரத்து 700 பயணிகள் இன்று பயணம்

யாழ்ப்பாணம்,செப்.2

காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலைக்கு 'லங்கா முடித்த', "ஹெந்தல" ஆகிய இரு கப்பல்கள் மூலமும் ஆயிரத்து 700பயணிகளை இன்று அழைத்துச் செல்ல ஏற்பாடாகியுள்ளது என்று யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

கப்பலில் பயணம் செய்ய பயணச்சீட்டுப் பெற்றவர்களை இன்று காலை 6 மணிக்கு யாழ்.சிங்கள மகாவித்தியாலயத்துக்கு பயண ஏற்பாட்டுடன் வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

கப்பலுக்குப் பயணச்சீட்டு வழங்கும் பணியில் சிவில் நிர்வாக அலுவலக ஊழியர்களும் யாழ்.செயலக அதிகாரிகளும் நேற்று மாலை 6.30 மணிவரை ஈடுபட்டிருந்தனர்.

ஆயிரத்து நூறு பேருக்குப் பயணச்சீட்டுக்கள் வழங்கப்பட்டன என்று யாழ்.சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஏற்கனவே 600 பேருக்கு பயணச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருந்தன. (இ-3)

## ஜானக பெரேரா சரத் பொன்சேகா ஜப்பானுக்கு

ஜப்பானின் தலைநகர் ரோக்கியோவில் அடுத்த வாரம் இடம்பெறவுள்ள பசுபிக் இராணுவத்துறை வல்லுநர்கள் மாநாட்டில் மேஜர் ஜெனரல்களான ஜானக பெரேராவும், சரத் பொன்சேகாவும் கலந்து கொள்ள உள்ளனர்.

புதிய இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல இவர்களின் பெயர்களைச் சிபார்சைச் செய்துள்ளார். (இ-3)

## சேவல் சின்னம் தொண்டாவுக்கு

கொழும்பு,செப்.2

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் செயலாளர் ஆறுமுகம் தொண்டமானுக்கு "சேவல்" சின்னத்தைப்பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க நேற்று இந்தத் தகவலை வெளியிட்டார்.

இதனால் இ.தொ.காவின் சின்னமான "சேவல்" சின்னத்தை ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான குழுவுக்கு வழங்குவதா? அல்லது பி.பி.தேவராஜ் தலைமையிலான மாற்றுக்குழுவுக்கு வழங்குவதா? என்பது குறித்து இதுவரை நிலவி வந்த சர்ச்சைகளுக்குத் தீர்வுகாணப்பட்டுள்ளது.

தொண்டமான் தலைமையிலான குழு பொது மக்கள் ஐக்கிய முன்னணியுடனும் மாற்றுக்குழு ஐ.தே.க. அணியுடனும் போட்டியிடுகின்றன. (இ-7)

# நோர்வேத் தூதுவர் திடீர் இலங்கை விஜயம்

## ரணில் உட்பட பலருடன் பேச்சு

கொழும்பு,செப்.2

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பது தொடர்பான முன்முயற்சிகளில் ஈடுபட்டு வரும் நோர்வே அரசின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் மூன்று நாள் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு கடந்த செவ்வாய்க்கிழமையன்று கொழும்பு வந்தார்.

மூன்று தினங்கள் கொழும்பில் தங்கியிருந்த இவர் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் ஆகியோரைச் சந்தித்து இன்றைய நிலைவரங்கள் குறித்துக் கேட்டறிந்தார்.

கடந்த வியாழனன்று லண்டன் பயணமான இவர் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்த இன்றைய நிலை குறித்து விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தையும் சந்தித்துப் பேசுவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பி.பி.ஸிக்கு அவர் வழங்கிய பேட்டி ஒன்றில் எதிர்வரும் ஒக்ரோபரில் இலங்கையில் புதிய அரசு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் முன்னேற்றம் ஏற்பட வாய்ப்பு உண்டு என்று தான் நம்புவதாகத் தெரிவித்தார். (இ-7)

# றுகுணு மக்கள் கட்சி இங்கு தனிச்சிங்களத்தில் வேட்பு மனு

யாழ்ப்பாணம்,செப்.2

யாழ்.மாவட்டத்தில் போட்டியிட நேற்று வேட்புமனுத் தாக்கல் செய்த றுகுணு மக்கள் கட்சி தனது வேட்பு மனுவை தனிச்சிங்களத்தில் தாக்கல் செய்தது.

தெற்கிலிருந்து வந்த ஜனநாயகப் பேரவை, ஜே.வி.பி, ஐ.தே.க. ஆகிய கட்சிகள் ஆங்கிலத்தில் வேட்புமனுத் தாக்கல் செய்திருந்த போதும் றுகுணு மக்கள் கட்சி மட்டும் சிங்களத்தில் வேட்புமனுத்தாக்கல் செய்தது.

தமிழ்க்கட்சிகளைப் பொறுத்தவரை இலங்கை தமிழ்க் காங்கிரஸ் மட்டும் ஆங்கிலத்தில் வேட்பு மனுத்தாக்கல் செய்தது. ஏனையவை தமி

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# வாழ்த்துகின்றோம்

எமது கிறீன்பீல்ட் சனசமூக நிலையத்தினதும்
விளையாட்டுக்கழகத்தினதும் ஸ்தாபகரும்
முன்னாள் தலைவருமான

## திரு. P. F. சேவியர்

அவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்றத் தேர்தலில் வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டமையினையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம். இவர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட வாழ்த்துகின்றோம்.

*கிறீன்பீல்ட் சனசமூக நிலையத்தினரும்,*
(77948) *விளையாட்டுக்கழகத்தினரும்.*

# நன்றி கூறுகின்றோம்

26-08-2000 சனிக்கிழமை
சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தானத்திலும்,
28-08-2000 திங்கட்கிழமை
அல்வாய் மாலை சந்தை விநாயகர் தேவஸ்தானத்திலும்
இனிதே நடைபெற்ற தென்மராட்சி, கொழும்புத்துறை, அரியாலை ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்த அந்தணர் குடும்பங்களுக்கு நிதி வழங்கும் நிகழ்ச்சிக்கு மனமுவந்து நிதிவழங்கிக் கௌரவித்த தேவஸ்தானங்களுக்கும், அந்தணப் பெருமக்களுக்கும், வர்த்தகப் பெருமக்களுக்கும் சைவ அபிமானிகளுக்கும், இந்நிகழ்வை நடத்த இடம் தந்துதவிய ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் ஆலய தர்மகர்த்தா சபையினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைக் கூறிக்கொள்ளும்

## சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்

பிரம்மஸ்ரீ
கா.சந்திரசேகரசர்மா
பொதுச்செயலாளர்.

தலைமைச் செயலகம்,
*இல. 74,பிறவுண் வீதி,*
*நீராவியடி, யாழ்ப்பாணம்.* (77937)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையின்
வளர்ச்சியை

## லாலா சோப் ஸ்தாபனத்தினர்

பாராட்டி வாழ்த்துகின்றார்கள்.

உயர்திரு. டாக்டர் சி.இராசலிங்கம் அவர்களின் சேவை அளப்பரியது. தன்னலம் கருதாது எமது வைத்தியசாலையை சிறந்த தரத்துக்குக் கொண்டுவர அயராது உழைத்தார். தனது குடும்பச் சுமை, சுகயீனங்களைப் பொருட்படுத்தாது கடமையே கண்ணாக இருந்து இதய சுத்தியுடன் பாடுபட்டார். ஓர் அரிக்கன் லாம்புடன் சிறிய கட்டடத்தில் குறைந்த உத்தியோகத்தர்களுடன் இருந்த எம் வைத்தியசாலை படிப்படியாகப் பல கட்டடங்களைக் கொண்ட பெரிய வைத்தியசாலையாக மாறியது. பொதுமக்களிடம் பணம் சேகரித்தும் மற்றும் பொது ஸ்தாபனங்களின் உதவிகளுடன் பெரிதாக இன்று உயர்ந்து நிற்கின்றது.

இவ்வைத்தியசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்ற
உயர்திரு. டாக்டர் சி.இராசலிங்கம்
அவர்களின் சேவை மென்மேலும் தொடர நீடூழி வாழ்க, வளர எனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

லாலா சோப் ஸ்தாபனத்தினர்,
*அச்சுவேலி.*
(C/12788)

*யாழ். மாவட்ட வேலையற்றோரை*

## ஸ்ரீ.ல.சு.கட்சியின் பிரதான அமைப்பாளர் சந்திக்கின்றார்

கடந்த காலங்களில் தகுதியிருந்தும் பொருத்தமான வேலை வாய்ப்பு இன்றி சிரமப்படும் வேலைவாய்ப்பற்றோரை ஸ்ரீ.ல.சு. கட்சியின் யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளரும், ஸ்ரீ.ல சுதந்திரக் கட்சியின் மத்தியகுழு உறுப்பினரும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆதரவுடன் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் சுயேச்சைக் குழுவின் முதன்மை வேட்பாளருமாகிய வேல்முருகு தங்கராசா அவர்கள் ஸ்ரீ.ல.சு.கட்சியின் முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள யாழ். மாவட்டக் காரியாலயத்தில் நாளை 03-09-2000 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் சந்திக்கவுள்ளார்.

இச்சந்திப்பில் தொண்டர் ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள், மற்றும் வேலைவாய்ப்பிற்காக ஸ்ரீ ல.சு.கட்சியில் பதிவுசெய்து கொண்டவர்கள் அனைவரையும் விசேடமாகக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

பிரதான அமைப்பாளர்,
ஸ்ரீ.ல.சு.கட்சி,
யாழ்ப்பாணம்.

*183, முதலாம் குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.* (77923)

## இலவச மருத்துவ பரிசோதனை

யாழ். லயன்ஸ்கழகம் இலவச மருத்துவப் பரிசோதனைகளையும், நோய்த்தடுப்பு விளக்கங்களையும் ஆறுகால்மடம் அறிவொளி சனசமூக நிலையத்தில் இன்று காலை 9.30 மணிக்கு நடத்தவுள்ளது. இந்த நிகழ்வில் மருத்துவப் பரிசோதனைகளை டாக்டர் கே.குலநாயகமும், கண் பரிசோதனையை பி.ஜே.பெர்னாண்டோவும் மேற்கொள்வர். டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம் நோய்த்தடுப்புபற்றி விளக்கமளிப்பார்.

## மத்திய கல்வி நிலையம்

(C.T.C)
நீர்வேலி கந்தசுவாமி கோயிலடி.
ENGLISH
SPOKEN
and
GRAMMAR
By: B.MANOHARAN
ஆரம்பம்:
திங்கள்- 04-09-2000
*11.00 a.m.* (77935)

## SHAMROCK

கணக்கீடு
Mr.RAJANI
A/L 2001 கம்பனி
ஆரம்பம்:
02-09-2000
*Sat. - 3.30* p.m

- ★ A/L Geography
- ★ Gr. 8 to 11
- ★ O/L DAY CLASS
- ★ Spoken English

(77944)

கணக்கீடு
## NEW SCIENCE COLLEGE

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
A/L 2001 பங்குடைமை
ஆசிரியர்:- திரு. S.தவா
[B.Com (Hons) Acc.,SPL]
*சனி,ஞாயிறு,புதன்,வெள்ளி.*
(77940) *3.30 P.m. (ப.நே.)*

## ஆங்கிலக் கல்லூரி

அச்சுவேலி.
*(பழைய சந்நிதி றோட்)*
ENGLISH
SPOKEN
AND
GRAMMAR
By:- B.Manoharan
ஆரம்பம்:-
திங். 04-09-2K
9-15 a.m.
(77934)

## நாகம்ஸ்

சுன்னாகம்
அஜித் - ஷாலினி
நடிப்பில்

## அமர்க்களம்

(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00,2.30 (பு.நே.)
(77947)

## ராஜா

(யாழ்ப்பாணம்)
கார்த்திக், கௌசல்யா,
அப்பாஸ், ஹீரா, ராதாரவி
மற்றும் பலரின் நடிப்பில்

## பூவேலி

காட்சிகள்: 10.30, 2.00
(புதிய நேரம்) (C/12325)

# தேர்தல் முடிவுகளை முற்கொண்டு வெளியிட ஊடகங்களுக்குத் தடை!

கொழும்பு,செப்.2

எதிர்வரும் பொதுத்தேர்தலின் முடிவுகளைத் தேர்தல் திணைக்களம் உத்தியோகபூர்வமாக வெளியிடுவதற்கு முன்னர் வெளியிட இலத்திரனியல் ஊடகங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகக் கொழும்பு சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

இதுவரை காலமும் தேர்தல் முடிவுகளை வெளியிட தேர்தல் திணைக்களம் ஊடகங்களுக்கு அனுமதி வழங்கியிருந்தது. ஆனால் எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலின்போது தேர்தல் திணைக்களத்தால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும் பெறுபேறுகளை மட்டுமே எவரும் வெளியிட முடியும்.

பொதுத்தேர்தலின் பெறுபேறுகளைத் தேர்தல் திணைக்களம் வெளியிடுவதற்கு முன்னர் வெளியிட்டு பிரதான கட்சிகளையும் மக்களையும் அசௌகரியங்களுக்கு உட்படுத்தச் சில கட்சிகள் முயன்று வருவதாகக் கிடைத்த தகவல்களை அடுத்தே இந்தத் தடை உத்தரவு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-க-20)

# ஒரு கோடி ரூபா செலவில் வலி. கிழக்கில் அபிவிருத்திப்பணி

வலி.கிழக்கு,செப்.2

வலி.கிழக்குப் பிரதேசத்தில் ஒரு கோடி ரூபா நிதி மூலம் அபிவிருத்தி வேலைகளை வலி.கிழக்குப் பிரதேச சபை மேற்கொள்ளவுள்ளது.

பிரதேச சபைக்குட்பட்ட கல்வி, குடிதண்ணீர்வசதி, வீதிகள் புனரமைப்பு, சனசமூக நிலையங்கள் புனரமைப்பு ஆகிய அபிவிருத்திப் பணிகளே மேற்கொள்ளப்படவுள்ளன.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு நிதி மூலமும் -

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி மூலமும், பிரமாண அடிப்படையிலான நிதி மூலமும் இத் திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.

இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பிரதேச சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-180)

## NEWTON

342, ஸ்ரான்லி வீதி,
ஆரியகுளம் சந்தி.
SPOKEN ENGLISH
and
GRAMMAR
By:-
BRITTO
புதிய பிரிவு ஆரம்பம்:
இன்று சனிக்கிழமை
(02-09-2000)
*2 மணி Sat., Sun.*
(77892)

## தேவை

★ . ஆங்கில மருந்தில் அனுபவம் உள்ள பெண் பிள்ளைகள் தேவை. ★ ஆங்கில அறிவுள்ள பழக விரும்பும் பெண் பிள்ளைகளும் விரும்பத்தக்கது.
நேரடியாக உடன் தொடர்புகொள்ளவும்.

புதிய குறிஞ்சி மருந்தகம்
பரமேஸ்வராச் சந்தி, (கம்பஸ்)
பலாலி வீதி.
(77931)

## கலாஜோதி இளைஞர் ஒன்றியம்

தட்டாதெரு

## சமய அறிவுப் போட்டி பரிசளிப்பு விழா

இடம்:- யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை
காலம்:- 02-09-2000 சனிக்கிழமை மாலை 3 மணி (S.L.T.)
தலைவர்:- திரு. மு.நந்தகோபாலன்
(தலைவர், கலாஜோதி இளைஞர் ஒன்றியம்)
பிரதமவிருந்தினர்:- திரு. வே.பொ.பாலசிங்கம்
(யாழ். மாநகரசபை ஆணையாளர்)
சிறப்பு விருந்தினர்கள்:- திரு.து.வைத்திலிங்கம்
(மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)
கலாநிதி திரு. க.குணராசா
(பிரதேச செயலர், நல்லூர்)
திரு. வே.ஞானகாந்தன்
(அதிபர், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை)
ஆசியுரை:- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள்
(குருமகா சந்நிதானம், நல்லை ஆதீனம்)

இசை நிகழ்ச்சி
பாட்டு : செல்வி மனோஜா ஜெயரட்ணசிங்கம்
வயலின் : வித்துவான் திரு. கி.பத்மநாதன்
மிருதங்கம் : செல்வன் ப.விந்தன்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நன்றி

*இந்து மாமன்றம்,*
*கலாஜோதி இளைஞர் ஒன்றியம்.*
(77929)

## மரண அறிவித்தல்

### அண்ணாமலை வேலாயுதபிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியர்)

விமன்காமம் வடக்கு, தெல்லிப்பழை, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கைத் தற்காலிக வசிப்பிடமாகக் கொண்டவருமான அண்ணாமலை வேலாயுதபிள்ளை நேற்று 01-09-2000 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையபிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற லோகேஸ்வரி மற்றும் கமலாதேவி, கந்தசாமி, அருணகிரி, மணிவாசகர், பாலச்சந்திரன், பரமசிவம் ஆகியோரின் அன்புத் தந்தையும், அருமைத்துரையின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தற்காலிக வசிப்பிடத்தில் இன்று 02-09-2000 சனிக்கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கலாநிதி அ.வே.மணிவாசகர்
*பாடசாலை வீதி,*
*கோண்டாவில்மேற்கு,*
*கோண்டாவில்.*
(77942)

உங்கள் கண்களைச் சரியாகப் பரிசோதித்து
கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ள
நீங்கள் நாடவேண்டிய இடம்

## றெனி மூக்குக் கண்ணாடி அகம்

இல.540,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இல.288, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
(77933)

# செய்தித் துளிகள்

## கோரிக்கை

தும்பளை இலட்சுமணன் தோட்டம் பிள்ளையார் கோயிலுக்கு அருகில், பாவிக்க முடியாத நிலையிலிருக்கும் பொதுக் கிணற்றை உடனடியாகப் புனரமைத்துத் தருமாறு மேற்படி ஆலயத் தொண்டர் சபையின் செயலாளர் சிவத்திரு. பா. இலட்சுமணன் ஐயர், பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரனிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தென்மராட்சி மற்றும் பளைப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து இப்பகுதியில் வசித்துவரும் மக்கள் குடிநீர் இன்றி பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாகவும் அக் கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஒ-139)

## கல்லூரியில் சிக்கியுள்ள ஆவணங்கள்

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் உள்ள மாணவர்களின் பிறப்புச் சான்றிதழ்கள், பரீட்சைப் பெறுபேறுகளின் பட்டியல்கள், ஆசிரியர்களின் தஸ்தாவேஜுகள் உட்பட அனைத்து ஆவணங்களையும் மீட்பதற்குச் சம்பந்தப்பட்டோரின் அனுமதி பெற்றுத் தருமாறு தென்மராட்சிக் கல்விப் பணிப்பாளர் ஊடாகக் கல்லூரிச் சமூகத்தினர் யாழ். அரச அதிபரைக் கோரியுள்ளனர்.

(இ- 30)

## ஆலயத் திருப்பணி

சண்டிலிப்பாய் பிரதான வீதியில் உள்ள பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் புனருத்தாரண திருப்பணி வேலைகள் பல லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அடுத்த மாதம் இத்திருப்பணி வேலைகள் பூர்த்தியடையும் என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

(ஐ-135)

## தையற் பயிற்சி நெறி

மாதகல் காந்திஜி சனசமூக நிலைய மண்டபத்தில் யுவதிகளுக்கான இலவச தையற் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் அண்மையில் இப் பயிற்சி நெறியை ஆரம்பித்து வைத்தார்.

(ஐ--135)

## இணக்க சபை இயங்குகிறது

பண்டத்தரிப்பு இணக்க சபை பல வருடகால இடைவெளிக்குப்பிறகு மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது.

மக்களிடையே ஏற்படும் சிறுசிறு பிணக்குகளையும், சச்சரவுகளையும், குடும்பப் பிரச்சினைகளையும். விசாரித்துசமாதான முறையில் இணக்கப்பாட்டினை ஏற்படுத்துவதே இச் சபையின் நோக்கம் என்று சபையின் தலைவரும், பண்டத்தரிப்பு இராம அபிவிருத்திச் சங்கத் தலைவருமான ஏ. வி. துரையப்பா தெரிவித்தார்.

மாதகல், சில்லாலை, இளவாலை ஆகிய இடங்களிலிருந்தும் சிலர் தங்கள் பிரச்சினைகள் பற்றிய முறைப்பாடுகளை இச் சபைக்குச் சமர்ப்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-135)

# மறவன்புலோ விவசாயிகள் ஜனாதிபதிக்கு மகஜர்

எமது பகுதிகள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ ஷெல் மற்றும் விமானக்குண்டு வீச்சுத் தாக்குதலை நிறுத்தி நாம் எமது சொந்த வீடுகளில் குடியமரவும், விவசாய நிலங்களைப் பயன்படுத்தவும் உரிய நடவடிக்கை எடுங்கள்.

மறவன்புலோ விவசாய சம்மேளனம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடமாகாணத்தில் சாவகச்சேரி, பளைப் பிரதேச மக்கள் தமது வீடு, சொத்துக்கள் அனைத்தையும் விட்டு விட்டு உடுத்த உடுப்புடன் அகதிகளாக வந்து வடமராட்சி, வலிகாமம் பகுதிகளில் பெரும் கஷ்ட நிலையில் கடந்த பல மாதங்களாகக் கவலையுடன் இருப்பதைத் தாங்கள் அறிவீர்கள்.

எமது பிரதேசம் வயல்களும், தோட்ட நிலங்களும், தென்னை மரங்களும் நிறைந்தது. அதில் தென்மராட்சி தெற்கில் தனங்களப்பு, மறவன்புலோ பிரதேசத்தில் ஆறாயிரம் ஏக்கர் நெல்வயல் உள்ளது. கைதடியில் ஆறாயிரம் ஏக்கர் தோட்ட நிலம் உள்ளது. தென்மராட்சி கிழக்குப்பகுதி தொடக்கம் பளை வரை பெருமளவு தென்னையும், ஏனைய விவசாய நிலங்களும் உள்ளன.

அடுத்த மாதம் காலபோக நெல் உற்பத்தி ஆரம்பமாகின்றது. மழை காலமும் ஆரம்பமாகின்றது. எனவே நாம் எமது பகுதிகளில் தாமதமின்றிக் குடியேறவும், எமது இயல்பு வாழ்க்கையை தொடரவும் அனுமதிக்கும்படி தங்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

நாம் இடம்பெயர்வினாலும், சொத்துக்கள் இழப்பினாலும் இன்னலுறும்போது தேர்தலில் போட்டியிடப் பல கட்சிகளும் முன்னிற்பதும், தேர்தல் அமளியில் ஈடுபடுவதும் எமக்கு வேதனை அளிக்கின்றது.

என்று அதில் உள்ளது.

இந்த மகஜரின் பிரதிகள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் மூலமாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும், ஈ. பி. டி. பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கும், யாழ். அரச அதிபர் மற்றும் தென்மராட்சி பளை உதவி அரசாங்க அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## கோரிக்கை

கைதடி நாவற்குழியில் வசித்து வந்த திருமதி எம். பி. பூமணி இம் மானுவல் என்பவரை யாழ். செயலகத்துக்கு உடனடியாக சமூகம் தருமாறு மனித கௌரவத்துக்கான மன்றத்தின் இணைப்பாளர் கேட்டுள்ளார்.

1996 ஆம் ஆண்டு இராணுவத்தால் கைது செய்யப்பட்டு காணாமற் பானதாகக் கூறப்படும் இம்மானுவல் மரியசிலன் தொடர்பான ஆட்கொணர்வுமனுத் தாக்கல் வழக்கு சம்பந்தமாக கலந்துரையாடவே அவர் அழைக்கப்படுகின்றார்.

(க)

# காரைநகர் செல்ல வந்தோர் ஏமாற்றத்துடன் திரும்பினர்

காரைநகருக்கு தமது வீடு வாசல், காணிகளைப் பார்க்க நேற்று முன்தினம் சென்ற நூற்றுக்குமேற்பட்ட மக்கள் காரைநகருக்குள் அனுமதிக்கப்படாது பொன்னாலைச் சந்தியில் வைத்தே திருப்பி அனுப்பப்பட்டனர்.

இவர்களை அடையாளம் காண்பதற்காக அமர்த்தப்பட்டுள்ள கிராம சேவையாளர் கடமைக்கு வராததே இதற்குக்காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

காரைநகரிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் வாரத்தில் செவ்வாய், வியாழன், சனி ஆகிய மூன்று தினங்களில் மட்டும் தமது இருப்பிடங்களைப் பார்த்துவர அனுமதிக்கப்பட்டு வந்தனர்

அப்பகுதி கிராம சேவையாளர், காரை நகருக்குள் நுழையும் நுழைவாயிலான பொன்னாலைச் சந்தியில் வைத்து அவர்களை உறுதிப்படுத்தியபின்பே அவர்கள் உள் செல்ல அனுமதிக்கப்பட்டு வந்தனர்.

சம்பவதினமான நேற்று முன்தினம் கிராமசேவையாளர் அங்கு கடமைக்குச் சமூகம் அளிக்கவில்லை.

தூர இடங்களில் இருந்து பயணம் செய்து பொன்னாலைச் சந்திக்கு வந்த மக்கள் நாள் முழுவதும் காவல் இருந்தும் கிராம சேவையாளர் வராததால் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றன.

(இ-15)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், செப். 2

பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் வடமராட்சி விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:

★ பிற்பகல் 4-00மணிக்கு— இமையாணன் மத்தி வி. க. எதிர் றெஞ்சஸ் வி. க. 'ஏ' அணி.

★ மாலை 5-00 மணிக்கு— சென். சேவியர் வி. க. எதிர் டயமன்ஸ் வி. க. 'ஏ' அணி.

# கச்சாயில் ஒருவர் காயம்

கச்சாய்ப் பகுதியில் நேற்று காலை 11.00 மணியளவில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் அப்பகுதியைச் சேர்ந்த ஒருவர் படுகாயம் அடைந்தார்.

ஐயாத்துரை அப்புத்துரை (வயது 40) என்பவரே வயிற்றில் படுகாயம் அடைந்த நிலையில் மந்திகை வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கச்சாயில் இருந்து இடம் பெயர்ந்து தும்பளைப் பகுதியில் தற்காலிகமாக வசித்து வந்த இவர் ஆவணிச் சதுர்த்தியை முன்னிட்டு நேற்று கச்சாய்க்குச் சென்ற சமயம் ஷெல் வீச்சில் சிக்கி படுகாயம் அடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-9-117)

# திம்புத் தீர்மானத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்)

இரண்டுக்கும் நடுவில் நிற்கும் மக்களுக்கு சுயமரியாதையுடன் கூடிய பாதுகாப்பான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு விசுவாசத்துடன் பணியாற்றக்கூடியவர்களையே தமிழ் மக்கள் தேர்ந்தெடுக்கவேண்டும் என்றும் அவர் கூறினார்,

செய்தியாளர் மாநாட்டில் ஸ்ரீகாந்தா மேலும் தெரிவித்ததாவது:

இன்றுள்ள நிலையில் தமிழ் மக்களுக்கு விடிவு ஏற்படுமா? விமோசனம் ஏற்படுமா? என்ற ஏக்கம் காணப்படுகின்றது.

வீழ்ந்த நிலையில் உள்ள தமிழினம் மீண்டும் உயிர் பெறுமா? என்ற அங்கலாய்ப்பு மக்கள் மத்தியில் தென்படுகின்றது.

இந்தநெருக்கடியான காலத்தில் நாடாளுமன்றத் தேர்தல் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது. இந்தத் தேர்தலில் ரெலோ போட்டியிடவில்லை. பல்வேறுதுறைகளை சேர்ந்தவர்கள், சேவை மனப்பான்மையுள்ளவர்கள் ஆகியோரை உள்ளடக்கி சுயேச்சைக்குழுவாகப் போட்டியிடுகிறோம்.

நாம் நாடாளுமன்றத் தேர்தலைபுறக்கணிக்க முடியாது. அப்படிப் புறக்கணித்தால், எம்மத்தியில் இருந்து பிரதிநிதிகள் என்ற பெயரில் யாரோ சிலர் நாடாளுமன்றத்துக்கு போகத்தான்போகிறார்கள் அவர்கள் அங்கு என்ன செய்தார்கள் என்பது மக்களுக்குத்தெரியும்.

எமது இனத்தின் பிரதிநிதிகள் இனத்தின் சார்பிலே நேர்மையோடும் நெஞ்சுரத்தோடும் செயற்படக் கூடியவர்களாக இருக்க வேண்டும். அதிகாரத்துக்கு வரும் அரசுக்கு வால் பிடிப்பவர்களாகவும், கால் பிடிப்பவர்களாகவும் இருக்கக்கூடாது.

மக்களின் பிறப்புரிமைக்காகவும் அடிப்படைஉரிமைகளுக்காகவும் நாடாளுமன்றத்துக்கு உள்ளும் புறமும் அவர்கள்வாதாடவும் போராடவும் வேண்டும்.

அற்பசொற்ப சலுகைகளுக்காகவும் பதவிகளுக்காகவும் இனத்தின் ஜீவாதார உரிமைகளை விலை பேசுபவர்களை எமது பிரதிநிதிகளாக மக்கள் தெரிவு செய்யக்கூடாது- தெரிவு செய்யவும் முடியாது.

இன்றைய நிலையில் ஒரு புறத்தில் துணிச்சலுடன் கூடிய தியாகத்தை நாம் பார்க்கின்றோம். மறுபுறத்தில் சுயநலமும் சந்தர்ப்பவாதமும் பதவி வெறியும் கொண்ட அரசியல் நடவடிக்கைகளைப் பார்க்கிறோம்

இரண்டுக்கும் நடுவில் நிற்கும் மக்களுக்கு சுயமரியாதையுடன் கூடிய பாதுகாப்பான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு விசுவாசத்துடன் பணியாற்றக் கூடியவர்களையே தமிழ் மக்கள் தேர்ந்தெடுக்கவேண்டும்.

### யாழ்ப்பாணம் தலை போன்றது

தமிழினத்தின் தாயகமான வடக்கு - கிழக்கு மாநிலத்துக்கு யாழ்ப்பாணம் தலை போன்றது. இன்று யாழ்ப்பாணம் எதை நினைக்கிறதோ அதையே நாளை முழுத் தமிழர் தாயகமும் ஏற்றுக் கொள்கின்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து எத்தகைய முடிவு வெளிவரப் போகின்றது என்பதனை வெளிநாட்டில் உள்ள தமிழ் மக்கள் மட்டுமல்ல இனப் பிரச்சினைத் தீர்வில் அக்கறை கொண்டுள்ள வெளிநாட்டவர்களும் எதிர்பார்த்து நிற்கின்றனர்.

யுத்தத்தை ஒரு புறம் நடத்திக் கொண்டு அரைகுறையான அரசமைப்புத் திட்டம் ஒன்றைத் தமிழ் இனத்தின் மீது திணித்துவிட்டு இனப் பிரச்சினை தீர்ந்து விட்டது என்று உலக நாடுகளை ஏமாற்றுவதற்கு சந்திரிகா அரசு முயற்சித்து வருகின்றது.

### தீர்வுத் திட்டத்தில் எதுவுமே இல்லை

சந்திரிகா அரசு தீர்வுத் திட்டத்தில் தமிழ் இனத்தின் அடிப்படைக் கோரிக்கைகள் எவையுமே உள்ளடக்கப்படவில்லை.

தனிநாடு கோரி 1977 இல் வாக்களித்த தமிழினத்துக்கு வடக்கு - கிழக்கு இணைந்த ஒரு மாநிலத்தைக் கூடக் கொடுப்பதற்கு சந்திரிகா அரசு தயாராக இல்லை.

இருந்தும் கூட இந்தத் தீர்வுத் திட்டத்தை சில தமிழ்க்கட்சிகள் நேரடியாக ஆதரித்தன. மற்றுமொரு கட்சி ஆதரிக்கமுடியாமலும் எதிர்க்க முடியாமலும் மௌனம் சாதித்தது.

ரெலோ இயக்கத்தின் ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினர் மாத்திரமே தீர்வுத் திட்டத்தை எதிர்த்து தமிழினத்தின் சார்பில் தனியாக நின்று குரல் எழுப்பினார். இந்த வேதனைக்குரிய நிலைமை இனி மேலும் தொடரக்கூடாது. எந்த நிலையிலும் எமது இனத்தை விட்டுக் கொடுக்காதவர்களை வேட்பாளராக நிறுத்தி சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடுகின்றோம்.

### அரைகுறையான அரசியல் தீர்வுக்கு ஆதரவு இல்லை

அரைகுறையான அரசியல் தீர்வை நாம் ஒருபோதும் ஆதரிக்கமாட்டோம். தமிழினத்தைப் பாதிக்கும் அவசரகாலச்சட்டம் உட்பட இன ஒடுக்குமுறைச் சட்டங்கள் அனைத்தையும் நாம் எதிர்ப்போம்.

போர் தொடர்பான நிதி வழங்கும் பாதுகாப்பு அமைச்சுக்கான நிதிச்சட்டங்கள் உட்பட வரவு - செலவுத் திட்டத்தை ஒட்டுமொத்தமாக எதிர்ப்போம். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுகின்ற வரை எந்த அரசையும் ஆதரிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை.

அரசியல் அநாதைகளாக நிற்கும் எமது மக்களின் இதய வேட்கையையும உணர்வலைகளையும் நாடாளுமன்றத்தில் எதிரொலிப்போம். அந்தப் பணியைச் செய்ய முடியவில்லையானால் நாடாளுமன்றத்தில் இருப்பதில் அர்த்தமில்லை.

எமது இனம் இதுவரை சந்தித்த இழப்புக்களுக்கும் துன்பங்களுக்கும் எமது இளையதலைமுறை செய்து வந்திருக்கும் தியாகங்களுக்கும் ஈடான அரசியல் தீர்வை நாடி நாம் உழைக்கிறோம்.

ஜனநாயக நீரோட்டத்தில் நின்று கொண்டே ஆயுதம் தாங்கியவர்களிடமும் அரசியல் பென்சன்காரர்களிடமும் எமது இனத்தின் எதிர்காலத்தை ஒப்படைத்துவிட்டு தமிழ் மக்கள் மௌனமாக இருக்கக்கூடாது. படித்தவர்கள், சமூகசேவையாளர்கள், மாணவ சமூகத்தினர் ஒன்றிணைந்து இந்தத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டும்.

எனவேதான் பலதரப்பட்டவர்களையும் பிரதிநிதித்துவப் படுத்தக்கூடிய பரந்து பட்ட அணியை திம்புத் தீர்மானங்களின் அடிப்படையில் சுயேச்சைக் குழுவாக நிறுத்தியுள்ளோம்.

தமிழர் தாயகக்கோட்பாட்டையும் சுயநிர்ணய உரிமையையும் வலியுறுத்தும் திம்புத் தீர்மான அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு அமைய வேண்டும் என்றே மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இதனை வலியுறுத்தியே செயற்படுவோம்.

இருளைச் சபித்துக் கொண்டிருப்பதை விட ஒரு மெழுகு வர்த்தியை ஏற்றி வைப்பது மேலானதாகும். இதைத் தான் மக்களுக்குச் சொல்ல விரும்புகிறோம் - என்றார்.

இந்தக் குழுவில் போட்டியிட விருக்கும் வல்வை நகர சபைத் தலைவரும், ரெலோ செயலாளருமாகிய எம். கே. சிவாஜிலிங்கம் பேசுகையில்—

விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தியே தீர்வு காண வேண்டும் என்று சிலர் கூறி வருகின்றனர். புலிகளைப் பலவீனப்படுத்தியோ, பலத்துடன் வைத்தோ தீர்வு காண வேண்டும் என்பது அல்ல பிரச்சினை.

புலிகள் இன்றி எந்தத் தீர்வையும் காணமுடியாது என்பதே யதார்த்தமாகும். அவர்களின் பங்களிப்பைப் பெற்றே எந்தத்தீர்வையும் கொண்டு வர முடியும் — என்றார்.

(இ-3)

## யாழ். கல்வி வலய

# பாடசாலைகளுக்கு இடையிலான தமிழ்மொழித் தினப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செப். 2

யாழ்ப்பாணக் கல்விவலயப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்மொழித் தின இறுதிப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

முதல் மூன்று இடங்களைப் பெற்றோரின் பெயர் விவரம் பிரிவு ரீதியாக முறையே வருமாறு:-

### வாசிப்பு

பிரிவு:- i

வை. தர்மஜா (புனிதஜோண்பொஸ்கோ), ந. நிரேஜிகா (கோப்பாய் நாவலர்), கு. கோபிகா (இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை).

பிரிவு- ii

இ. பெற்சிகா குண்யா (சுண்டுக்குளி மகளிர்), செ. சயந்தினி (யாழ். இந்து மகளிர்), ச. தர்சினி (அச்சுவேலி ம. வி).

### கதை கூறல்

பிரிவு:- i

ச. ஷாமளை (இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), க. கிருத்திகா (நீர்வேலி சீ.சி.ரீ.எம்.எஸ்), த. டனிஷிம்சானத் (புனித ஜோண்பொஸ்கோ)

பிரிவு:- ii

டோ. கஜீப் (கொழும்புத்துறை புனித ஜோசப்), நோ. நிஷானி (இந்து மகளிர் கல்லூரி), ச. மயூரி (நல்லூர் இந்து தமிழ்ப் பெண்கள் பாடசாலை).

### எழுத்து ஆக்கம்

பிரிவு:- i

மு. அறிவரசி (இந்து ஆரம்பப் பாடசாலை), ச. திவாகர் (சென். ஜோண்ஸ்), க. நிரேஸ்குமார் (கோப்பாய் சரவணபவானந்தா).

### பேச்சு

பிரிவு:- i

க. ஜோன்நிமல்ராஜ் (சென். ஜோணஸ்), ப. உபேந்திரா (புனித ஜோண் பொஸ்கோ), அ. அபர்ணா (இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை).

பிரிவு:- ii

எ. கிறிஸ்ரினா இஷானி (சுண்டுக்குளி மகளிர்), க. கலையரசி (புனித திரேசாள் மகளிர் வித்.) ப. நிரோசன் (யாழ். இந்து)

பிரிவு-iii:-

ம. மயூரா (வேம்படி மகளிர்). க. தர்ஸனன் (யாழ், இந்து), ஸ்ரீ. தயபரம் (ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்).

பிரிவு- iV:-

வே. சுதாகரன் (யாழ் இந்து), சி. அபிராமி (வேம்படி மகளிர்), ம. சுஜந்தா நவந்தினி (திருக்குடும்பக் கன்னியர் மடம்).

பிரிவு- V:-

மோ. தர்சினி (சுண்டுக்குளி மகளிர்), இ சர்வேஸ்வரா (யாழ். இந்து), ச குலேந்திரா (சென் ஜோண்ஸ்.

### பாவோதல்

பிரிவு - i:-

ஞ. சங்கீதா (சுண்டுக்குளி மகளிர்), க. பாலமுரளி (சென். ஜோண்ஸ்) ர. ப்ருகஸ்வினி (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை).

பிரிவு- ii:- ச. சாருகன் (சென். ஜோண்ஸ்), யோ. தாரணி (உருபிராய் இந்து) மெ. லதாங்கி (வேம்படி மகளிர்).

பிரிவு-iii:-

தி. வாணி (வேம்படி மகளிர்), து. கார்த்திகாஜினி (அச்சுவேலி ம.வி), ம. சுபாஜினி (பெரியபுலம் ம வி').

பிரிவு- iV:-

த. தனசொரூபி (கொக்குவில் இந்து), இ. தக்சி (வேம்படி மகளிர்]. இ. ஜெயசிக்காரூபனி (சுண்டுக்குளி மகளிர்].

பிரிவு-V:-

அ. டினாலக்ஷன் சுண்டுக்குளி மகளிர்), செ. ஊர்மிளா (கொக்குவில் இந்து), பா. சுமலதா (பெரியபுலம் ம. வி.

### கட்டுரை, கடிதம் வரைதல்

பிரிவு-ii:-

இ. சுபா (சுண்டுக்குளி மகளிர்), த. பால்ரூபன் (யாழ். இந்து), இ துளசி (வேம்படி மகளிர்),

பிரிவு iii:-

ச. பிரியங்கரி (வேம்படி மகளிர்), ந. பிரபு (யாழ். இந்து), உ. யசோதா (கோண்டாவில் இந்து ம. வி).

பிரிவு iv:-

ச. சத்தியரூபன் (சென். ஜோண்ஸ்), கு. கம்சா (வேம்படி மகளிர்), தெ. மீரா (உரும்பிராய் சைவத்தமிழ்).

### இசையும் அசைவும்

பிரிவு I:-

தே. விதுஷன் (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), அ. பெக்லின்மேர் (புனித ஜோண்பொஸ்கோ), ர. சுரசஹந்தியன் (சென். ஜோண்ஸ்).

பிரிவு i:-

### நடனம் - தனி

கு. மரியஸ்வெல்மலா (திருக்குடும்பகன்னியர்மடம்), மகளிர் ச. லாவண்யா (இந்து ஆரம்பப் பாடசாலை), செ. நிவேத்திகா (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை).

பிரிவு ii:-

கு. மயூரி (வேம்படி மகளிர்), சோ. ஸ்ரீபிரதீபா (யாழ் இந்து மகளிர்), சி. காயி (சுண்டுக்குளி மகளிர்).

பிரிவு iii:-

பொ. சுதாஜினி (சுண்டுக்குளி மகளிர்), ப. விஜயதீபா (கொக்குவில் இந்து), கு. காயத்திரி (வேம்படி மகளிர்).

பிரிவு iv:-

நா, பிறேமிலா (சுண்டுக்குளி மகளிர்), யோ. சர்மிதா (இந்து மகளிர்), க. நிவேதினி (வேம்படி மகளிர்).

### இசை - தனி

பிரிவு-II:-

லோ. சயானி (சுண்டுக்குளி மகளிர்), வ. தவரூபன் (அச்செழு சைவப்பிரகாச வித்.), இ. எவிராம் பிரசாந் (மத்திய கல்லூரி).

பிரிவு-III:-

ர ஸ்வஸ்திகா (வேம்படி மகளிர்), பா. கஸ்தூரி (சுண்டுக்குளி மகளிர்) ஸ்ரீ தாரணி (இந்து மகளிர்).

பிரிவு-IV-:

ர. கஜானன் (யாழ். இந்து), கு. சிந்துஜா (கொக்குவில் இந்து), கு. வேணி (வேம்படி மகளிர்).

பிரிவு V-:-

ப. சியாம் கிருஸ்ணா (யாழ். இந்து), ம. சோபனா (கிறிஸ்தவ கல்லூரி), ஜீ. யாழினி ஸ்ரான்லிக் கல்லூரி).

### கவிதை ஆக்கம்

பிரிவு-IV-:

இ லஜிதா (வாதரவத்தை விக்கினேஸ்வரா), ஜெ. நிரோஜினி (சோமாஸ்கந்தா), ர. சனாதினி (இந்து மகளிர்).

பிரிவு - V:-

இ. ஜெனிதா (கிறிஸ்தவ கல்லூரி), ச. சேந்தன் (சென். ஜோண்ஸ்), சு. ஜக்குரிநந்தா (புனித திரேசாள்).

### கட்டுரை வரைதல்

பிரிவு - V:-

கு. லக்ஸ்மணன் (ஸ்ரான்லி), உ. சுரேஸ்கரன் (கிறிஸ்தவ கல்லூரி), செ. சுலக்ஸனி (கொக்குவில்இந்து).

### சிறுகதை ஆக்கம்

பிரிவு - IV:-

சி. சாளினி (சுண்டுக்குளி மகளிர்), சி. கௌரி (அரியாலை ஸ்ரீ பார்வதி), சி. மயூரா (அத்தியார் இந்து).

பிரிவு - V:-

தி. கோபிநாத் (யாழ். இந்து), வே. சுபாஜினி (அத்தியார் இந்து), ச. தையல்நாயகி (வைத்தீஸ்வரா).

திறந்தபோட்டிகளும் அவற்றில்முதல்மூன்று இடங்களைப் பெற்றோரின் விவரமும் வருமாறு:-

### குறுநாடக ஆக்கம்

எஸ். ஷிராணி (சுண்டுக்குளி மகளிர்), யோ. ஐங்கரன் (ஸ்ரான்லி, .வி ஜெயக்குமார் (முத்துத்தம்பி ம.வி.).

### இசை - குழு

(சென். பற்றிக்ஸ், கொக்குவில் இந்து, கிறிஸ்தவ கல்லூரி).

### நடனம் - குழு

(வேம்படி மகளிர், பெரியபுலம் ம.வி).

### இலக்கிய நாடகம்

(சென். ஜேம்ஸ் மகளிர், கொட்டடி நமசிவாயம், பெரியபுலம் ம.வி).

### வில்லுப்பாட்டு

(பெரியபுலம் ம.வி, கொட்டடி நமசிவாயம், அச்செழு சைவ பிரகாசா).

### விவாதம்

(யாழ் இந்து மத்திய கல்லூரி, சென். ஜோண்ஸ்).

### தமிழறிவு வினாவிடை

(வேம்படி மகளிர், மத்திய கல்லூரி, ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்.)

### சிறுவர் நாடகம்

(யாழ். இந்து களிர் ஆரம்பப் பாடசாலை, கொக்குவில் நாமகள்).

### நாட்டுக்கூத்து

(யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை. (இ-7)

## கோப்பாய், அச்சுவேலி

# ஆஸ்பத்திரிகளில் நோயாளர் வரவு தினமும் அதிகரிப்பு

வலி. கிழக்குப் பிரதேசத்தில் உள்ள கோப்பாய், அச்சுவேலி ஆஸ்பத்திரிகளில் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சைக்கு வரும் நோயாளர்கள் எண்ணிக்கை தினமும் அதிகரித்து வருகின்றது.

இந்த இரு ஆஸ்பத்திரிகளிலும் வெளி நோயாளர் பிரிவுகளில் நாளாந்தம் 300 க்கும் மேற்பட்ட வெளி நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஆனால் இரு ஆஸ்பத்திரிகளிலும் வைத்தியர்கள் பற்றாக்குறை இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

தற்போது பரவி வரும் காய்ச்சலினாலும், வயிற்றோட்டத்தினாலுமே அதிக எண்ணிக்கையில் நோயாளர் சிகிச்சைக்கு வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-180)

# 'குமுதினி' மீண்டும் சேவையில்

நெடுந்திவுக்கான கடல்வழிப் போக்குவரத்துச் சேவையில் அரச படகான 'குமுதினி' மீண்டும்இணைந்து கொண்டது.

தினமும் காலை 10 மணிக்கு குறிகாட்டுவானில் இருந்தும் பிற்பகல் 1.30 மணிக்கு நெடுந்தீவில் இருந்தும் பயணிகளுடன் புறப்படும்.

'குமுதினி' படகு கடந்த ஆறு மாதங்களாகப் பழுதடைந்து இருந்தது தெரிந்ததே.

முன்னர் ஊர்காவற்றுறையில் இருந்து நெடுந்தீவுக்குச் சென்று திரும்பிய மேற்படி படகு ஊர்காவற்றுறை துறைமுகம் பயணிகள் போக்குவரத்திற்குத் தடை செய்யப்பட்டதைத் தொடர்ந்து பாதுகாப்புக் காரணமாக தற்சமயம் நயினாதீவில் நங்கூரமிட்டு நிறுத்தப்படுகின்றது (ஐ-111)


## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 26 — 08 — 1947

உதிர்வு 25 — 08 — 1990

### அமரர் ஏரம்பு துரைராசா

(கிராம சேவையாளர், மண்கும்பான்)

ஆண்டு பத்து சென்றாலும் அன்பு மகன்
தன்னைத் தேடி வருவாரென்று அம்மா தினம்
வாசலிலே காக்கின்றாவோ? தேன் கூடு
கலைந்ததண்ணா! எங்களுக்குத் தென்றல்
புயலானதண்ணா! என் கண்ணில்
நீர்வழிந்தால் உங்கள் இதயம் துடிக்குமண்ணா!
அண்ணா நீங்கள் இல்லாது எம் வீடு சிரிக்காது.


உங்கள் பிரிவால் துயருறும்:

தாய், தம்பி, அக்கா,
தங்கைமார், மைத்துனர், மருமக்கள்.

4 ஆம் வட்டாரம்,
மண்கும்பான்.

(77880)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி சசீந்திரன் அம்பிகாவதி

(பொன்னம்மா)

மலர்வு 21 — 02 — 1962

உதிர்வு 03 — 08 — 2000

மாதம் ஒன்று ஆனதம்மா
மறக்கவில்லை உங்கள் முகம்
திங்கள் ஒன்று சென்றுவிட்டதம்மா
தீரவில்லை எம் துயரம்!
பெற்ற என்னைத் தவிக்கவிட்டு
பிரிந்து நீங்கள் சென்றதேனோ?
மலர்ந்த உங்கள் முகத்தைக் காண
மனம் துடிக்கும் அண்ணன் அக்காமார் கூட
அயலவர்கள் பேரப்பிள்ளைகளும்
வருந்தி இங்கு அழுகிறார்கள்.
நெஞ்சைவிட்டு நீங்கவில்லை
நிதமும் உங்கள் நினைவலைகள்.

இன்று (2-9-2000) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தாய்: செல்லம்மா,
மகள்: ஜெனிபா,
அண்ணன்: சந்திரன்,
அக்காமார், உறவினர்.

உரும்பராய், மேற்கு,
உரும்பராய்.

(77780)

### சர்ச்சைக்குரிய எல்லைப் பகுதியில்

# இன்னமும் சில மலைச் சிகரங்கள் பாகிஸ்தானின் பிடியில் உள்ளன?

புதுடில்லி,செப்ரெம்பர்2

**இந்திய - பாகிஸ்தான் எல்லையில் சர்ச்சைக்குரிய பகுதியில் இந்திய நிலப்பகுதிக்குள் அமைந்துள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த சில மலைச் சிகரங்கள் இன்னமும் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் இருப்பதாக எதிர்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறியிருப்பது இந்தியப் பாதுகாப்புத் தரப்பினர் இடையே பெரும் சர்ச்சையை உருவாக்கியுள்ளது.**

கடந்த ஆண்டு கார்கில் பகுதியில் இந்திய - பாகிஸ்தான் படையினருக்கிடையே சண்டை இடம்பெற்ற பகுதியில் 53-53 என்னும் கேந்தர முக்கியத்துவம் வாய்ந்த மலைச் சிகரம் பாகிஸ்தான் படைகளின் கட்டுப்பாட்டிலேயே இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் ராம்குமார் ஆனந்தா தகவல் வெளியிட்டிருக்கிறார்.

அவரது இந்தக் கூற்று இந்தியப் பாதுகாப்புத் தரப்பினரிடையே சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. கார்கில் யுத்தத்தின்போது மேலும் ஐந்து குன்றுகள் பாகிஸ்தான் வசமாகிவிட்டன -

53-53 மலை உச்சி கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தது. காஷ்மீரின் கோடைகாலத் தலைநகரமான ஸ்ரீநகரை பாகிஸ்தான் எல்லைப் பகுதியுடன் இணைக்கின்ற பிரதான நெடுஞ்சாலையையும் இந்த உச்சியிலிருந்து பாகிஸ்தான் ராணுவத்தால் தெளிவாகப் பார்க்க முடியும்.

கார்கில் யுத்தத்தின்போது இராணுவ குளறுபடிகள் நடைபெற்றுள்ளன என்று ராம்குமார் ஆனந்தா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இந்தியப் பாதுகாப்புப் பிரிவினர் நாட்டைக் காக்கும் பொறுப்பிலிருந்து தவறிவிட்டனர் என பல தரப்பிலும் குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. அத்துடன் கார்கில் பகுதியிலிருந்து ஊடுருவல்காரர்கள் விரட்டியடிக்கப்பட்டுவிட்டார்களா என்ற சந்தேகமும் எழுந்துள்ளதாக அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

நாடாளுமன்ற உறுப்பினர் வெளியிட்டுள்ள இந்தத் தகவல் குறித்து இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் மாலிக்கிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பி உள்ளனர்.

"இந்தப் பிரச்சினை இப்போது அரசியல் ஆதிக்கத்துக்கு உட்பட்டுவிட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் வெளியிட்ட தகவலை ஆராய்ந்து வருகிறோம். சில அரசியல் முடிவுகளுக்காகக் காத்திருக்கிறோம்" என்று அவர் கூறியுள்ளார்.

"இந்தியாவுக்கு எதிரான சவால்கள் வெளிநாடுகளில் இருந்து மட்டுமன்றி உள்நாட்டில் இடம்பெறும் கலவரங்களாலும் ஏற்படுகின்றன" என்றும் ஜெனரல் மாலிக் தெரிவித்தார்.

இதற்கிடையில் - கார்கில் பகுதியில் முக்கியத்துவம் வாய்ந்த சிகரங்கள் பாகிஸ்தான் வசம் இருப்பதாக வெளியான தகவலை பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சு மறுத்துள்ளது. (க)



கென்யாவில் 36 வருடங்களாக மத சேவை புரிந்து வந்த அமெரிக்க மதகுரு ஜோன் ஜெய்ஸர் (வயது67) கடந்த வாரம் தலையில் சுடப்பட்டு உயிரிழந்தார். அவரது இறுதிச்சடங்கில் ஆயிரக்கணக்கான பொதுமக்களும் மனித உரிமை ஆர்வலர்களும் கலந்து கொண்டனர். இறுதி ஆராதனையின்போது எடுக்கப்பட்ட படம். (க)

## எஜமானின் சடலத்தை பாதுகாத்த பூனைகள்!

### பொலீஸாருடன் 2 மணி நேரம் சண்டை

கெய்ரோ,செப்.2

இறந்துபோன தமது எஜமானின் உடலை பொலீஸார் எடுத்துச்செல்ல விடாமல் அவரது 8 வளர்ப்புப் பூனைகள் பொலீஸாருடன் இரண்டு மணி நேரம் சண்டையிட்ட சம்பவம் ஒன்று எகிப்தில் நடைபெற்றுள்ளது.

கெய்ரோவின் வடக்கில் வசித்து வந்த பஹ்ரக் முஸ்தபா என்பவர் இறந்து விட்டார். அரவரது வீட்டுக்கு பொலீஸார் சென்ற போது அவர் வளர்த்த எட்டுப் பூனைகளும் சடலத்தை நெருங்க அனுமதிக்கவில்லை. அவை தமது எஜமானின் மெய்ப்பாதுகாவலர் போல் செயற்பட்டன. இரு தரப்பினருக்கும் இடையில் இரண்டு மணி நேரம் போராட்டம் நடைபெற்ற பின் பூனைகளை வேறு ஓர் அறையில் அடைத்து விட்டு பொலீஸார் சடலத்தை மீட்டுச் சென்றனர்.

இறந்து போன முஸ்தபா பூனைகளுடன் மிகவும் அன்பாக நடந்து கொண்டதாகவும் அவர் வளர்த்த பூனை இறந்தால் ஒரு வார காலம் துக்கம் அனுஷ்டிப்பார் எனவும் அயலவர்கள் கூறியுள்ளனர். (க)

### பெரும் எரிமலை வெடித்துள்ள

## மியாகிஜிமா தீவு மக்களை வெளியேற அரசு பணிப்பு!

ரோக்கியோ,செப்.2

ஜப்பானில் மியாகிஜிமா தீவில் உள்ள அனைத்து மக்களையும் அங்கிருந்து வெளியேறுமாறு அரசு உத்தரவிட்டுள்ளது.

தலைநகர் ரோக்கியோவுக்கு 150 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள மியாகிஜிமா தீவின் 'ஓயாமா' எரிமலை தீக்குழம்பைக் கக்கத்தொடங்கியுள்ளது. இதனால் அப்பிரதேசத்தில் பாதிப்புகள் ஏற்படலாம் என்ற அச்சத்தின் காரணமாகவே அரசு இந்த உத்தரவை உடனடியாகப் பிறப்பித்தது.

அரசின் உத்தரவைத் தொடர்ந்து இதுவரை இரண்டு ஆயிரம் பேர் அத்தீவில் இருந்து வெளியேறி தலைநகருக்கு வந்து சேர்ந்துள்ளனர். ஏற்கனவே அப்பிரதேசத்திலிருந்து ஏற்கனவே 1400 பேர் வேறு இடங்களுக்கு வெளியேறியுள்ளனர். 17 வருடங்களுக்குப் பின் இந்த எரிமலை மீண்டும் குமுறத் தொடங்கியுள்ளது. (க)



பிலிப்பைன்ஸ் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு ஜோலோ தீவில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் அமெரிக்கப் பிரஜையை படத்தில் காணலாம். முன்னர் கடத்திச் செல்லப்பட்ட ஆறுபேர் விடுவிக்கப்பட்ட அன்று இந்த அமெரிக்கர் கடத்திச் செல்லப்பட்டார். (க)

## தமிழ் நாட்டில் எண்மருக்கு மரணதண்டனை

தமிழ்நாட்டில், இரண்டு கொலை வழக்குகள் தொடர்பாக ஒரே நாளில் எட்டுப்பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் கோ.ஆதனூர் கிராமத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த பெண் ஒருவரை காதலிப்பதாகக் கூறிய இளைஞர் ஒருவர் தனது நண்பர்கள் நால்வருடன் சேர்ந்து அப்பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி கொலை செய்தனர் என்ற குற்றத்தின் பேரில் கடலூர் நீதிமன்றம் இந்த ஐந்து பேருக்கும் - மரணதண்டனை விதித்தது.

ஈரோடு மாவட்டத்தில் குன்னூர் அருகில் சாரதி ஒருவரைக் கொலை செய்த சந்தன மரக் கடத்தல்காரர்கள் மூவருக்கும் வேறு ஒரு வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (க-8)

## வீரப்பனின் சகாக்களின் விடுதலை ஒத்திவைப்பு

பெங்களூர்,செப்.2

கன்னட நடிகர் ராஜ்குமாரையும் மேலும் மூவரையும் விடுவிப்பதற்காக கர்நாடக அரசு விடுதலை செய்ய இணங்கியுள்ள வீரப்பனின் சகாக்கள் 30 பேரையும் விடுதலை செய்வதை உச்சநீதிமன்றம் காலவரையின்றி ஒத்திவைத்துள்ளது.

வீரப்பனை பிடிக்கக் காட்டுக்குச் சென்ற காவல்துறை அதிரடிப் படையின் தலைமை அதிகாரி கலிபாஸ்கர் கொலை செய்யப்பட்டது தொடர்பான வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட இந்த முப்பது பேரையும் விடுதலை செய்யும்படி விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை நேற்று விசாரணைக்கு எடுத்த நீதிபதி எஸ்.சி. பருஷா தலைமையிலான மூன்று நீதிபதிகள் குழு இந்த நிறுத்தி வைப்பு உத்தரவைப் பிறப்பித்தது. (க)

## மேற்கு வங்கத்தில் காங்கிரஸ் பிளவு?

கல்கத்தா,செப்.2

மேற்கு வங்க மாநிலத்தில் காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த கலிகான் சௌத்ரி மாற்றப்பட்டுள்ளார். இதனால் அங்கு காங்கிரஸ் கட்சி பிளவுபடும் நிலை உருவாகியுள்ளது.

மேற்கு வங்கத்தில் காங்கிரஸ் கட்சித் தலைவரான கலிகான் சௌத்ரி மாற்றப்பட்டு புதிய தலைவராக பிரணாப் முகர்ஜியை கட்சித் தலைவர் திருமதி சோனியா காந்தி நியமித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து கல்கத்தாவில் இடம்பெற்ற காங்கிரஸ் கட்சியின் ஆலோசனைக் கூட்டத்தில் 43 காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களே கலந்து கொண்டனர். பதினைந்து பேர் வெளிநடப்புச் செய்தனர்.

சோனியா காந்தியின் இந்தத் திடீர் நடவடிக்கையால் அதிருப்தி அடைந்துள்ள கலிகான் சௌத்ரியும் பதினைந்து சட்டமன்ற உறுப்பினர்களும் செல்வி மம்தா பனர்ஜி தலைமையிலான திரிணமுல் காங்கிரஸில் இணையக்கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-8)

## சிறுவனின் உயிரை காத்த டொல்பின்!

ரோம்,செப்.2

கடலில் வீழ்ந்து உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த சிறுவன் ஒருவனை டொல்பின் மீன் காப்பாற்றியுள்ளது.

இச்சம்பவம் இத்தாலிய நகரங்களில் ஒன்றான மேன்பிரெடோனியா நகரின் அட்றியாட்டிக் கடலில் இடம்பெற்றது.

இந்தக் கடலில் பயணம்செய்த படகில் இருந்து 14 வயதுச் சிறுவன் தவறி தண்ணீருக்குள் வீழ்ந்து விட்டான். நீச்சல் தெரியாமல் தத்தளித்த அந்தச் சிறுவனை டொல்பின் மீன் ஒன்று தள்ளிச் சென்று படகின் அருகில் விட்டது. சிறுவன் படகில் ஏறி உயிர் தப்பிவிட்டான்.

இது பற்றி அந்தச் சிறுவன் கூறுகையில் "என்னைத் தள்ளுவது டொல்பின் மீன் என்று தெரிந்தவுடன் அதை நான் கட்டிப்பிடித்துக் கொண்டேன். அது என்னைப் படகின் அருகில் விட்டுவிட்டது" என மகிழ்ச்சியுடன் கூறினான்.

பிலிப்போ என்ற அந்த டொல்பின் மீன் பல ஆண்டுகளாக அக்கடற் பகுதியில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (க)

## வட- தென் கொரியாக்களின் அமைதிப்பேச்சு நீடிப்பு!

வாஷிங்ரன்,செப்.2

வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையிலான முழு அளவிலான அமைதிப் பேச்சுக்கள் வியாங் கொங் நகரில் கடந்த 30 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றன.

இரு நாட்டு அரசியல் நிபுணர்களும் கலந்து கொண்டுள்ள இந்தப் பேச்சுக்களில் நாட்டில் பதற்றத்தைத் தணித்தல் மற்றும் இராணுவத் தகவல்கள் பரிமாற்றம், எல்லைக்கு அப்பால் ரயில்வே இணைப்பில் ஒத்துழைப்பு ஆகியவற்றுக்கான செயல் திட்டங்கள் குறித்து ஆராயப்பட்டுள்ளன.

இரு நாடுகளும் பரஸ்பரம் நம்பிக்கையை வளர்க்க வேண்டியதன் அவசியத்தை பேச்சுக்களில் கலந்து கொண்டுள்ள தென்கொரிய தூதுக் குழுவின் தலைவரும், இரு நாடுகளின் இணைப்புத்துறை அமைச்சருமான பார்க் ஜேக்யு, வலியுறுத்தியுள்ளார். (க-8)

### இருவர் கைது

ஜம்மு,செப்.2

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் 35 சீக்கியர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக லக்கர்சி சௌய்பா அமைப்பைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காஷ்மீர் இரகசியப் புலனாய்வுத் துறையினர், முஹமது சுகாலி மாலிக் அலி, சையது உசைன் அஸித்ஷகாத் ஆகிய இரு உறுப்பினர்களையுமே கைது செய்தனர்.

அமெரிக்க அதிபர் பில்கிளின்ரன் இந்தியாவுக்கு வந்தபோது காஷ்மீரின் அனந்தநாத் மாவட்டத்தில் 35 சீக்கியர்கள் கொல்லப்பட்டமை தெரிந்ததே. (க)

### உலக அரங்கில்

### விமான விபத்து தவிர்ப்பு

அமெரிக்காவின் லொஸ்எஞ்சல்ஸ் நகரில் இருந்து புறப்பட்ட நெதர்லாந்துக்குச் சொந்தமான கே.எல்.எம்.'றோயல்' 747 ரக 'போயிங்' விமானம் விபத்தில் இருந்து தெய்வாதீனமாகத் தப்பியது.

விமானம் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட சிறிது நேரத்தில் அதன் எஞ்சின் பாகம் ஒன்று கழன்று கீழே விழுந்தது. உடனடியாக அது கண்டுபிடிக்கப்பட்டதும் விமானத்தின் எரிபொருள்கள் அனைத்தும் வெளியேற்றப்பட்டன. விமானம் மீண்டும் லொஸ்ஏஞ்சல்ஸ் நகருக்கு கொண்டு செல்லப்பட்டது. (க)

## மத்திய கிழக்கு பேச்சை தொடர அரபாத்துக்கு இஸ்ரேல் அழைப்பு

ஜெருசலேம்,செப்.2

மத்திய கிழக்கின் வரலாற்றையும் அப்பிராந்தியத்தில் வாழும் சிறுவர்களினதும் எதிர்கால நலனையும் கருத்திற்கொண்டு ஒரு நியாயமான - சமாதான உடன்படிக்கையை ஏற்படுத்த பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத் முன்வர வேண்டும் என இஸ்ரேல் அழைப்பு விடுத்துள்ளது.

ஐ.நா.சமாதான உச்சி மாநாடு நியூயோர்க்கில் நடைபெறவுள்ள வேளையில் இஸ்ரேல் இந்த அழைப்பை விடுத்திருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

ஐ.நா.சமாதான உச்சி மாநாட்டின் போது அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன், இஸ்ரேல் பிரதமர் எகுட்பராக், பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத் ஆகியோர் மத்திய கிழக்கு சமாதானம் குறித்து முத்தரப்பு பேச்சுக்களில் ஈடுபடவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் நூற்று அறுபது நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (க)

## இடமாற்றம்

நாச்சிமார் கோயிலடி, அரசடிச் சந்தியில் இயங்கிவந்த

* ரட்ணாஸ் வைண்டிங் (யாழ்ப்பாணம்)

* சிறிரட்ணாஸ் வைண்டிங் (சுன்னாகம்)

ஆகிய நிறுவனங்களின் இணைநிறுவனமாகிய

* ரஜீவன் மோட்டோர்ஸ் & எலக்ரிக்கல்ஸ்

நிறுவனமானது இதுவரை இயங்கி வந்த கட்டடத்திற்கு முன்பாக நேற்று 01-09-2000 முதல் இயங்கி வருகின்றது என்பதனை எமது இணைபிரியா வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் பெருமகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

உங்கள் தேவையே! எங்கள் மகத்தான சேவை! (77905)



## ஒன்று கூடலும் நாடகப் பயிலகமும்

☞ கலைஞர்களுக்கான **செப்ரெம்பர் மாத ஒன்று கூடல் 03-09-2000 ஞாயிறு காலை 10.30 மணிக்கு 'கலைத்தூது' மண்டபத்தில் நடைபெறும்.**

☞ **நாடகப் பயிலக மாணவர்களுக்கான வகுப்புக்கள் 03-09-2000 ஞாயிறு பிற்பகல் 4.00 மணிக்கு மீண்டும் ஆரம்பமாகின்றது.**

மாணவர்களைத் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**ஜே. யோண்சன் ராஜ்குமார்**
பொதுச் செயலாளர்

**திருமறைக் கலாமன்றம்**
தொலைபேசி: 2393 (C/12784)



## உடன் விற்பனைக்கு

**CANON NP 120 PHOTO COPY MACHINE** (கனொன் NP 120 போட்டோ பிரதி இயந்திரங்கள்), **LAMINATING MACHINE** (அடையாள அட்டை கவரிடும் இயந்திரம்), **YAMAHA GENERATOR** (யமஹா ஜெனரேற்றர்) மற்றும் போட்டோ பிரதி இயந்திரத்திற்குரிய உதிரிப்பாகங்கள், ரோணர், றம், அடையாள அட்டை கவரிடுவதற்குரிய கவர்கள் மற்றும் பெரிய, சிறிய கவர்கள் என்பன உடன் மலிவு விற்பனைக்கு உண்டு.

*தொடர்பு:*
**87, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**
(நீராவியடிப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில்) (77887)



## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



**தோற்றம்** 05 - 11 - 1915 **மறைவு** 04 - 08 - 2000

**திருமதி பொன்னுத்துரை செல்லம்மா**
(இளைப்பாறிய ஆசிரியை)

எமது அன்புத் தாயாரின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து உதவிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், ஆறுதல் வார்த்தை கூறியவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

எமது இல்லத்தில் நாளை (03-09-2000) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள்:
**பொ. வேணுகோபால்,**
**திருமதி இ. அருந்ததி,**
**திருமதி ச. செல்வதி.**

*மடத்தடி,*
*அல்வாய் கிழக்கு,*
*அல்வாய்.*

(C/12769)


## சைக்கிள் திருட்டு

அரியாலை,செப்.2

வீட்டு முற்றத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த புதிய பெண்கள் சைக்கிளை பட்டப்பகலில் திருடர்கள் களவாடியுள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த வாரம் திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்திக்குக்கு அருகில் உள்ள ஒரு வீட்டில் இடம்பெற்றுள்ளது. (ஐ-17)

## களஞ்சியக் காப்பாளர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.2

அரச மற்றும் மாகாண அரச சேவையில் உள்ள களஞ்சியக் காப்பாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள 'பொண்ட்' கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சகலரையும் இதில் கலந்து கொள்ளுமாறு ஒருங்கிணைப்பாளர் கேட்டுள்ளார். (ஐ)

## வீடியோப் படக்காட்சி

யாழ்ப்பாணம்,செப்.2

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கும் திரைப்படக் காட்சித் தொடரில் 'அமரக் கலைஞன்குருதத் இங்கஸ் கபூல்' எனும் ஹிந்தித் திரைப்படம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படும். ஆர்வலர்களை கலந்துகொள்ளுமாறு புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் இரா.சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். (க)

# பங்கீட்டு அட்டை புதுப்பிப்பு

நல்லூர்,செப்.2

நல்லூர் ஜே - 106 கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட அனைவரையும் புதிய பங்கீட்டு அட்டைக்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறு கிராம அலுவலர் எஸ்.ஜெயக்குமார் கேட்டுள்ளார்.

தற்சமயம் புதிய பங்கீட்டு அட்டைக்கான பதிவுகள் இடம்பெற்று வருகின்றன. செப்ரெம்பர் மாதத்திற்கான நிவாரணம் புதிய பங்கீட்டு அட்டைகளுக்கே வழங்கப்படும். 'அ','உ' பங்கீட்டு அட்டைகளுக்கான பதிவுகள் எதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னதாகவும் -

உ, இ-2 அட்டைகள் 9ஆம் 10ஆம் திகதிக்கு முன்னரும் பதிவு செய்யவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-111)


## மிருதங்க அரங்கேற்றம்

**திரு. திருமதி அனந்தசயனன் தம்பதிகளின்**
புதல்வனும்,
**தெல்லிப்பழை செல்லையா தம்பதிகளதும்,**
**நமசிவாயம் தம்பதிகளதும்**
பேரனும்,
**இளைப்பாறிய செல்லப்பா மாஸ்டரின**
பூட்டனுமாகிய

**செல்வன் அனந்தசயனன் செந்தூரன்**

அவர்களின் மிருதங்க அரங்கேற்றம்
**(ஸ்ரீ காரைக்குடி ஆர். கிருஸ்ணமூர்த்தியின் மாணவன்)**

☞ இடம: **இலண்டன் மாநகர BECK அரங்கம்.**
☞ காலம: செப்ரெம்பர் 2 ஆம் திகதி 2000
☞ நேரம்: 6.30 பிற்பகல்.

'தனிப்பட்ட அழைப்புக்கள் அனுப்ப முடியாமைக்கு வருந்துகின்றோம்'

**திரு. திருமதி. அனந்தசயனன**
(பெற்றோர்).

(C/12758)



ஓம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் ஆவணி மாதம் 18 ஆம் நாள் நாளை (03-09-2000) ஞாயிற்றுக்கிழமை காலை 7.05 மணி முதல் 8.49 மணி வரையுள்ள கன்னிலக்கின சுபமுகூர்த்த நல்வேளையில்,

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**இராசலிங்கம்**
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**சரந்தரூபி**
அவர்களுக்கும்

திருவருள் துணை கொண்டு துன்னாலை அல்லையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் திருமணம் நடைபெற பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**மணமகனில்லத்தில் வரவேற்புபசாரம் 04-09-2000 திங்கட்கிழமை நடைபெறும்.**

தங்கள் நல்வரவை நாடும்:

**திரு. திருமதி இராசநாயகம்**
*துர்க்கா மரத் தொழிற்சாலை,*
*மில் ஒழுங்கை, சண்டிலிப்பாய்,*
*(கட்டுவன், தெல்லிப்பழை).*

**திரு. சண்முகம்** (வைரமுத்து)
*அல்லையம்பதி,*
*துன்னாலை.*

(77829)



உ
*சிவமயம்*

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் ஆவணித் திங்கள் 18 ஆம் நாள் நாளை (03-09-2000) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணி முதல் 12.00 மணி வரையிலான சுபமுகூர்த்த வேளையில்

எமது கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**இளமுருகன்**
B.Com. (Hons)
சனசமூக அபிவிருத்தி உத்தியோத்தர்
(C.D.O)
பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
**அவர்களுக்கும்**




எமது கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**நளாயினி**
H.N.D.A Final
ஆங்கில ஆசிரியை
(பகுதிநேரம்)
இராமநாதன் மகா வித்தியாலயம்
உசன்
**அவர்களுக்கும்**

இறையருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் திருமாங்கல்யதாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து விருந்துபசாரத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

**திரு. க. துரைரத்தினம்**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)
**திருமதி மனோன்மணி துரைரத்தினம்,**
மூளாய் மத்தி.
*நிரந்தர முகவரி: கொல்லங்கலட்டி.*

**திரு. மு. சிற்றம்பலம்**
**திருமதி நாகேஸ்வரி சிற்றம்பலம்,**
புத்தூர் மேற்கு.
*நிரந்தர முகவரி: மீசாலை வடக்கு.*

(C/12762)

# வாராந்தம் வெல்லுங்கள்!




# வாராந்தம்

## 01 மோட்டார் கார்

Jaya Sri
ஜய சிறி

## வெ ற் றி த் தி ட் ட ம்

மக்கள் வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் * வெற்றிக்கு மேல் வெற்றியீட்ட ஜய சிறி வெற்றித் திட்டம் வழிகாட்டுகிறது. உங்களிடமுள்ளது நடப்புக்கணக்காயின் 5,000/= ரூபாவையும் சேமிப்புக் கணக்காயின் 10,000/= ரூபாவையும் மாதாந்த நிலுவையாக வைத்திருந்தால் பரிசு வெல்லும் தகுதியைப் பெறுவீர்கள். அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு 5,000/= ரூபா வைப்புக்கும் வெற்றி வாய்ப்புக்கள் அதிகரிக்கும்.


வாராந்த பரிசுகள் மட்டுமன்றி இன்னும் பரிசுகள்!



நாளாந்தம்
10
வர்ணத்
தொலைக்காட்சிகள்



இருவாரங்களுக்கு
ஒருமுறை
01 வீடு



மாதாந்தம்
04
பேருக்கு தலா 10
இலட்சம் ரூபாய்

மக்கள் வங்கிக் கிளைகள் நாடெங்கும் பரந்துள்ளன.
இன்றே, உங்கள் கணக்கை ஆரம்பியுங்கள்.
பரிசுகளை வெல்லுங்கள்!
ஈடிணையற்ற வெற்றித் திட்டம்.... ஜய சிறி

விவரங்களுக்கு அருகிலுள்ள மக்கள் வங்கிக் கிளையை நாடுங்கள்

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி

மக்கள் வங்கி 40 ஆண்டுகள்

* வனிதா வாசனா மற்றும் என். ஆர். எப். சி. கணக்குகளுக்கென வேறு பரிசுத் திட்டங்கள இருப்பதால் ஜய சிறி திட்டத்தில் அவை சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

(C/12785)

# இக்கட்டான நிலையில் தேர்தலை சந்திக்கும் பொ.ஐ.முன்னணி அரசு!

**எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் குறித்து 'ராவய' சிங்கள வார இதழின் ஆசிரியரான விக்டர் ஐவனால் எழுதப்பட்டு 27-08-2000 திகதிய 'ராவய' பத்திரிகையில் வெளியான கண்ணோட்டத்தின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

தற்போதுள்ள தேர்தல் நடைமுறைகளை மாற்றி புதிய தேர்தல் நடைமுறைகளை அறிமுகப்படுத்துவது மூலம் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறலாம் என அரசாங்கம் பல எதிர்பார்ப்புக்களுடன் இருந்தது.

ஜனாதிபதித் தேர்தலின் போது பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்குக் கிடைத்தளவு வாக்குகள் எதிர்வரும் தேர்தலில் கிடைப்பது கடினம். ஜனாதிபதித் தேர்தலில் பெற்ற அளவு வாக்குகளைப் பெற்றால் கூட அரசாங்கமும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய கட்சிகளும் 115 ஆசனங்களை மட்டுமே பெற முடியும்.

ஜனாதிபதித்தேர்தலில் கிடைத்த வாக்குகளிலும் பார்க்க அரசுக்கு குறைந்த அளவில் வாக்குகள் கிடைக்குமானால் அரசாங்கம் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்து விடும். அத்துடன் ஜனாதிபதித் தேர்தலில் பெற்ற வெற்றியும் கேள்விக்குறியாகிவிடும்.

இவ்வாறான நிலைமை உருவாகாமல் தடுப்பதற்கு என்ன விலை கொடுத்தாவது தங்களுக்குச் சாதகமான தேர்தல் நடைமுறைகளை அறிமுகப்படுத்துவதே அரசாங்கத்தின் முக்கிய குறிக்கோளாக இருந்தது.

முற்றிலுமாகத் தேர்தல் நடைமுறைகளில் மாற்றங்களை மேற்கொள்ள முடியாத காரணத்தினால் அரசாங்கம் புதிய அரசமைப்புத் திட்டம் என்ற போர்வையாகப் பயன்படுத்த முயன்றது. அரசாங்கத்தின் இந்த முயற்சியை பௌத்த பிக்குகளும் சிங்கள மக்களும் பெரும் எடுப்பில் எதிர்த்தனர். நாடெங்கும் உருவான எதிர் உணர்வலைகள் காரணமாக ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசின் பக்கம் இழுக்கும் முயற்சிகளும் தோல்வி அடைந்தன. எனவே தேர்தல் நடைமுறைகளில் மாற்றங்களை மேற்கொள்ள எடுத்த முயற்சிகள் அனைத்தும் பயனற்றுப் போயின.

பலவீனமான நிலையை அடைந்திருந்த அரச எதிர்ப்புச் சக்திகள் இதன் காரணமாகப் புதிய ஆற்றலைப் பெற்றுள்ளன. இதனால் எதிர்க் கட்சிகளின் செயற்பாடுகளும் செயற்திட்டங்களும் வலுப்பெற்றுள்ளன. அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் மனதில் உருவான குழப்பமும் எதிர்ப்பும் இருமடங்காக, மும்மடங்காக அதிகரித்தன.

அனைத்து முயற்சிகளிலும் தோல்வி கண்ட அரசு தற்போது நடைமுறையிலுள்ள விகிதாசார பிரதிநிதித்துவ முறையிலான தேர்தலை எதிர்நோக்குகிறது. தனக்கு எதிராக எதிர்க்கட்சிகள் மேற்கொள்ளும் எதிர்ப்பு நடவடிக்கை உச்சக்கட்டத்தை அடைந்த நிலையிலேயே அரசாங்கம் தேர்தலை எதிர்நோக்குகிறது.

தற்போது அரசாங்கம் மிகவும் கடுமையான நிலைமைகளையே எதிர்நோக்குகிறது. நாடாளுமன்றத் தேர்தலில் அரசாங்கம் பெரும்பான்மையைப் பெறாவிடில் நாடாளுமன்றத்தில் அரசு பெரும்பான்மையை இழந்துவிடும். அத்துடன் ஜனாதிபதி முறைக்கும் பிரச்சினைகள் உருவாகும்.

அவ்வாறான நிலைமை உருவாகாமல் தடுப்பதற்கு தில்லு முல்லுகளையாவது மேற்கொண்டு தேர்தலில் வெற்றிபெற அரசாங்கம தள்ளப்படுத்துவதைத் தவிர்க்க முடியாது. தர்மசிறி சேனநாயகாவின் மறைவால் உருவான நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்துக்கு சந்தன கத்திர ஆராச்சி நியமிக்கப்பட்டதும்-

அதேபோன்று கட்சியின் செயலாளர் பதவிக்கு எஸ்.பி. திசநாயக்கா நியமிக்கப்பட்டதும் -

அரசு மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளுக்கு சமிக்ஞை ஆகும்.

## தில்லு முல்லு நடவடிக்கைகள்

தில்லு முல்லு நடவடிக்கைகளை ஜனாதிபதித் தேர்தலின் போது செயற்படுத்துவது சுலபமானது. ஆனால் நாடாளுமன்றத் தேர்தலில் அது கடினமானது.

ஜனாதிபதித் தேர்தலில் ஒரு கட்சி சார்பில் ஒரு வேட்பாளர் மட்டுமே தேர்தல் களத்தில் நிற்பார். எனவே ஒரே கட்சியைச் சேர்ந்த பிரதேச அமைப்பாளர்களிடையே, ஆதரவாளர்களிடையே போட்டி உருவாகாது.

ஆனால் நாடாளுமன்றத் தேர்தலில் ஒரே கட்சியைச் சேர்ந்த பிரதேசத் தலைவர்களிடையே இடம் பெறும் போட்டியானது அமைப்பு ரீதியாக ஊழல்கள் இடம் பெறுவதற்கான வாய்ப்புக்களை மட்டுப்படுத்தும்.

கள்ள வாக்குகளைப் போடும் முறை அனுசரிக்கப்பட்டால் விருப்பு வாக்கு யாருக்கு என்ற பிரச்சினை உருவாகி அந்த முயற்சி சிக்கலை உருவாக்கிவிடும். அதேபோலவே போலி வாக்குச் சீட்டுக்களைப் பயன்படுத்துவதும் ஜனாதிபதித் தேர்தலைவிட நாடாளுமன்றத் தேர்தலில் கஷ்டமான விடயமாகும்.

ஜனாதிபதித் தேர்தலின்போது நாடெங்கும் பயன்படுத்த ஒரேமாதிரியான வாக்குச் சீட்டே அச்சடிக்கப்படுகிறது. அதேபோலவே ஒரேமாதிரியான போலி வாக்குச் சீட்டைத் தயாரித்து நாட்டின் எப்பகுதியிலும் அந்த வாக்குச் சீட்டைப் பயன்படுத்தலாம்.

ஆனால் நாடாளுமன்றத் தேர்தலைப் பொறுத்தவரை ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் வெவ்வேறான வாக்குச் சீட்டுக்கள் தயாரிக்கப்படும். எத்தகைய குழறுபடிகளைப் பயன்படுத்தினாலும் எத்தகைய மோசடிகளில் ஈடுபட்டாலும் கூட கிடைக்கவுள்ள ஆசன எண்ணிக்கையில் பெரிய மாற்றங்கள் ஏற்படும் எனக் கூறமுடியாது.

## சாதகமான தேர்தல் நடைமுறையை அமுல் செய்யும் முயற்சி தோல்வி

இதற்கு முந்திய தேர்தல்களில் தேர்தல் குழறுபடிகளை கண்டுபிடிக்க அமைப்பு ரீதியாக எவரும் செயற்படவில்லை. ஆனால் இந்தத் தேர்தலின்போது பௌத்த விஹாரைகள், கத்தோலிக்கத் தேவாலையங்கள் இந்த நோக்கத்துக்காக செயற்பட உள்ளன எனத் தெரிகிறது.

இவற்றுக்கு மேலதிகமாக ஜனநாயகத்துக்கான கூட்டமைப்பு மற்றும் பல்வேறு சிவில் அமைப்புகள் இந்த நோக்கத்துடன் செயற்படத் தீர்மானித்துள்ளன.

இந்த அமைப்புக்கள் யாவும் சுதந்திரமான,நியாயமான தேர்தலின் தேவையை மக்கள் மத்தியில் உருவாக்குவதில் வெற்றிபெறுமேயானால் அமைப்பு ரீதியாக தேர்தல் மோசடிகள் நடைபெற வாய்ப்புக்கள் குறையும்.

**தமிழில்- கஜனி**

இந்தத் தேர்தல் ஜனநாயக அர்த்தங்களுக்கு வலுவூட்டுமா அல்லது ஜனநாயகத்தையே அர்த்தமற்றதாக்கிவிடுமா என்பதுதான் பிரச்சினை.

இந்தத் தேர்தலிலும் மோசடிகள் இடம் பெறுமானால் ஜனநாயக ரீதியான தேர்தல் குறித்து மக்கள் மனதில் அதிகரித்துவரும் அவநம்பிக்கை உறுதிப்படுத்தப்படும். மேலும் ஒட்டுமொத்தமான ஜனநாயகவழி அரசியல் முறை சிதைவுறும் நிலை உருவாவதைத் தடுக்க முடியாது. *

## கதிர்காமத்தில் 5 இளைஞர்கள் கைது

செல்லக்கதிர்காமம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பொலீஸாரும் இராணுவத்தினரும் நேற்றுமுன்தினம் கூட்டாக நடத்திய சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கையின் போது வெளி மாவட்டங்களைச் சேர்ந்த 5 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

கதிர்காமம் பிரதேசத்தில் பாதுகாப்பைப் பலப்படுத்தும் வகையில் இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)


புதிய கணனிக் கற்கை நெறிகள் ஆரம்பம் 02/09/2000
பகல் 10.00 மணி

# Institute of Informatics Studies (IIS)

No. 100 Clock Tower Road, Jaffna.

(Affiliated with *IMIS*, UK)

Telephone No. : 21-2831 E-Mail : iis@sltnet.lk



Personality leads to pride of success



Finest and the latest best equipped laboratory admired by one and all



Appearance proves a milestone in success

கிளை நிறுவனங்கள் :
* IIS நெல்லியடி, கரவெட்டி.
* IIS பிரதான வீதி, சங்கானை.

**Degree Course**

Bachelor of Information Technology (BIT)
Conducted by University of Colombo.

**Diploma Courses**

* Advanced Diploma in Applied Computer Science
* Diploma in Software Engineering
* Diploma in Computer Programming
* Diploma in Personal Computer Specialist
* Technician Diploma in Computer Hardware
* Diploma in Microsoft Office 2000
* Diploma in Internet & E-Mail Communication

**Professional Courses**

* BCS Stage I & Stage II Conducted by British Computer Society, U.K.
* ACS Stage I to Stage IV Conducted by Australian Computer Society, Australia.
* NECS Stage I to Stage VI Conducted by National Examination in Computer Studies, Sri Lanka
* NCCA 1- Basic Level Exam and 2- Intermediate Level Exam Conducted by National Certificate in Computer Application Sri Lanka

**Certificate Courses**

MS Excel 2000, MS Word 2000, MS Access 2000, MS Power Point 2000,AutoCad, Page Maker, Corel DRAW, Visual Basic, Pascal, Visual C, C++, dBase III+ and Computer Hardware.

**ஆயிரம் ஆயிரம் மாணவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான கல்வி நிறுவனம்**

* அனைவரினதும் வசதிகருதி வாரநாட்களிலும் வாரஇறுதி நாட்களிலும் காலை மாலை வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

* உங்கள் வசதிக்கு ஏற்ப கட்டணங்களை இலகுவாக தவணை முறையில் செலுத்திக் கொள்ளமுடியும்.

* நாட்டின் சூழ்நிலை காரணமாக உங்கள் கல்வி தடைப்பட்டுவிடுமோ, என்ற அச்சம் தேவையில்லை. உங்கள் கல்வியை எமது கிளைநிறுவனங்களினூடாக தடையின்றி தொடரமுடியும்

* கல்வியாண்டு 1999/2000ல் பல்வேறு காரணங்களினால் கல்வியை இடையில் நிறுத்திக் கொண்ட மாணவர்கள் இப்பிரிவுடன் இணைந்து கொள்ளலாம்.

**உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான எமது மாபெரும் [illegible] பரிசில் திட்டம் விரைவில்**

# இந்த வார இராசி பலன்

## 02-09-2000 இலிருந்து 08-09-2000 வரை

| | | | |
|---|---|---|---|
| | | வி சனி | ரா |
| | இராசிச்சக்கரம் | | செ |
| | | | சூ |
| கே | | சந். | புத. வெ |

*மாற்றம்:*

*02.09.2000 இல் சித்திரை 3 ஆம் பாதம் துலாம் இராசியில் சந்திரன் நிற்கும்.*

*தேர்தலில் திசைமாற்றங்கள் ஏற்படும். யுத்தங்களால் மக்கள் மனக் கலக்கம் அடைவார்கள். ஓடி வந்த இடத்திற்கு போக வேண்டி வரலாம். உண்மைகள் உலகை உறுத்திய படி இருக்கும். இந்தியாவின் மன மாற்றம் அயல் நாடுகளில் தாக்கங்களைக் கொடுக்கும். வடக்கில் போரும் தெற்கில் பதற்றமும் ஏற்படும். மேற்குலகம், கிழக்கு நாடுகளின் அரசியலில் சதுரங்க விளையாட்டைத் தொடரச்செய்து மாற்றங்களைக் கொடுக்கும்; வெள்ள அழிவுகள் ஏற்படும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.*

### மேடம்

உழைக்க உழைக்க நீங்களும் உயர்ந்து, நாடும் உயரும். எனவே உழைக்கும் இராசியில் பிறந்த நீங்கள் எப்பாடுபட்டாவது முன்னுக்கு வரத் துடித்தபடி இருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டம் ஏற்படும். காணி, பூமி சம்பந்தமான பல அலுவல்களுக்காக ஓடியாடித் திரிவீர்கள். வாக்குச் சொற்பிரயோகத்தால் பல காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள். குடும்பத்தில் கலகலப்பாக இருக்கும் காலம். புதிய ஒப்பந்தங்கள் ஏற்படலாம். பேச்சுவார்த்தைகள் சாதகமாகும் காலமாகும். வயிற்றுக்குழப்பம், மூலச்சூடு,எரிவு, காயங்கள் வரலாம். கலைத்துறை, ஹோட்டல், நகைத்துறை, வியாபாரத்துறை, போக்குவரத்துத்துறையினர்கள் அதிக இலாபங்களை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:ஞாயிறு, வெள்ளி.*

### இடபம்

பணம், பாசம், மனக்கிலேசம் இவை மூன்றும் ஒரு சங்கிலித் தொடர் போல ஒருவர் வாழ்வில் வந்து அவரைத் தடுமாறச் செய்யும். இதை எல்லாம் அலட்சியம் செய்ய மாட்டீர்கள். தொழில்ஸ்தானத்தில் மற்றவர்கள் செய்வதை எல்லாம் பார்த்துக்கொண்டு முறுகிக் கொண்டு இருப்பீர்கள். எதிர்ப்பாலருடன் போட்டிகள் ஏற்படும். தந்தை வழி அல்லது சகோதரங்களுடன் போட்டிகள் ஏற்பட்டு கலங்க வேண்டி ஏற்படலாம். அரச அதிகாரிகளின் நெருக்கடிகள் சிலருக்கு ஏற்படலாம். வயிற்றுநோ, சிரசு வருத்தங்கள், மனக்கவலைகள் என்பன கொடுக்கலாம். எண்ணெய்த்துறை, பாதுகாப்புத் துறை, தரகுத்துறை, ஆசிரியத்துறை போன்ற துறையினர்கள் ஆதாயம் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: ஞாயிறு, வெள்ளி (மத்தியானம்)*

### மிதுனம்

என்ன அவசரம் உங்களுக்கு? அவசரப்பட்டு வட்டிக்கு பணம் வாங்கி மகனை வெளிநாடு அனுப்பி அவன் சிங்கப்பூரில் பிடிபட்டு சிறை சென்றால் ஒரு பெற்றோரின் நிலை என்ன என யோசித்தீர்களா? ஏதோ எங்கள் குடும்பம் சிறப்பு அடைந்து விடும் என்ற நம்பிக்கையில் தான் வெளிநாடு அனுப்புகிறார்கள். பலன் இவ்வாறு இருக்கையில் - எனவே எந்த விஷயத்தையும் அவசரப்படாமல் காலநேரம் அறிந்து செயற்பட்டு வாருங்கள். அதனால் தொழில்ஸ்தானத்தில் நீங்கள் போடும் திட்டங்களில் நன்மைகள் கிடைக்கும். குடும்பத்தில் அபிப்பிராயபேதமிருந்தாலும் சமாளித்து விடுவீர்கள். இடமாற்றத்தில் பொருள் தவறலாம். வாகனச் செலவு அதிகமாக இருக்கும். வாய்வு, நெஞ்சுச்சளி, பிடிப்பு வரலாம். சட்டத்துறை, வியாபாரத் துறை, ஆசிரியத் துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்: ஞாயிறு, வெள்ளி (மத்தியானம்).*

### கடகம்

மனிதமனம் - ஒருவரில், ஒரு பொருளில் லயித்து உலகத்தையே மறந்து மனதை பறிகொடுத்து விட்டால் அது காதலாகவோ, பக்தியாகவோ சக்தி பெற்று விடும் என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே நீங்களும் உங்கள் தொழிலில் கூடிய கரிசனை கொண்டு செயற்பட்டு வாருங்கள். அதனால் பல நன்மைகள் ஏற்படும். அதிகாரிகள் கௌரவிப்பார்கள். எதிர்பாலருடன் அவதானமாக இருக்கவும். அல்லது குறை கேட்பீர்கள். வீட்டில் புதிய பொருள்கள், கலகலப்பு இருக்கும். வாகன சுகம் அதிகரிக்கும். பொதுத்தொண்டில் கருத்து வேற்றுமை வரும். வாய்வுத்தொல்லை, கிருமித்தாக்கம், நாரிநோ என்பன கொடுக்கும். சட்டத்துறை, ஆலயத்துறை, ஆசிரியத்துறை போன்ற 'துறையினர்கள் அதிக இலாபங்களும் மாற்றங்களும் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: வியாழன்.*

### சிங்கம்

உங்கள் மனம் ஒரு ஆராய்ச்சிக் கூடம். ஆயிரம் சிந்தனை அதில் ஊறி அனுபவப்பட்டபடி இருப்பீர்கள். திடமான போக்கு, நல்ல மனம் கொண்டு செயற்படும் பொழுது எத்தனையோ பேரை உருவாக்கித் தரும். கஷ்டப்பட்டு படிப்படியாக ஏறி வந்த அனுபவம் உங்களுக்கு நிறைய உண்டு. இதனால் தொழில் ஸ்தானத்தில் உறுதியான நிலைப்பாடுகள் ஏற்படும். புதிய திட்டங்களால் ,புதிய பொறுப்புகளால் நன்மைகள் கிடைக்கும். சக அன்பர்கள், நண்பர்களால் ஆதரவு பெருகும். குடும்பத்தில் எதிர்ப்பாலருக்கு நல்லதல்ல. சுகயீனங்கள் கொடுக்கலாம். வாய்வுத்தொல்லை, வயிற்றுக் குழப்பம், கைகால் பிடிப்பு, நாரிநோ என்பன கொடுக்கலாம். விவசாயம், வியாபாரம், எண்ணெய், மருந்துத் துறை, குருத்துறை போன்றதுறையினர்களுக்கு மாற்றங்கள் ஏற்பட்டபடி இருக்கும்.

*அதிர்ஷ்டநாள் : வியாழன்.*

### கன்னி

ஐயா, மகன் பனியில் நின்று உழைத்த பணத்தில் கட்டிய எனது வீட்டை ஷெல்லடித்து விட்டது நான் மண்ணைக்கிண்டி பொறுக்கிய பணத்தில் வாங்கிய தளபாடங்களை கள்வர் எடுத்து விட்டார்கள். இனி எது நடந்தாலும் நான் தயார் நிலையில் உள்ளேன். எனப் புலம்பும் தந்தைமார்கள் எத்தனை பேர்? இது எதனால்? யாரால் ஏற்பட்டது? காலதேவனின் கரங்களில் மனிதர்கள் எப்படி பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளார்கள் என்பதை இது காட்டுகிறது. இதே நிலை உங்களுக்கு வரக் கூடாது அல்லவா? எனவே தொழில் ஸ்தானத்தில் நிதானமாக இருக்கவும். வருமானம், செலவு என மாறி மாறி வரும். வாய்வுத்தொல்லை, உஷ்ணபீடைகள், விறைப்பு வரலாம். செய்தித்துறை, போக்குவரத்துத் துறை, நகைத்துறை, நிர்வாகத் துறையினர்கள் போன்றவர்களுக்கு இலாபங்களும், மாற்றங்களும் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்:வியாழன்,வெள்ளி.*

### துலாம்

இப்பரந்த பிரபஞ்சத்தில் ஒரு வட்டத்தில் சூரியமண்டலம். அதில் ஓர் அங்கம் எமது பூமி. அப் பூமியின் பௌதிகச் சடப்பொருள், உயிர்ச் சத்து, உயிரமைப்பு என்ற சக்தியில் ஒன்பதில் ஒன்று என்ற பங்கில் மனிதப் பகுப்பின் அணுசடப்பகுப்பு வகுக்கப்பட்டுள்ளது. எனவே விஞ்ஞானம் ஆத்மீகத்துக்குள் எப்பொழுதும் அடங்கியிருக்கும். தத்துவத்தை ஒரு கொம்பூட்டர் மூலம் கணித்து அது மனிதனுக்கு எந்தளவு பிரயோசனமானது என நாம் வகுக்கும் ஒரு திட்டம் வருங்காலத்தில் ஏற்பட வேண்டும். அதனால் தெளிவு வரும். உங்கள் தொழிலிலும் பல திட்டங்களை வகுத்துச் சிறப்படைவீர்கள். நாம் பழி சுமக்க வேண்டியதை சுமந்து நாமே செல்ல வேண்டும் எனச் சொல்வீர்கள். பித்தங் கொதிக்கும், நரம்புச் சோர்வு, களைப்பு வரும். நீதித்துறை, குருத்துறை, போக்குவரத்துத்துறை, விவசாயத் துறை போன்றதுறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:ஞாயிறு,வியாழன், வெள்ளி.*

### விருச்சிகம்

தேர்தல் என்பது ஒரு வியாபாரம் ஆகிவிட்ட காலம். இங்கு நடிகர்கள் நடித்து ரசிகர்களை ஏமாற்றுவது போல, அரசியல் வாதிகள் மக்களை நாசூக்காக ஏமாற்றுவதை தெரிந்தும் தெரியாதவர்கள் போல வோட்டை அளித்து பெருமைப்படுகிறார்கள். ஆனால் நீங்கள் தொழில் பீடத்தில் ஏமாற்றுபவர்களை இனங் கண்டு விடுவீர்கள். கண்டிப்பான உறுதியான உங்கள் நடவடிக்கை மேலதிகாரிகள் உங்கள் மீது நல்ல பிப்பிராயம் கொள்ளச் செய்யும். நெஞ்சுப்படபடப்பு, நரம்புச் சோர்வு, சலவருத்தம், சிரசு வருத்தம், உஷ்ணபீடை என்பன வரும். ரீ.வித் துறை, செய்தித்துறை, வணிகத் துறை, மருந்துத்துறை, பாதுகாப்புத் துறை, எண்ணெய்துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்கள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்:ஞாயிறு,வியாழன், வெள்ளி.*

### தனுசு

கோயிலுக்கு சாமியிடமா அனேகர் போகிறார்கள். குடும்பக் கடமைக்குப் பின்பு சாமியிடம் போனால் அதில் ஒரு நிறைவு நிச்சயம் இருக்கும். எனவே தொழிலிடத்திலும் தெய்வ வழிபாடு முக்கியமாகும். அப்பொழுதுதான் கடமையை சரிவரச் செய்யலாம் எனச் சொல்வீர்கள். எதிர்ப்பாலருடன் வாக்குக் கலகங்கள் வராது பார்த்துக் கொள்ளுங்கள். பொருள் ஒன்று தவற இடமுண்டு. அரசியலில் செல்வாக்கு ஏற்படும். அரசு உதவிகள் கிடைக்கும். வயிற்று நோ, இடுப்புவலி, எலும்புத்தாக்கம் என்பன வரலாம். செய்தித்துறை, கமிஷன்துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்கள் இலாபங்களும் மாற்றங்களும் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:ஞாயிறு,வியாழன், வெள்ளி.*

### மகரம்

காலைச்சுற்றிய பாம்பு - கடிக்காது என எண்ண முடியுமா? எனவே எவராவது உதவி செய்வதாக வந்து உபத்திரவம் தர இடமுண்டு. காட்சிகள் மாறும். தொழில்ஸ்தானத்திலும் பல மாற்றங்கள் உங்களை நாடிவர இடமுண்டு. புதிய பொறுப்புகள் வரலாம். வாகனங்களால் செலவுகள் அதிகரிக்கும். சகோதரங்களுக்காக ஓடியாடித்திரிவீர்கள். எதிர்பாலர் உதவி செய்வார்கள். அவர்களால் பிரச்சினைகளும்வர இடமுண்டு. முழங்கால் பிடிப்பு, மூட்டு வருத்தங்கள், வாய்வுத்தொல்லைகள் என்பன வரலாம். தொழில்நுட்பத்துறை, விவசாயத்துறை, எண்ணெய்த்துறை, தரகுத்துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்கள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்:ஞாயிறு,வியாழன், வெள்ளி.*

### கும்பம்

நீங்கள் மனச்சாட்சி உள்ளவர்கள். கட்டிய மனைவிக்கோ மாலையிட்ட மணவாளனுக்கோ எத்தனை பொய்களைச் சொல்லி சிலர் ஏமாற்றுகிறார்கள் என்பதை அறிவீர்கள். ஆனால் நீங்கள் தொழில்ஸ்தானத்தில் மிகவும் விசுவாசமாக நடந்து கொள்வீர்கள். மேலதிகாரிகள் உதவிகள் செய்வார்கள். அடிக்கடி மனச் சஞ்சலம் அடைவீர்கள். இடம்மாற்றங்கள் கொடுக்கும். வீடுமனைச் சிறப்படைவீர்கள். தோல் வருத்தங்கள்,சளித்தொல்லை, வயிற்று வருத்தம்,நாரிப்பிடிப்பு என்பன வர இடமுண்டு. குடும்பத்தில் சகோதரங்களுடன் ஏட்டிக்குப் போட்டி போடாமல் தவிர்த்துக் கொள்ளவும். வாகனங்களால் செலவு அல்லது இழப்பு ஏற்பட்டு சிலர் மனவேதனை அடைய பலனுண்டு. படத்துறை, ரீ.வித்துறை, விவசாயத்துறை,தரகுத்துறை, இசை தொடர்பான போன்றவர்களுக்கு பல மாற்றங்கள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்:ஞாயிறு,வியாழன், வெள்ளி.*

### மீனம்

நம்பிக்கை என்பது மனிதவாழ்வின் உயிர்நாடி. நம்பிக்கை கெட்டுவிட்டால் விபரீத புத்தி சர்வநாசத்தை நிச்சயம் தரும். எனவே தொழில்ஸ்தானத்திலும் நம்பிக்கையுடன் செயற்பட்டு வெற்றி அடையுங்கள். திட்டமிட்டு இலாபங்கள் அடையப்பல சந்தர்ப்பங்கள் ஏற்படும். காரியத்தில் கண்ணாக இருங்கள். வெளிநாட்டுச் செய்திகளால் நன்மைகள் ஏற்படும். இனஜனங்களால் நன்மைகள் ஏற்பட இடமுண்டு. சனீஸ்வரன் விட்டாலும் அதன் துன்பப்பலன்களின் சாயல்கள் விட்டு விட்டு கொடுக்க இடமுண்டு. நரம்பு, கைகால் பிடிப்பு, விறைப்பு, வாய்வுத் தொல்லைகள் என்பன கொடுக்கும். கடல், ஹோட்டல், வியாபாரம், விவசாயம், மதுபானத்துறை போன்ற துறையினர்கள் இலாபம் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:ஞாயிறு,வியாழன், வெள்ளி.*

★

## சோதிட சஞ்சீவி

## மகாதேவா ஜோதிடம்

---

#### அரசமைப்புச் சீர்திருத்தம் குறித்து

# அமைச்சரை விவாதத்துக்கு அழைக்கிறார் பௌத்த தேரர்!

கொழும்பு,செப்.2

ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி முன்வைத்த அரசமைப்புச் சட்ட நகல் தொடர்பாக நேரடியான விவாதமொன்றுக்கு சமுர்த்தி, இளைஞர் விவகார, விளையாட்டுத் துறை அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா வரவேண்டும் எனப் பேராசிரியர் பெல்லன்வில விமலரத்ன தேரர் சவால் விடுத்துள்ளார்.

புதிய அரசமைப்புச் சட்ட நகல் தொடர்பான விடயங்கள் பெல்லன்வில விமலரத்ன தேரருக்கு முழுமையாகத் தெரியாது என அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா அண்மையில் ஹங்குரங்கெத்தையில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்ததை அடுத்தே மேற்படி சவால் விடுக்கப்பட்டுள்ளது.

ஹங்குரங்கெத்த கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் திஸநாயக்கா, பேராசிரியர் விமலரத்ன தேரர் தமது ஆசிரியராகக் கடமையாற்றியவர் எனவும் புதிய அரசமைப்புத் தொடர்பாக நாம் அவருடன் நீண்டநேரம் கலந்துரையாடியதாகவும் தெரிவித்திருந்தார்.

ஆயினும் அமைச்சரின் மேற்படி கூற்றுகள் முற்றிலும் பொய்யானவை. அதேநேரம், ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் அரசமைப்புத் தொடர்பாகத் தமக்கு எதுவும் தெரியாது எனக் கூறியதை அவர் நிரூபிக்க வேண்டும்.

எசல பெரஹரவுக்கான வேலைகள் தற்போது நடைபெறுவதனால் எதிர்வரும் செப்ரெம்பர் மூன்றாம் திகதிக்குப் பின்னர் ஒரு திகதியை அமைச்சர் திஸநாயக்கா நேரடி விவாதத்தின் பொருட்டு தமக்கு அறிவிக்க வேண்டும். அத்துடன் அவ் விவாதத்தை நேரடியாக தொலைக் காட்சியில் ஒளிபரப்பவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பேராசிரியர் விமலரத்னதேரர் தெரிவித்துள்ளார் (ஐ-6)

# புலமைப்பரிசில் கொடுப்பனவுகளை உரிய காலத்தில் வழங்கப் பணிப்பு!

யாழ்ப்பாணம்,செப்.2

மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில் கொடுப்பனவுகளை காலதாமமின்றி அந்தந்த வருடத்துக்குள்ளேயே வழங்கவேண்டும் என வடக்கு - கிழக்கு மாகாணக் - கல்விச் அமைச்சுச் செயலாளர் க. பரமேஸ்வரன் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் பணிப்புரை வழங்கியுள்ளார்.

கல்வி அமைச்சுச் செயலாளரை வடமாகாண அதிபர் சங்கம் சந்தித்து மாணவர்களுக்குரிய புலமைப்பரிசில் கொடுப்பனவுகள் உரிய காலங்களில் வழங்கப்படுவதில்லை என்றும் இரண்டு, மூன்று வருடங்களுக்கு மேலாகவும் வழங்கப்படாமல் உள்ளது எனவும் சுட்டிக்காட்டியதை அடுத்தே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டது.

சில அதிபர்களின் அசமந்தப் போக்கும் இத்தாமதத்துக்கு காரணம் என வலயக் கல்விப் பணிப்பாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. அப்படிப்பட்ட - கடமை தவறிய - அதிபர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து ஏற்ற தண்டனை வழங்கியிருந்தால் இந்த கைய நிலை தொடர்ந்திருக்காது என அதிபர்கள் சங்கத்தினர் தெரிவித்தனர்.

ஏழைப் பிள்ளைகளுக்காக அரசு வழங்கும் இக் கொடுப்பனவுகள் எவ்விதத்திலும் தாமதிக்கப்படுவது அம் மாணவர்களுக்குச் செய்யும் துரோகம் எனவும் -

எதிர்காலத்தில் இக்கொடுப்பனவு தாமதப்படுத்தப்படுவதை மிகப் பெரிய குற்றமாகக் கருத வேண்டி வரும் எனவும் - செயலாளர் தெரிவித்தார். புலமைப் பரிசில் கொடுப்பனவுகளுக்குரிய பணத்தினை வலயக் கல்விப்பணிப்பாளர்கள் கணக்கிட்டு உடன் தெரியப்படுத்த வேண்டும் எனவும் மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் அதற்குரிய பணத்தை உடன் வழங்க வேண்டும் எனவும் அவர் உத்தரவிட்டார். (க)

# இடம்பெயர்ந்தோர் வாக்களிக்க விசேட படிவங்கள் விநியோகம்

யாழ்.மாவட்டத்தில் இடம் பெயர்ந்து வசிப்பவர்கள் வாக்களிக்க வசதியாக விசேட படிவங்கள் கிராம அலுவலர்கள் மூலம் விநியோகிக்கப்படவுள்ளன.

இடம்பெயர்ந்த மக்கள் இப் படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து கிராம அலுவலர்களிடம் கையளிப்பதன் மூலம் தமக்கு வசதியான ஒரு வாக்களிப்பு நிலையத்தில் தங்கள்வாக்கைச் செலுத்த முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கிராம அலுவலர்களுக்கான பகுதி நாள் கூட்டத்தில் வைத்து கடந்த புதனன்று இப்படிவங்கள் வழங்கப்பட்டன. எனினும் படிவங்களைப் பூர்த்திசெய்து கையளிக்க வேண்டிய இறுதித்தினம் குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்று கூறப்பட்டது.

தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, அரியாலை ஆகிய பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தாம் தங்கியுள்ள பகுதியில் தமக்கு வசதியான ஓர் இடத்தில் வாக்களிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-86)

## 18 மாவட்டங்களில் சிங்கள உறுமய போட்டி

'சிங்கள உறுமய' கட்சி யாழ்ப்பாணம் உட்பட 18 மாவட்டங்களில் போட்டியிடவுள்ளதாக அதன் தலைவர் திலக் கருணாரத்ன தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் ஒருவராவது வெற்றி பெறுவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லாவிட்டாலும் கூட கட்சியின் ஒற்றையாட்சி நிலைப்பாட்டை எடுத்துக்காட்டுவதற்காக அங்கு போட்டியிடத் தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.(ஐ-6-20)

# யாழ். மக்களுக்கு

# எமது வேண்டுகோள்!



அ.வரதராஜப்பெருமாள் த.றொபேட் சுபத்திரன்

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீவிரம் பெற்ற நாள்களில் அதாவது இற்றைக்கு இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர், வயதில் இளையவர்களாக-மானவர்களாக இருந்த நாளிலிருந்தே, தமிழ் மக்கள் மீது ஏவி விடப்பட்ட பேரினவாத ஒடுக்குமுறைகளுக்கு எதிரான பிரசார இயக்கத்தை மக்கள் மத்தியில் முன்னெடுத்துச் சென்றவர்கள் நாங்கள்.

வடக்கு-கிழக்கின் மூலை முடுக்குகள், குச்சு ஒழுங்கைகள், பாடசாலைகள், தோட்டங்கள், வயல் வெளிகள், மலையகத் தோட்டங்கள் என எல்லா இடங்களிலும் பிரசார நடவடிக்கைகளைத் தீவிரமாக முன்னெடுத்தவர்கள் நாங்கள்.

தமிழ்பேசும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, ஒரு பரந்துபட்ட மக்கள் போராட்டமாகவே இன ஒடுக்குமுறைக்கு எதிரான எமது போராட்டத்தை முன்கொண்டு செல்ல வேண்டும் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டு செயற்பட்டவர்கள் நாங்கள்.

1986இல் புலிகள் ஏனைய தமிழ் இயக்கங்களைத் தடைசெய்து, தமிழ்ப் போராளிகளைக் கொலை செய்ததனால் தமிழ் மக்கள் மத்தியில் ஜனநாயகத்திற்கும் ஒற்றுமைக்கும் இடமற்றுப் போன ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. விடுதலைப் போராட்டத்தில் நம்பிக்கையை இழந்து மக்கள் விரக்தியின் விளிம்பில் நிறுத்தப்பட்டனர்.

இவ்வாறான சூழ்நிலையிலேயே, நாம் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட அரசியல் தீர்வினை ஆதரித்தோம். மாகாண அரசாங்கத்திற்கு அதிகாரங்களைப் பெறுவதில் அன்றைய பிரேமதாஸாவின் அரசுடன் அரசியல் ரீதியில் போராடினோம். பிரேமதாஸா அரசின் தமிழர்-விரோதக் கொள்கைகளை உலகுக்கு அம்பலப்படுத்தினோம். எமது புத்திபூர்வமான துணிந்த அரசியல் நடவடிக்கைகளினாலேயே, திருகோணமலையில் எமக்கென ஓர் அரசாங்கம் உருவாக்கப்பட்டதுவும், திருகோணமலை இப்போதும் வடக்கு-கிழக்கு மாகாணத்தின் நிர்வாகத் தலைநகரமாக இருப்பதுவும், வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாகவேனும் ஒன்றாக இணைந்திருப்பதுவும் சாதிக்கப்பட்டன - சாத்தியமாக்கப்பட்டன.

அன்பிற்கினிய யாழ்ப்பாண மக்களே!

1997 தை மாதத்திலிருந்து மீண்டும் உங்கள் மத்தியில் நாம் பணியாற்றி வருகின்றோம். எமக்கு பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் இல்லாமை, எம்மிடம் போதிய நிதி வளம் இல்லாமை ஆகிய பல குறைபாடுகளுக்கு மத்தியிலும் மக்கள் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளோம், அதிகாரப் பகிர்வு தொடர்பாக தமிழ் மக்களின் நீண்டகால நலன்களையும் அபிலாஷைகளையும் நிலைநாட்டும் நோக்குடன் வாய்ப்புக் கிடைத்த வழிகளிலெல்லாம் குரல் எழுப்பி வந்துள்ளோம். இவற்றையெல்லாம் நீங்கள் நன்கு அறிவீர்கள்.

ஆயுத ரீதியான யுத்தத்தினால் எமது மக்களின் வாழ்வுக்கும் நன்மைக்கும் அவசியமான, ஆக்கபூர்வமான விளைவுகள் எதுவும் இதுவரை ஏற்படவில்லை. எமது சமூகம் அகதிகளாக, அநாதைகளாகச் சீரழிந்ததைத் தவிர வேறெதுவும் நடைபெறவில்லை. இனியும் எந்தவிதமான நன்மைகளும் ஏற்படும் என நாம் இலவு காத்த கிளிகள் போல் இருக்க முடியாது. கனவிலிருக்கும் பலாக்காய்க்காகக் கையிலிருக்கும் களாக்காய்களை நிராகரிப்பது இனியும் புத்திசாலித்தனமாகாது.

இன்றைய நிலையில் ஜனநாயகக் கட்டமைப்பின் முக்கிய நிறுவனமான பாராளுமன்றத்தை நாம் நிராகரிக்க முடியாதுள்ளது. அதனை நிராகரிப்பதன் மூலம் அதனைத் தவறானவர்களே பயன்படுத்திக் கொள்கிறார்கள். மக்களின் பிரதிநிதிகளே மக்களின் தலைவர்களாகச் செயற்படுதல் வேண்டும். அப்பொழுது தான் மக்களின் நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற நிலைமை ஏற்படும். மக்கள் தங்களுக்கென சரியான தலைமையைத் தெரிவுசெய்தல் வேண்டும். மக்களுக்குரிய அந்த உரிமை அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். மக்கள் தமக்குரிய இந்த அதிகாரத்தை உரிய நேரங்களில் சரியாகப் பிரயோகித்தல் வேண்டும்.

பாராளுமன்றத்தில் எமது பிரதிநிதித்துவம் இல்லாததால் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக எமது ஆணித்தரமான கருத்துக்களும், சரியான நிலைப்பாடுகளும் உரிய இடங்களில் அங்கீகாரங்களைப் பெறவில்லை. அத்துடன் மக்களின் பல அன்றாடப் பிரச்சினைகளுக்கு உதவுவதிலும் நாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினோம்.

இந்த உண்மை நிலைமைகளைக் கவனத்திற் கொண்டு எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஒரு சந்தர்ப்பத்தை எமக்கு வழங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். அதன் மூலம் நியாயபூர்வமான அரசியற் தீர்வுக்கான எமது போராட்டம் சக்தி உள்ளதாகும். அத்துடன் மக்கள் எதிர்நோக்கும் பொருளாதார நிர்ப்பந்தங்கள், வேலையின்மை மற்றும் அன்றாட அரச நிர்வாகத்துடன் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாகவும், மனித உரிமை மற்றும் ஜனநாயக உரிமைப் பிரச்சினைகள் போன்றவை தொடர்பாகவும் காத்திரமான செயற்திட்டங்களை நாம் தீர்க்கமாக முன்னெடுத்துச் செல்ல வாய்ப்புடையவர்களாவோம்.

அங்கீகரிக்கப்பட்ட கட்சியின் பெயரில் செயற்பட முடியாதவர்களாக உள்ளமையினால் உங்கள் முன்னால் இந்தத் தேர்தலில் ஒரு சுயேச்சைக் குழுவாகவே முன்வருகின்றோம்.

நாம் கடந்த காலத்தில், எம்மால் முடிந்த அளவுக்கு மக்களுக்கு உதவிகரமாக இருந்து வந்துள்ளோம். உரிமைகளுக்காகக் குரலெழுப்புவதில் உறுதியுடன் செயற்பட்டு வந்துள்ளோம். மக்கள் மத்தியில் கண்ணியமாகவும் கட்டுப்பாட்டுடனும் நடந்து வந்திருக்கிறோம். எங்களைப்பற்றி நீங்கள் நன்கு அறிவீர்கள். அந்த உரிமையிலேயே எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் உங்கள் அன்பான ஆதரவைக் கோரி நிற்கின்றோம்.

எங்களின் உண்மையான உழைப்புக்கு உங்களின் உறுதியான ஆதரவைத் தாருங்கள்.

**நாம் செய்யக்கூடியதை மக்களுக்கு உள்ளபடி சொல்வோம்!**
**நியாயமான உரிமைகளுக்கு உறுதியாகக் குரல் கொடுப்போம்!**
**சரியான உறவுகளுக்கு நேர்மையுடன் கைகொடுப்போம்!**
**மக்களின் தேவைகளுக்கு உண்மையாக உழைப்போம்!**

(77925)

# உதயன்

## விமோசனம் வருவது எப்போது?

தமிழர் விழிப்புணர்வு ஒன்றியத்தைச் சேர்ந்த தொண்டர் யேசுதாசனின் தற்துணிவு பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடும் தமிழ்க் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் ஒரே அணியில் போட்டியிட வேண்டும் என்ற அவரது கோரிக்கை நிறைவேற்றப்படுகிறதோ இல்லையோ - அவருக்குவெற்றி கிடைக்கிறதோ இல்லையோ - தமிழ் அரசியல்வாதிகளை ஒன்றுபடக் கோரி தமது உயிரைத் தியாகம் செய்வதற்கு முன் வந்த அவரது செயல் தமிழ்மக்கள் எல்லோராலும் பேசப்படும் விடயமாகியுள்ளது.

திருகோணமலை மாவட்டம் தமிழ் மக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்டிருந்த காலம் ஒன்று இருந்தது. அப்போதெல்லாம் இரண்டு தமிழர்கள் நாடாளுமன்ற உறுப்பினராகினர். ஆனால் இப்போது மூவின மக்களும் அனேகமாகச் சம எண்ணிக்கையில் வாழும் பிரதேசமாக அது மாறிவிட்டது. அதனால் அந்த மாவட்டத்தில் இருந்து ஒரு தமிழ் வேட்பாளரே தெரிவு செய்யப்படும் சாத்தியம் உண்டு.

கடந்த பொதுத் தேர்தலில் - 1994ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் - திருகோணமலை மாவட்டத்தில் இருந்து ஒரு தமிழர் - காலஞ்சென்ற ஏ.தங்கத்துரை - மட்டுமே தெரிவானார்.

இம்முறை தமிழ்க்கட்சிகள், குழுக்கள் கன்னை பிரிந்து போட்டியிட்டால், தமிழர் ஒருவரேனும் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்படும் வாய்ப்பு நிச்சயமாக இல்லாமற் போய்விடும்!

அந்த நிலை உண்டாகக்கூடாது என்ற நல்ல நோக்கத்துக்காகவே திருகோணமலை வாழ் தமிழ் மக்களின் நலன் கருதியே, தமிழர் விழிப்புணர்வு ஒன்றியம் தமிழ்க்கட்சிகள், குழுக்களை ஒரே அணியில் போட்டியிடுமாறு கோரிக்கை விடுத்திருந்தது. திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தைக் கட்டிக் காக்கும் முயற்சியாக விழிப்புணர்வு ஒன்றியம் தேர்தலில் போட்டியிட உத்தேசித்துள்ள தமிழ்த் தரப்பினர் சகலரையும் அழைத்து கடந்த புதன் கிழமை ஆலோசனை நடத்தியது. அதனால் தமிழ்க் கட்சிகளும் குழுக்களும் ஒரே அணியில் போட்டியிடவோ, ஒரு தரப்புக்கு மற்றத்தரப்பு விட்டுக்கொடுக்கவோ இணங்கவில்லை.

நான் பெரிது நீ சிறிது: எனக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்பை நான் ஏன் நழுவவிட வேண்டும்; என்ற வழமையான பச்சைச் சுயநலமே ஆலோசனையின்போது மேலோங்கி நின்றது. அத்தகைய பின்னணியில் விட்டுக்கொடுப்புக்கோ ஒற்றுமைக்கோ எவ்வாறு இடமிருக்கும்?

யாழ்ப்பாணம், வன்னி போன்ற தமிழர்கள் ஒரே தொடர் நிலப்பரப்பில் வாழும் மாவட்டங்களில் தமிழர்கள் தமக்குள் நாடாளுமன்ற ஆசனங்களுக்குப் போட்டியிடுவது வேறு. எப்படியோ தமிழர்கள்தான் பெரும்பாலான ஆசனங்களைப் பெறுவர் என்றிருக்கலாம்.

ஆனால், திருகோணமலை, அம்பாறை போன்ற தமிழர்களின் எண்ணிக்கை குறைந்த மாவட்டங்களில் தமிழ் அரசியல்வாதிகள் மத்தியில் போட்டியும் பூசலும் நிலவினால், தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் முற்றாகவே இல்லாமற் போய்விடும்.

இதனை உணர்ந்தாவது தமிழ் அரசியல்வாதிகள் சுயநலத்தைத் துறக்க முன்வரவில்லை. சுயநலமும் பிளவுபட்டு நிற்பதும், ஒற்றுமைப்படாது இருப்பதும் தமிழர்களின் இரத்தத்தில் ஊறிவிட்டன. அதனால், அவர்கள் எல்லோருமே மக்கள் நலனுக்கு உழைப்பதாகக் கூறத் தகுதியற்றவர்கள் என்றாகிறது.

தமிழ் அரசியல் வாதிகளின் ஒற்றுமையின்மை என்பது நீண்ட காலச் சாபக்கேடு. அந்தச் சாபக்கேட்டை தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு சிங்களத் தலைவர்கள் தாம் நினைத்தவற்றைத் தமிழ் மக்கள் மீது திணித்தார்கள்; திணிக்கிறார்கள் - ஏமாற்றினார்கள்; ஏமாற்றுகிறார்கள்.

தமிழர்களின் பலவீனம் சிங்களவர்களின் பலம் அல்லது அதிகாரமாக மாறி வருவதை தமிழ் அரசியல் வாதிகள் எப்போது தான் உணரப் போகிறார்கள்? அதுவரை தமிழ் மக்களுக்கு விமோசனம் என்பது வெகுதூரத்திலே நின்று கண் சிமிட்டி ஏளனம் செய்யும்.

ஐயகோ! தமிழினமே!! நீ சுயநலத்திலும் சந்தர்ப்பவாதத்திலும் இருந்து எப்போது விடுபடப்போகிறாய்? அப்போதுதான் உனக்கென்று ஓர் எதிர் காலம் பிறக்கும்!

---

விதைப்பு நெருங்கும் சமயம்

# விதை நெல் இனங்களுக்கு இங்கு பெரும் தட்டுப்பாடு!

சண்டிலிப்பாய்,செப்.2

தாழ்வான பள்ளக் காணிகளில் காலபோக நெல் விதைப்புக்கு பயன்படுத்தப்படும் நெல் வர்க்கங்களான மொட்டைக் கறுப்பன், பெரிய வெள்ளை, 'ஏச்-4' ஆகிய விதை நெல் இனங்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது.

காலபோக நெல் விதைப்பை இம்மாத நடுப்பகுதியில் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருப்பதால் தாழ்வான வயல்களில் நெல் விதைப்பை மேற்கொள்வதற்கு மேற்படி விதை நெல் இனங்களை விவசாயிகள் தேடி அலைகின்றனர்.

கடந்த வருடம் காலபோக நெற் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளின் நெற்செய்கை அறுவடை செய்யும் நேரத்தில் பெய்த பெரு மழையினாலும் வெள்ளத்தினாலும் பெருமளவு பாதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இதனால் இந்தப் பாரம்பரிய விதை நெல் இனங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த விதை நெல் இனங்களின் விலையும் மிகவும் அதிகரித்துள்ளது. (ஐ-135)

## நவீன சந்தை கட்டடத் திருத்த வேலை

நல்லூர்,செப்.2

வன்செயல்களால சேதமடைந்த யாழ்.நவீன சந்தைக்கான புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கஸ்தூரியார் வீதியின் கிழக்குப் பக்கமாக ஆஸ்பத்திரி வீதியை அண்டியுள்ள மேற்படி சந்தையின் பகுதி முற்றாகவே இடிந்து சேதமுற்றிருந்தது. நீண்டகாலமாக சேதமுற்றுக் கிடந்த இக்கட்டடப் பகுதிக்கான திருத்த வேலைகளை மாநகர சபை மேற்கொண்டுள்ளது. (ஐ-111)



கச்சாய் வினோபா சனசமூகநிலையத்தின் கீழ் இயங்கும் பொது நூலகத்தை சாவகச்சேரி பிரதேச சபை பொறுப்பேற்றுள்ளது. இது தொடர்பான உத்தியோகபூர்வ வைபவத்தில் தென்மராட்சி பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளை, பிரதேச சபை செயலாளர் பாலச்சந்திரன், மாதர் சங்கத் தலைவி செல்வி வேலுப்பிள்ளை, நிலையச் செயலாளர் முத்துலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். நூலகத்தின் பொறுப்பை பிரதேச சபை ஏற்றுக்கொண்டபோது எடுக்கப்பட்ட படம் (ஐ-10)

## விவசாயப் பாடசாலை அனுமதிக்கான பரீட்சை

யாழ்ப்பாணம்,செப்.2

விவசாயப் பாடசாலை அனுமதிப் பரீட்சைக்கு யாழ்.மாவட்டத்தில் இருந்து விண்ணப்பித்தவர்களுக்கு இம்மாதம் 16ஆம் திகதி யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் பரீட்சை நடைபெறவுள்ளது.

இவர்களுக்கான அனுமதி அட்டைகள் பேராதனை விவசாயத் திணைக்களத்தினால் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்காத பரீட்சார்த்திகளும் குறிப்பிட்ட தினத்தில் தமது தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளித்துப் பரீட்சைக்குத் தோற்றமுடியும் என்று யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சின்னத்துரை அறிவித்துள்ளார்.

பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

எஸ்.அம்பலவாணர் (நீராவியடி, யாழ்.), கே.ஏகாம்பரம் (அரியாலை), பி.அனோஜா (அச்சுவேலி தெற்கு), ஜி.அபிராமி (7ஆம் கட்டையடி, சங்கானை),ஜே.கணேசமூர்த்தி (கோப்பாய் தெற்கு), பி. இளமயூரன் (மஞ்சத்தடி தெற்கு, இணுவில்), எஸ். கார்மேகவண்ணன்(புலோலி தெற்கு), எம்.ஜே. கருணைநாயகம் (செனீ. ஜோன்ஸ் கல்லூரி, யாழ்), பி.கிட்ணபிள்ளை (சட்ட நாதர்வீதி, நல்லூர்), கே.கிரியா (ஏ.வி.றோட், அரியாலை)-

வை. கீதன்(கலுகந்தா ஒழுங்கை, சுண்டுக்குளி), ஏ.மார்க்கண்டு (கே. கே.எஸ். வீதி, இணுவில்), யு மகாலிங்கம் (யாழ்.வீதி, பலாலி றோட், யாழ்.), எஸ்.பார்த்தீபன் (பிறவுண் றோட், யாழ்), எம்.பத்மநாதன் (புது வீதி, அத்தியடி), ஜே. நடேசலிங்கம் (அரசடிறோட், சங்கானை), பி.நக்கீரன் (வதிரி, கரவெட்டி), எஸ். ரட்ணவேலு(சுதுமலை தெற்கு),வை.இராஜகோபால் (ஸ்ரான்லி றோட், யாழ்.), எஸ்.சுதர்யன் (சித்திரமேனி, இளவாலை).

(ஐ-10)



திருநெல்வேலி பகவான் ஸ்ரீ சத்திய சேவா நிலையத்தில் அண்மையில் ஊனமுற்றோருக்கான விழா நடைபெற்றது. இந்த விழாவில் கலந்து கொண்ட ஊனமுற்றோரின் ஒரு பகுதியினரை படத்தில் காணலாம்.

*படம்:-பா.நந்தகுமார் (அரியாலை செய்தியாளர்)*

## பொலீஸ் பதவி உயர்வுகளில் அரசியல் தலையீடு வேண்டாம்!

கொழும்பு,செப்.2

எதிர்வரும் தினங்களில் நடைபெறவுள்ள பொலீஸ் பதவி உயர்வு வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சைகளின்போது அரசியல் தலையீடின்றி தகுதி அடிப்படையில் பதவிகள் வழங்கப்பட வேண்டும் என்று கீழ்மட்ட பொலீஸ் அதிகாரிகள் பொலீஸ்மா அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

34 உதவிப் பொலீஸ் அதிபர்களும் 150 பிரதம பொலீஸ் பரிசோதகர்களுக்குமான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் தினங்களில் பொலீஸ் தலைமையகத்தில் நடைபெற உள்ளன.

எனவே சேவைக்காலம், திறமை, யுத்தப் பிரதேசத்தில் சேவையாற்றிய தகைமை இவை அனைத்தையும் கருத்திற்கொண்டு பதவி உயர்வுகள் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் பொலீஸ் அதிபரைக் கேட்டுள்ளனர்.

(ஐ-186-ரி)

## நலன்புரி முகாம்களில் நாடகம் மேடையேற்றம்

யாழ்ப்பாணம்,செப்.2

அரங்க செயற்பாட்டுக் குழுவினர் பிரதேச செயலக பிரிவுகள் தோறும் உள்ள நலன்புரி முகாம்களில் 'கோலம் கொண்டோம்' என்ற மர நிழல் நாடகத்தை கடந்த மாதம் முதல் நடத்தி வருகின்றனர்.

இடம்பெயர்ந்த மக்களின் நலன் கருதி இந்த நாடகம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சிரிப்பதனூடாக மன இறுக்கங்களில் இருந்து விடுபட்டு சிறிது நேரம் சந்தோஷமாக இருந்து சிந்திப்பதை இந்த நாடகம் இலக்காகக் கொண்டுள்ளது. இதில் ஆடல், பாடல், விளையாட்டு, நடிப்பு போன்ற பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. பிரதேச செயலர் பிரிவுகளில் 10 தடவைகள் நடத்தப்பட்டுள்ள இந்த நாடகம் நலன்புரி முகாம்களில் தொடர்ந்து இரு மாதங்கள் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-173)

## புதிய ஓய்வூதியக் கொள்கை வகுக்க விசேட குழு நியமனம்

கொழும்பு,செப்.2

ஓய்வூதியம் தொடர்பான தேசியக் கொள்கை ஒன்றை வகுப்பதற்கும், புதிய ஓய்வூதியத் திட்டம் ஒன்றை வகுத்து அதன்மூலம் முரண்பாடுகளை நீக்கவும் நலன்புரித் திட்டங்களை அமுல் செய்யவுமென குழு ஒன்று ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளது.

முதுநிலை நிர்வாக சேவையாளரான பீ.ஏ.சேனாரத்ன தலைமையிலான இக்குழு தனது சிபார்சுகளை அடுத்த ஆண்டு பெப்ரவரி 28ஆம் திகதியளவில் சமர்ப்பிக்கும் என்று ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குழு ஓய்வூதியக் கொடுப்பனவுகளில் உள்ள முரண்பாடுகள், ஏற்றத்தாழ்வுகள் என்பனவற்றை ஆராய்ந்து அவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் தனது சிபார்சுகளைச் செய்யும். ஓய்வூதியம் வழங்கப்படுவதில் உள்ள தாமதங்கள், விதவைகளுக்கான ஓய்வூதிய நலன்களிலுள்ள குறைபாடுகள் பற்றியும் குழு ஆராயும். ஓய்வூதியர்களுக்கான சமூகப் பாதுகாப்பு திட்டம் ஒன்றும் வரையப்பட்டுள்ளது. மருத்துவவசதிகள், வீடு, பொழுதுபோக்குக்கான வசதிகள் போன்றவைபற்றியும் சிபார்சுகள் செய்யப்படும். (ஐ-6-20)

## கொழும்புத்துறை ஆலயப் பகுதிக்கு செல்ல அனுமதி

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்துக்கு தினமும் குறிப்பிட்ட நேரத்தில் சென்றுவர பரிபாலன சபையினருக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகத தெரிய வருகிறது.

மக்கள் இடம்பெயர்ந்ததை அடுத்து இந்த ஆலயம் பூசை வழிபாடுகளின்றிப் பூட்டப்பட்ட நிலையில் உள்ளது. அத்துடன் மஹோற்சவத்துக்காக ஏற்றப்பட்ட கொடிச் சேலை இன்னமும் இறக்கப்படாமல் கொடித் தம்பத்திலேயே உள்ளது.

ஆலயப் பகுதிக்குச் சென்றுவர அனுமதி கேட்டு பரிபாலன சபையினர் மேலதிக அரச அதிபர் ஊடாகப் படைத்தரப்பிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர். அதனையடுத்தே ஆலயப் பகுதிக்குச் சென்றுவர அனுமதி கிடைத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆவணிச் சதுர்த்தி தினமான நேற்று இந்த ஆலயத்தில் பூசை நடத்த ஏற்பாடாகி இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

## சந்நிதி ஆலய உற்சவகால நிகழ்வுகள்

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் விசேட நிகழ்வுகளில -

இன்று சனிக்கிழமை 'கழலுடன் சேர்த்தென்னைக் காத்தருள்வாய்' எனும் பொருளில் ஆ.சிவநாதன் வழங்கும் சொற்பொழிவும் -

நாளை ஞாயிற்றுக்கிழமை 'புராண இதிகாச முத்துக்கள்' எனும் தலைப்பில் பிரம்மஸ்ரீ. காரை. கு.சிவ ராஜசர்மா வழங்கும் சொற்பொழிவும்-

நாளைமறுதினம் திங்கட்கிழமை 'பக்தர்களும் சித்தர்களும்' எனும் பொருளில் திருமதி மங்கையர்க்கரசி சிற்றம்பலம் நிகழ்த்தும் சொற்பொழிவும் -

இடம்பெறவுள்ளன. (ஐ-க-30-173)

## தேர்தல் சுவரொட்டிப் போரை கண்டிக்கிறார் மகாநாயக்கர்

கொழும்பு,செப்.2

சுவரொட்டிகள மூலம் தம்மை முதன்மைப்படுத்தும் அரசியல் வாதிகளை அஸ்கிரிய பீட மகா நாயக்கர் கண்டித்துள்ளார்.

தேர்தல் பிரசாரத்துக்கு பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி போன்ற சாதனங்களையே அரசியல் வாதிகள் பயன்படுத்தவேண்டும். அதை விடுத்து சுவரொட்டிப் போர் நடத்துவதன் மூலம் மரணங்களும், அழிவுகளுமே ஏற்படுகின்றன. தேர்தல் அமைதியாக நடைபெறுவதற்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று அஸ்கிரிய பீட மகாநாயக்கர் ஸ்ரீ புத்திர சித்த தேரர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஐ-6-20)

## கொத்தணி வடிசாலைகளுக்கு 50 வீத மதுவரிச் சலுகை

அரியாலை,செப்.2

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணிகளால் நடத்தப்பட்டு வரும் வடிசாலைகளுக்கு ஐம்பது வீத மதுவரித் தீர்வைச்சலுகை வழங்கப்பட்டுள்ளது.

இந்த மதுவரித் தீர்வைச்சலுகைக் குறைப்பு கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதாக மதுவரி ஆணையாளரின் சுற்றறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றறிக்கை கடந்த ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாணத்திற்கும் கிடைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

### உதயவாக்கு

தன் சக்திகளிலிருந்து சாத்தியமான அளவு சாறு பிழிவதே ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கை இலட்சியமாயிருத்தல் அவசியம்.

- *ரிக்கட்*

### நாளை

ஆவணி 18
ஞாயிற்றுக்கிழமை
*திதி:* பஞ்சமி
முற்பகல் 11.20 வரை
*நட்சத்திரம்:* சுவாதி
பிற்பகல் 5.22 வரை
ஷஷ்டி விரதம்
*சுபநேரம்:* 9.05 - 10.35
*ராகுகாலம்:* 4.35 - 6.05
(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ உயர் குடும்பத்தைச் சேர்ந்த சைவபோசன, 1969ஆம ஆண்டு செவ்வாய்க் குற்றம் நிரம்பிய (கிரகபாவம் 55) கொண்ட, அழகிய உயர்குணம் மிக்க பட்டதாரி ஆசிரியைக்கு நற் பண்புகள் நிறைந்த தகுதியுடைய மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். அனைத்து விவரங்களும் உள்ளடங்கலாக உடன் தொடர்புகளுக்கு: விள.இல.1089, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (77913)

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச உத்தியோகம் பார்க்கும் பெற்றோர் 28 வயது நிரம்பிய 5' 3'' உயரமான பொது நிறமுள்ள, தமிழ், ஆங்கிலம், உயர்கல்வி கற்ற, நற்குணமுள்ள மணமகளுக்கு உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ, தொழில் புரியும் நற்பண்புள்ள மணமகனை கௌரவ குடும்பத்திலிருந்து எதிர்பார்க்கின்றனர். கத்தோலிக்கம்/கிறிஸ்தவம் விரும்பத்தக்கது. எதிர்பார்க்கும் சீதனம் உள்ளடங்க சகல விவரங்களுடன் தொடர்புகளுக்கு: விளம்பர இல. 1086, மே/பா உதயன். (77720)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த (B.Sc. Computer) நிரந்தர வதிவிட விசா பெற்று கனடாவில் தொழில் பார்க்கும் 14 பாவம், 32 வயது, மிருகசீரிட 1ஆம் பாதமுடைய மணமகனுக்கு பட்டதாரி CIMA படித்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். இங்கு வந்து மணம்முடித்து ஸ்பொன்ஸரில் அழைத்துச்செல்வார். தொடர்பு: இல. 1088, மே/பா உதயன். (77854)

## மணப்பெண் தேவை

நோர்வேயில் தொழில் புரியும், வயது 37 நிரம்பிய கிறிஸ்தவ மணமகனுக்கு அழகிய நற்குணமுள்ள மணப்பெண் தேவை, உடன் தொடர்பு கொள்ளவும். தொடர்புகளுக்கு: கு. திருவிளங்கம், வாசிகசாலை ஒழுங்கை, 3ஆம் கட்டையடி, கல்வியங்காடு. (77840)

## இறைச்சிக்கோழி விற்பனை

சேவல், கல்பேட மொத்தமாகவும் சில்லறையாகவும விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில் சுன்னாகம் (கண்ணா வீடியோ சென்ரர் வளவு). (77644)

இறைச்சிக்கோழி சுத்தம்செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (77909)

## விற்பனைக்கு

HERO HONDA சிவப்பு நிறமுடைய மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு (CD 100 SS) 500 km ஓடியது. தொடர்பு: சு.சிவானந்தம் யமுனா, முள்ளிஒழுங்கை, ஆனைக்கோட்டை. (77873)

நல்ல நிலையிலுள்ள Sisil R80 குளிர்சாதனப்பெட்டி, சிங்கர் தையல்மெசின் மற்றும் தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள், கல்டா, ரெமிங்டன், பசிட், ஒலிவிட்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 8/1, அம்மன்வீதி (வைரவர் கோயில் அருகில்), கந்தர்மடம், யாழ்ப்பாணம். (77911)

நல்ல நிலையில் ஒருவர் பாவனையில் உள்ள HONDA CD 50 மோட்டார் சைக்கிள் (இன்டிக் கேற்றர் மொடல்) விற்பனைக்கு உண்டு. த.நவரட்ணவேல், 14, அன்னசத்திர லேன், யாழ்ப்பாணம். (77897)

நகைக்கடைக்கு பாவிக்கக்கூடிய பெரிய இரும்புப் பெட்டி, நடக்க முடியாதவர்களை இருத்தித்தள்ளிச் செல்லக்கூடிய சில்லுப் பூட்டிய கதிரை என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 249(105), கே.கே.எஸ்.வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம். (77928)

## O/L ஆங்கிலம்

2000ஆம் ஆண்டு பரீட்சையில் தோற்றுபவர்களுக்கான துரித ஆங்கில வகுப்பு புதன் மாலை 5 மணிக்கும், வெள்ளி காலை 6 மணிக்கும் நடைபெறும். K. சோமசுந்தரம், சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (77846)

## தவறிவிட்டது

மகாலிங்கசிவம் மதிதரன் என்பவருடைய மூக்குக் கண்ணாடி யாழ். பல்கலைக்கழகத்திற்கும் சிவில் அலுவலகத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் முருகன் ரெக்ஸ்ரையில் (மலாயன் கபேக்கு முன்பாக), யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (77912)

ந.சிவகுமார் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் (இல. 583200118v), றைவிங் லைசன்ஸ் (இல.412508) 22-08-2000 அன்று தவறிவிட்டன. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். ந. சிவகுமார், மானிப்பாய வீதி, உடுவில் பிராய். அல்லது புனிதவதி நகைக் கடை 70 C, கன்னாதிட்டி என்னும் விலாசத்தில் ஒப்படைத்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன். (77918)

உசன்தெற்கு, மிருசுவில் எனும் முகவரியைக் கொண்ட கதிரேசன் தம்பிப்பிள்ளை என்பவரது தே.அ.அ.(இல.410781131v), வி.அ.அட்டை (இல.091050076) ஆகிய இரண்டும் சங்கானை மீன்சந்தையில்30-08-2000 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வலி.மேற்கு பிரதேச சபை உப அலுவலகம், சங்கானை எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (77894)

வட்டு.மேற்கு, வட்டுக்கோட்டை (பிளவத்தை) எனும் இடத்தைச் சேர்ந்த கயிலாயநாதன் திருக்குமார் என்பவருடைய தே.அ.அ. (இல.782623524v), விசேட.அ. அட்டை (இல.0904020704) என்பன நவாலிக்கும் வட்டுக்கோட்டைக்கும் இடையில் 28-08-2000 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் அல்லது தகவல் அறிந்தவர்கள் மனிதாபிமான அடிப்படையில் மேற்கூறிய விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (77821)

## சனீஸ்வர மாற்றம்

எங்கும் விற்பனையாகிறது. வேலணை சோதிடர் V.A. சிவராசா வெளியிட்டது என்று கேட்டு வாங்குங்கள். மலிவுப்பதிப்பு ரூபா 10 இல் எல்லா இராசிகளுக்கும் பலாபலன்கள், சனீஸ்வர வக்கிரக மற்றும் நிவர்த்தியினால் உங்கள் எதிர்காலம் பற்றி அறியுங்கள். (77898)

## விற்பனைக்கு

SONY 27" T.V., குளிர்சாதனப் பெட்டி (SINGER DOUBLE DOOR) புதிய KEN WOOD (MAJAV) சகல உபகரணங்களுடன் YAMAHA GENERATOR 2000 KV. 650 KV Cane baby cot, Pantry WALL CUBBOARD மற்றும் வீட்டுத் தளபாடப் பொருள்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 52 B, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். T.P. 2549. (77778)

## நாய்க்குட்டிகள் விற்பனை

DOBERMANN PINCHER நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (77908)

## ADVANCED ENGLISH

A/L, பல்கலைக்கழக அனுமதி பெற்றோர், ஆசிரியர், உத்தியோகத்தர்களுக்கான ஆங்கில வகுப்பு திங்கள், புதன் காலை 6 மணிக்கு நடைபெறும். K.சோமசுந்தரம், சந்தைகிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (77847)

## பாடசாலை மீண்டும் பழைய இடத்தில்

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் இடம்பெயர்ந்து மாலை வேளையில் இயங்கி வந்த வளவிளான் குட்டியபுலம் அ.த.க.பாடசாலை நேற்று முதலாம் திகதியில் இருந்து தனது சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

இடம்பெயர்ந்த மக்களில் அநேகமானோர் மீண்டும் குட்டியபுலம் கிராமத்துக்கு மீளக்குடியமரச் சென்றுள்ளதால் இப்பாடசாலையும் அதன் சொந்த இடத்தில் ஆரம்பித்து இயங்கி வருகின்றது.

## மாணவருக்கு அடையாள அட்டை

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த சரசாலை ஸ்ரீகணேச வித்தியாலயத்தின் ஜி.சீ.ஈ. சாதாரண தர வகுப்பு மாணவர்கள் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நாளை மறுதினம் திங்கட் கிழமை தொடக்கம் கிழமை நாள்களில் தமது அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அதிபர் கே.எம்.சாம்பசிவம் தெரிவித்துள்ளார். (ஜ-10)

## தொடர்புகொள்ளக் கோரிக்கை

பின்வருவோரை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு அதன் யாழ். அலுவலகம் அறிவித்துள்ளது.

* பாலசுப்பிரமணியம் (அச்சுவேலி)
* கோபாலபிள்ளை கோகிலகாந்தன் (குருக்கள் மாவடி, மிருசுவில்). (ஜ)

## மாவட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டி

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட தமிழ்மொழித்தினம் எதிர்வரும் 9ஆம், 10ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. 9ஆம் திகதி சனிக்கிழமை - ஆக்கம், எழுத்து (பிரிவு 1), கட்டுரை (பிரிவு 2,3,4,5), கட்டுரைச் சுருக்கம் (பிரிவு 4), தமிழியற் கட்டுரை (பிரிவு 5), குறுநாடக ஆக்கம் (திறந்தபோட்டி), கவிதை ஆக்கம், சிறுகதை ஆக்கம் (பிரிவு 4,5) விவாதம், தமிழ் அறிவு, வினாவிடை (திறந்தபோட்டி) என்பனவும் -

10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை - வாசிப்பு (பிரிவு1,2) ஆக்கத்திறன் வெளிப்பாடு, கதைகூறல் (பிரிவு1,2) பேச்சு, பாஓதல், நடனம் தனி (பிரிவு 1,2,3,4,5) இசையும் அசையும் (பிரிவு1) இசை தனி (பிரிவு 2,3,4,5) என்பனவும் -

இசை (குழு) இலக்கிய நாடகம், வில்லுப்பாட்டு, சிறுவர் நாடகம், ஆடற்காதை, நாட்டுக்கூத்து (வடமோடி, சிந்துநடை, தென்மோடி), இசை நாடகம், விசேட கூத்து என்பன திறந்த போட்டியாகவும் நடைபெறவுள்ளன. (ஜ-152)

## இன்று முதல் கல்விக்கல்லூரிக்கு நூல்கள் சேகரிப்பு

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் நூலகவாரம் இன்று சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 6ஆம் திகதி புதன் கிழமை வரையும் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இந்த நூலகவாரத்தை ஒட்டி நூல்களைச் சேகரிப்பதற்கெனத் தீர்மானிக்கப்பட்ட இடங்களுக்கு கல்லூரியின் மாணவர்கள் சென்று அவற்றைச் சேகரிக்கவுள்ளனர். இதன்படி இன்று சனிக்கிழமை உடுவில், கந்தரோடை, சுன்னாகம், அளவெட்டி, இணுவில், வட்டுக்கோட்டை, சித்தன்கேணி ஆகிய இடங்களிலும் -

நாளை ஞாயிற்றுக்கிழமை வடமராட்சிப் பகுதியிலும் -

மறுநாள் திங்கட்கிழமை யாழ். பல்கலைக்கழகம் உட்பட யாழ் நகரப் பகுதியிலும் -

செவ்வாய்க்கிழமை உரும்பிராய், கோப்பாய், நீர்வேலி ஆகிய இடங்களிலும் -

மாணவர்கள் நூல்களைச் சேகரிக்கவுள்ளனர்.

வருகை தரும் மாணவர்களிடம் தங்களால் வழங்கக்கூடிய நூல்களை வழங்கி கல்லூரியின் நூலக விருத்திக்கு உதவிடுமாறு அதன் பீடாதிபதி கேட்டுள்ளார். (ஜ-10-73)

## கருத்தரங்கு

வலிகாமம் வலயத்தைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சிக் கருத்தரங்குகளும், செயலமர்வுகளும் இன்று சனிக்கிழமை நடைபெற உள்ளன.

7ஆம், 10ஆம் தரங்களுக்கான சித்திரப்பாட கருத்தரங்கு மானிப்பாய் இந்துக்கல்லூரி, ஆசிரிய வள நிலையத்தில் இன்றும் நாளையும்-

9ஆம், 10ஆம் தரங்களுக்கான உடற்கல்வி, சுகாதார பாடக்கருத்தரங்கு - மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையிலும் -

10ஆம் 11ஆம் தரங்களுக்கான விவசாய விஞ்ஞானம், தொழில் நுட்பத்திறன் பாடங்களுக்கான கருத்தரங்குகள் மானிப்பாய் இந்துக்கல்லூரியிலும் - 10ஆம் தரத்துக்கான வணிகக்கல்விப் பாடக் கருத்தரங்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் - இன்று சனிக்கிழமை நடைபெற உள்ளன.

## கால்நடைகள் விற்பனைக்கு

**கறவைப்பசுக்கள், கன்றுகள், மறி ஆடுகள், ஆட்டுக்கடாக்கள் விற்பனைக்குண்டு**

கால்நடைகளின் விவரங்கள், நிர்ணய விலை என்பனவற்றை சிவன்கோயில் வீதி, சித்தன்கேணியில் அமைந்துள்ள எமது பண்ணையில் 01-09-2000ஆம் திகதி முதல் 16-09-2000ஆம் திகதிவரை காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை பார்வையிடலாம். மேலதிக விவரங்களுக்கு எமது பண்ணை முகாமையாளருடன் தொடர்புகொள்ளவும்.

கொள்வனவு செய்பவர்கள் கால்நடையைப் பார்வையிட்டு அதற்கான பெறுமதியை கீழ்க்காணும் விலாசத்தில் அமைந்துள்ள சங்க அலுவலகத்தில் செலுத்தியதும் கால்நடைகளைப் பெற்றுச் செல்வதற்குரிய ஏற்பாடுகள் செய்துதரப்படும்.

தாங்கள் தெரிவுக்கு முந்துங்கள்

பொது முகாமையாளர்,
*யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.*
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

31-08-2000 (12786)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

**திருமதி சபாரத்தினம் நாகம்மா**
(மயிலங்காடு வடக்கு, மாவிட்டபுரம்)

மலர்வு 06-02-1915 — உதிர்வு 04-07-2000

எங்கள் அன்புத் தெய்வமே!
தங்கள் பிரிவால் துயருறுகின்றோம்!!
ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திப்போம்!!!

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 02-09-2000 மானிப்பாய் கட்டுடை தீர்த்தக் கரையிலும் சபிண்டீகரண நிகழ்வுகள் நாளை (03-09-2000) ஞாயிற்றுக்கிழமை அளவெட்டியிலுள்ள தற்காலிக வாசஸ்தலத்திலும் நடைபெறும். இந்நிகழ்வுகளில் கலந்து உற்றார், உறவினர், நண்பர்கள் அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன் மதியபோசனத்தில் பங்குகொள்ளுமாறும் வேண்டுகின்றோம்.

கணவர், மகன்
(குஞ்சன்)

*அளவெட்டி.* (77930)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை கனகசுந்தரம்

[ஓய்வுபெற்ற தொழில் நுட்ப உதவியாளர் (T.A), சிறீலங்கா கூட்டுத்தாபனம் (C.D.E)]

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் துனுக்காயில் வசித்தவருமாகிய வேலுப்பிள்ளை கனகசுந்தரம் 03-08-2000 அன்று துனுக்காயில் காலமானார்.

அன்னார் இளைப்பாறிய அதிபர் இ.வேலுப்பிள்ளை, காலஞ்சென்ற இளைப்பாறிய ஆசிரியை வேபுஸ்பராணி ஆகியோரின் அன்பு மகனும் தெல்லிப்பழையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மா.நடராசா (ஆயுர்வேத வைத்தியர்), ந.அன்னபூரணம் ஆகியோரின் மருமகனும், நளாயினிதேவியின் (பபி) அன்புக்கணவரும் காலஞ்சென்ற துஷியந்தன், பிரதீப், அமல்ராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்ற வேதநாயகி, காலஞ்சென்ற ஆலாலசுந்தரம், குமரகுருபரசுந்தரம் (வ.பி.போ.சபை, கோண்டாவில்), பரமேஸ்வரநாயகி (ஆசிரியை, இந்து மகாவித்தியாலயம் கோண்டாவில்), அமரசோதி (ஆசிரியை, நல்லூர் கிழக்கு விக்கினேஸ்வரா வித்தியாலயம்), பஞ்சாட்சரம் (இந்தியா) ஆகியோரின் சகோதரனும், கணபதிப்பிள்ளை (A.K.R.மில் உரிமையாளர், கோண்டாவில்), மகேந்திரராசா, தில்லைநாயகி (நெடுந்தீவு), பிறேமகுமாரி, கனகேஸ்வரன் (ஆயுர்வேத வைத்தியர், யாழ்ப்பாணம்) காலஞ் சென்ற தர்மானந்தராசா, காலஞ் சென்ற சறோஜினிதேவி, காலஞ்சென்ற சொர்ணலீலா, சித்திரலேகா (பண்டாரவளை), ஜெயபாலகௌரி (ஜேர்மனி), சிறீகணேஸ் (கனடா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் துனுக்காயில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

வே.குமரகுருபரசுந்தரம்
(நேரு - சகோதரன், வ.பி.போ.சபை-யாழ்ப்பாணம்)
ந.கனகேஸ்வரன்
(மைத்துனர் - ஆயுர்வேத வைத்தியர்)

*இல.223, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (77917)

### திரவியம் அல்வினப்பர்

குருநகர், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திரவியம் அல்வினப்பர் நேற்று (01-09-2000) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரேசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பெரியதம்பி, ரமணி (இந்தியா), றஜனி, செல்வநாயகம், செல்வம் (இந்தியா), திலீபன் (சுவிஸ்), மாமாத்தம்பி (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தகப்பனும் ஞானப்பிரகாசம் (ஆசிரியர், பாசையூர்), பஞ்சன், யூலி, திலகவதி, லில்லி, புனிதராணி, ஜிக்கி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று காலை 10 மணியளவில் இல. 16/8, மத்திய கிழக்கு வீதியில் அமைந்துள்ள இல்லத்திலிருந்து பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச.பஞ்சன்
(மருமகன்)

*16/8, மத்தியகிழக்கு வீதி,*
*குருநகர்,*
*யாழ்ப்பாணம்.* (77927)

# நயினாதீவு நீர் விநியோகத்துக்கு 16 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

வேலணை, செப். 2

நயினாதீவுப் பகுதியிலுள்ள மக்களுக்கு குடி தண்ணீர் விநியோகத்தினை மேற்கொள்வதற்கென வேலணைப் பிரதேச சபைக்கு வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபை பெட்டியுடன் கூடிய ரைக்ரர் ஒன்றையும் கண்ணாடி நாரிலான நீர்த்தாங்கிகள் இரண்டையும் மற்றும் நீரிறைக்கும் இயந்திரத்தையும் கொள்வனவு செய்யவென 16 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக வேலணைப் பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகரகுருமூர்த்தி தெரிவித்தார்.

நயினாதீவுப் பகுதிக்கு குடி தண்ணீர் விநியோகிக்கும் சேவையானது பிரதேச சபையின் நயினாதீவு உப அலுவலகத்தினூடாகவே நடைமுறைப்படுத்தப்படும். நயினாதீவு 5 ஆம் வட்டாரம் தீர்த்தக்கரை நன்னீர் கிணற்றிலிருந்தே குடிதண்ணீர் ஏற்றப்பட்டு நயினாதீவுப் பகுதியில் உள்ள சகல இடங்களுக்கும் விநியோகிக்கப்படும். இவ்வருட இறுதிக்குள் இச்சேவை ஆரம்பிக்கப்பட்டு விடும் என்றும் அவர் தெரிவித்தார்.

வேலணை பிரதேச சபைத் தலைவர், மற்றும் நயினாதீவு பகுதி மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமுமாகிய கே. எஸ். டக்ளஸ் தேவானந்தவுடன் நயினாதீவுப் பகுதி மக்கள் எதிர்நோக்கும் குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பாக முறையிட்டதை அடுத்தே அவரது முயற்சியினால் இந்நிதி ஒதுக்கப்பட்டதாக பிரதேச சபைத் தலைவர் மேலும் தெரிவித்தார். (ஐ-167)

# மாடுகளின் தொண்டை அடைப்பு நோய்க்கான தடுப்பு மருந்து சண்டிலிப்பாயில் விநியோகம்

சண்டிலிப்பாய், செப். 2

சண்டிலிப்பாய் டச்சு வீதியில் இயங்கி வரும் சங்கானை கால் நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் மாடுகளுக்குத் தொண்டை அடைப்பு நோய்க்கான தடுப்பு ஊசி மருந்து போடப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் மாரி மழை காலத்தில் மாடுகள் இந்தத் தொண்டை அடைப்புநோயினால் பாதிக்கப்படும் அபாயம் இருப்பதால் இந்தத் தடுப்பு ஊசிமருந்தைப் போடுவது நல்லது என்று சங்கானை கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி ச. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

இதேவேளை—

இந்த அலுவலகத்தில் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் முற்பகல் கோழிகளுக்கு 'ரணிகற்' எனப்படும் கொள்ளை நோய்க்கான தடுப்பு சொட்டு மருந்து வழங்கப்பட்டு வருகின்றது. அம்மை நோய்க்கான தடுப்பு ஊசி மருந்தும் போடப்பட்டு வருகின்றது. அண்மையில் கோழிகள் தொற்று நோயினால் இப் பிரிவில் பெரும் எண்ணிக்கையில் இறந்துள்ளன. நோய்த் தடுப்பு மருந்து கொடுக்கப்பட்ட கோழிகளும் இறந்துள்ளதாகக் கூறப்படுவது பற்றி செய்தியாளர் கால்நடை வைத்திய அதிகாரியிடம் தெரிவித்த போது அதற்கு அவர் — ''கோழிகளுக்கு கொள்ளை நோய் வந்த பின்பே பலர் இங்கு அவற்றை மருந்து பெறுவதற்காகக் கொண்டு வருகின்றனர். நோய் வர முன்னர் இந்தத் தடுப்பு மருந்து முறைப்படி கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டு இரண்டு கிழமைகளின் பின்பே அவற்றிற்கு நோய் எதிர்ப்புச் சக்தி ஏற்படும். சிலர் தனியார் பாமசிகளில் கூட்டுக் குளிகையை வாங்கிக் கொடுத்துவிட்டு தடுப்புமருந்து கொடுத்ததாக இங்கு வந்து கூறுகின்றார்கள். இதனால் இந்தத் தொற்றுநோயைத் தடுக்க முடியாது. கொள்ளை நோய்க்கு (ரணிக்கற்)கொடுக்கப்படும், சொட்டு மருந்து எமது கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகங்களில் மட்டுமே உள்ளது. கால் நடை சுகாதாரத் திணைக்களம் எமக்கு இந்த மருந்தினை வழங்கி வருகின்றது. வேறு தனியார் பாமசிகளில் இந்தத் தடுப்பு மருந்து கிடைப்பதில்லை'' என்று அவர் விளக்கிக் கூறினார். (ஐ-135)

# பொருள்களை விநியோக்க கூ.சங்கத்திடம் லொறிகள் இல்லை

நெல்லியடி, செப். 2

தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து வலிகாமம் மற்றும் வடமராட்சிப் பகுதிகளில் தஞ்சமடைந்துள்ள மக்களின் நலன்கருதி சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பல கிளைகளைத் தற்காலிகமாகத் திறந்து வைத்துள்ள போதிலும், அத்தியாவசியப் பொருள்களை ஏற்றி இறக்க போதிய லொறி வசதிஇன்மையால், விநியோக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் சொந்தமாக இரு லொறிகளை, சேவையில் ஈடுபடுத்தி வந்தது. தற்பொழுது அவற்றுள் ஒன்று சிருடையினரின் பாவனையிலும் வேறொன்று பழுதடைந்தும் உள்ளன. இந்நிலையில் தற்பொழுது, வாடகை லொறி ஒன்றின் மூலமே, கிளைகளுக்கு அத்தியாவசியப் பொருள்கள் ஏற்றி இறக்கப்படுகின்றன.

ஒரே ஒரு லொறியின் உதவியினால், உரிய நேரத்தில் சகல கிளைகளுக்கும் பொருள்களை விநியோகிக்க முடியாமையினால் இடம்பெயர்ந்த மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். (ஐ-109)

# பாடசாலையில் உள்ளோருக்கு வதிவிடவசதி செய்யக் கோரிக்கை

நெல்லியடி, செப். 2

"தென்மராட்சிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து புலோலி தெற்குப் புற்றளை மகாவித்தியாலயத்தில் தங்கியுள்ள மக்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாகக் குடிசைகளை வேறிடங்களில் அமைத்துக்கொடுக்கவும்.

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை மேற்படி பாடசாலையின் அபிவிருத்திச் சபையினர் வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் ஆ. சிவசுவாமியிடம் கையளித்துள்ளனர்.

கடந்த வாரம் பிரதேச செயலரை நேரடியாகச் சந்தித்த அபிவிருத்திச் சபையினர் இடம்பெயர்ந்த மக்கள் இப்பாடசாலையின் வகுப்பறைகளில் கடந்த மூன்று மாதகாலமாகத் தங்கியுள்ளனர் என்றும் இதனால் பாடசாலைச் சூழலில் சுகாதாரச் சீர்கேடு நிலவுவதுடன் மாணவர்களின் கல்வி, ஸ்தம்பிதம் அடைவதாகவும் எடுத்துக் கூறியுள்ளனர்.

எஞ்சியுள்ள குடும்பங்களுக்கு வேறிடத்தில் குடிசைகளை அமைக்க நடவடிக்கை எடுப்பதாகப் பிரதேச செயலர் உறுதியளித்தார். (ஐ-109)

## கூ. சங்க முகாமையாளர்களை மாற்ற ஏற்பாடு

நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் கிளை முகாமையாளர்கள் அனைவரையும் வெவ்வேறு கிளைகளுக்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகளை சங்க நிர்வாகம் செய்து வருகிறது.

இன்று முதல் இது நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. [க-154]

## ஆலயத்துக்கு மின்சாரம்

யாழ்ப்பாணம், செப். 2

வடலியடைப்பு புதராணை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மஹோற்சவ காலங்களில் மின்சாரத்தை வழங்கவென மின்சாரசபை ஜெனரேட்டர் ஒன்றை வழங்கியுள்ளது.

இந்த ஆலயத்துக்கு மின் இணைப்பை வழங்குமாறு வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவரும் வட்டுக்கோட்டைத் தொகுதி ஈ.பி.டி.பி அமைப்பாளருமான ந. திரிலோகநாதன் மின்சார சபையிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். அதனை அடுத்தே மின்சாரசபை ஜெனரேட்டர் ஒன்றை வழங்கியுள்ளது.

இவ்வாலய மஹோற்சவம் இன்று இரண்டாம் திகதி ஆரம்பமாகின்றது. (க)

## சைக்கிள் திருட்டு

நெல்லியடி, செப். 2

சிகை அலங்கரிப்பு நிலையத்துக்குச் சென்றவரின் 6 ஆயிரம் ரூபா பெறுமதியான சைக்கிள் ஒன்று பட்டப் பகல் வேளை திருடிச் செல்லப்பட்டுள்ளது.

இச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் புலோலியில் உள்ள 60 பாகைக் கிணற்றடியில் இடம்பெற்றது.

இது குறித்து சைக்கிள் உரிமையாளர் சி. அருள்மோகன் பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார். (ஐ-109)

## சிங்களத்தில் சுற்றறிக்கை

கொழும்புத்துறை, செப். 2

யாழ். குடாநாட்டில்செயற்பட்டுவரும் பல அரச திணைக்களங்களுக்குத் தனிச் சிங்களத்தில் சுற்றறிக்கைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட உள்நாட்டு இறைவரித் திணைக்களம், யாழ். மாவட்ட உதவி மதுவரி ஆணையாளர் திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் கொழும்பில் செயற்பட்டுவரும் தலைமை அலுவலகங்களால்) சிங்களத்தில் சுற்றறிக்கைகள் அனுப்பிவைக்கப்பட்டு வருகின்றன. (ஐ-30)

# சமய சந்நிதிகளில்

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் திங்கள் நண்பகல் 12 மணிக்குக் கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய் பிற்பகல் 2 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன் பிற்பகல் 2 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெற உள்ளன.

பலாலி ஆசிரிய கலாசாலை உபஅதிபர் 'சிவத்தமிழ் வித்தகர்' சிவமகாலிங்கம் வழங்கும் சைவப் பிரசங்கம் தினசரி பிற்பகல் 3.45 மணிக்கு நடைபெறும். (ஐ-30)

* * *

நெடுந்தீவு மரியன்னை பேராலய வருடாந்தத் திருவிழா நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 8 ஆம் திகதி திருப்பலியும், திருச்சுரூப பவனியும் இடம்பெறும்.

நெடுந்தீவு பங்குத்தந்தை வண.பிதா மொன்பேட் அடிகளார் திருப்பலியை ஒப்புக்கொடுப்பார். (க-111)

★ ★ ★

வண்ணை சாந்நதயர் மடம் ஸ்ரீகற்பகவிநாயகர் கோயில் அலங்கார உற்சவம் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 15 நாள்கள் இடம்பெறும் இவ் உற்சவ நிகழ்வில் எதிர்வரும் 13 ஆம் திகதி சங்காபிஷேகமும் மணவாளக்கோல உற்சவமும் 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை9 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (க-15)

★ ★ ★

ஈவினை மத்தி அருள்மிகுஸ்ரீ கற்பகவிநாயகர்திருக்கோயில் மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறு நாள் புதன்கிழமை மு.ப. 10மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ-96)

★ ★ ★

சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தில் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு சங்காபிஷேகமும் மாலை திருவூஞ்சல் நடைபெறும். (க-27)

★ ★ ★

பிரான்பற்று, பெரியவளவு முருகமூர்த்தி ஆலய வருடாந்த உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் 12 ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன. உற்சவ தினங்களில் ஆலய அன்னதான மண்டபத்தில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படவுள்ளது. (க-135)

★ ★ ★

யாழ்ப்பாணம், செப். 2

அராலி கரைப்பிட்டி கணபதீஸ்வரன் திருக்கோயில் மணவாளக்கோலவிழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

சங்காபிஷேகத்தையும், மணவாளக்கோல விழாவையும் சாதகஞானபானு சிவஸ்ரீ ந. கேதீஸ்வரக்குருக்கள் நடத்திவைப்பார்.

அன்றையதினம் அபிஷேகம் நிகழ்வுற்றதும் நாதஸ்வர வித்துவான் இ. சிவகுமாருக்கு ''நாதகலாமணி'' என்னும் சிறப்புப்பட்டம் அறங்காவலர் பேராசிரியர் சி. க. சிற்றம்பலத்தினால் வழங்கப்படும். (க-15-173)

★ ★ ★

வலிகாமம் தெற்கு, செப்.2

சங்குவேலி ஸ்ரீ சிவஞானப்பிள்ளையார் கோயில் மஹோற்சவம் எதிர்வரும் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாள்களுக்கு நடைபெறும்.

விசேட உற்சவங்களாக எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை சப்பறத் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் பத்து மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை காலை தீர்த்தோற்சவமும் மாலை திருவூஞ்சலும் இடம்பெறவுள்ளன. (க-152)

★ ★ ★

சண்டிலிப்பாய், செப். 2

வடலியடைப்பு புதறாணை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று 11 ஆம் திகதியன்று சப்பறத் திருவிழாவும், 12 ஆம் திகதியன்று தேர்த்திருவிழாவும் 13 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் 15 ஆம் திகதியன்று பூங்காவன உற்சவமும் நடைபெறவுள்ளன. (க-135)

★ ★ ★

இணுவில் வட்டுவினி கண்ணகா பரமேஸ்வரி தேவஸ்தானத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை தொடங்கி பத்து நாள்களுக்கு காலையிலும் மாலையிலும் இலட்சார்ச்சனை, ஹோமம் என்பன நடைபெற உள்ளன.

தினமும் முற்பகல் 11 மணிக்கும் மாலை ஆறுமணிக்கும் இலட்சார்ச்சனைகள் ஆரம்பமாகும். அத்துடன் ஹோமமும் நடைபெறும்.

இணுவில் காயத்திரி பீடம் சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள் தலைமையில் லட்சார்ச்சனை நடைபெறும். (ஐ-152-30)

# மகளிர் அபிவிருத்தி அலுவலர் ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சை

மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை நாளை ஞாயிறு காலை 10 மணிக்கு, தாதியர் பயிற்சிப் பாடசாலையில் நடைபெற உள்ளதாக யாழ். ஆஸ்பத்திரி பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

பின்வரும் பரீட்சார்த்திகள் தங்கள் அனுமதி அட்டைகளை இன்று சனிக்கிழமை காலைவந்துபெற்றுக்கொள்ளுமாறும் அழைக்கப்பட்டுள்ளார்.

பரீட்சார்த்திகளின் பெயர் விபரம் வருமாறு:—

★ ஜே. மேகலா (புத்தளை, புலோலி தெற்கு, புலோலி)

★ என். தமிழ்ச்செல்வி (சுந்தரடையார்லேன், புலோலி, மேற்கு)

★ வி. வேல்விழி(906 ,பருத்தித்துறைவீதி, நல்லூர்)

★ எஸ். சுமத்திரா 342, பருத்தித்துறை வீதி,நல்லூர்)

★ எஸ். சுமந்திரா (342, பருத்தித்துறை வீதி, நல்லூர்)

★ எஸ். எஸ். சுஜந்தி (59, செட்டித்தெரு, நல்லூர்)

★ பி. செந்தாமரை (மீசாலை கிழக்கு)

★ எஸ். கஸ்தூரி (புத்தளை, புலோலி கிழக்கு)

★ ரி. தர்ஷினி (செட்டிக்குறிச்சி, பண்டத்தரிப்பு)

★ என். மேகலா (இடைக்குறிச்சி, வரணி)

★ எஸ். வசந்தி (நீர்வேலி வடக்கு)

★ எஸ். செல்வகாந்தினி ("கந்தன் கல்யல்", இருபாலை கிழக்கு)

★ எஸ். ஞானசுந்தரி(பாடசாலை லேன், தாவடி தெற்கு)

★ பி. உஷானந்தி (17, நாயன்மார் றோட், நல்லூர்)

★ ஜி. சந்திரராகினி (இலகாஸ் ஸ்ரோர்ஸ், நாவலடி, உடுப்பிட்டி). (ஐ-15-138)

# யாழ். அரச ஊழியர்களுக்கு 99 முதல்

# இடர்கால கொடுப்பனவை வழங்குக!

## அரச பொதுச் சேவைச் சங்கம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செப்.2

யாழ். மாவட்டத்தில் பணிபுரியும் அரச ஊழியர்கள் யுத்தச் சூழ்நிலையில் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் தங்கள் கடமைகளை விசுவாசத்துடன் செய்து வருகின்றனர். இவர்களுக்குக் கடந்த காலங்களில் இடர்காலக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வந்தது. இப் பிரதேசத்தில் தொடர்ந்தும் வன்செயல்கள் நடைபெறுவதால் 1999 ஆம் ஆண்டில் இருந்து அரச ஊழியர்களுக்கு இடர்காலக் கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசாங்க பொதுச்சேவைச் சங்கம் வடக்கு — கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு வேண்டுகோளை விடுத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் பணிபுரியும் அலுவலகப் பணியாளர்கள் மாகாண சபையைச் சார்ந்தோர்களாவர். இந்த ஊழியர்கள் தங்கள் தரங்களுக்குரிய பணிகளைச் சிறப்பாகச் செய்ய முடியாத நிலை உள்ளது. இவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவும், அவர்களின் சேவையை மேம்படுத்தவும் பின்வரும் கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

★ உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் பிரதேச செயலகங்களாகத் தரமுயர்த்தப்பட்ட பின் யாழ். கச்சேரியில் செயற்பட்ட பணிகள் பலவும் பிரதேச செயலகங்களுக்குப் பரவலாக்கப்பட்டுள்ளன. இதனால் சிற்றூழியர்களின் வேலைப்பளு கூடியுள்ளது. இவர்களின் வேலையை இலகுவாக்க ஆளணி ஒதுக்கீட்டைக் கூட்டவேண்டும். பிரதேச செயலகங்களில் சிற்றூழியர்களின் ஆளணி காவற்கடமைக்கு தரம் ii இல் இருவரும் அலுவலகப் பணிக்கு (கே.கே. எஸ்.) தரம் ii இல் இருவரும், அலுவலகத் தொழிலாளருக்கு தரம் iii இல் இருவரும் சாரதிக்கு இருவரும் ஒதுக்கப்பட்டுள்ளனர். பிரதேச செயலகங்களில் தரம் i இற்கான சுவடிக்காப்பாளர், இரட்டிப்பு இயந்திரம் இயக்குநர், புத்தகம் கட்டுநர் ஆகிய பணிகள் அதிகரித்துள்ள நிலையில் தரம் I இற்கான ஆளணி ஒதுக்கப்படவில்லை. பிரதேச செயலகங்களில் மத்திய அரசு அலுவலகப் பணியாளர் தரம் i ஐச் சார்ந்தோர் கடமை புரியாத நிலையில் புத்தகம் கட்டுநர் பதவிக்கு ஆளணி ஒதுக்கப்பட்டுள்ளது. பிரதேச செயலகங்களில் தரம் i இற்கான கடமைகள் உள்ளதால் மாகாண சபை சார்பில் தரம் i இற்கு ஆளணி ஒதுக்கித் தரவும்.

★ அலுவலகப் பணியாளர் தரம் iii இற்கான (கே. கே. எஸ்.) ஆளணி இரண்டாக உள்ளது. அலுவலகத்தில் பணிகள் செவ்வனே நிறைவு செய்ய அலுவலகப் பணியாளர் தரம் ii இற்கான ஆளணிகள் கூட்டி உதவவும். மேலும் அலுவலகப் பணியாளர்கள் அதிகாரிகளால் பணிக்கப்படும் வேலைகளை விருப்பமின்றியும் செய்யவேண்டியுள்ளது. மத்திய அரசு நியமனங்கள் போல அலுவலகப் பணியாளர்கள்தரம் Ii இற்கு காவலாளர், தூதுவர், அலுவலகப் பணியாளர் (கே. கே. எஸ்.) என வரையறை செய்து நியமனங்களைச் செய்ய ஆவன செய்தல் வேண்டும்.

★ பிரதேச செயலகங்களில் பெரும்பாலும் அலுவலகப் பணியாளர் தரம் III இற்கான ஊழியர்கள் நியமிக்கப்படவில்லை. இதனால் இவர்களுக்குரிய கடமைகள் தரம் I தரம் II ஐச் சார்ந்த ஊழியர்களே செய்ய வேண்டி உள்ளது. ஆதலால் தரம் III இற்கான ஊழியர்களை நியமிக்க ஆவன செய்ய வேண்டும்.

★ சில பிரதேச செயலகங்களில் அலுவலகப் பணியாளர் தரம் I ஐச் சேர்ந்தோர் காவல்பணி செய்யுமாறு பணிக்கப்படுகின்றார்கள். இதனைத் தவிர்க்குமாறு பிரதேச செயலகங்களுக்கு சுற்றறிக்கை மூலம் அறிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ சிற்றூழியர்களுக்கான கோலவுடை, மேலதிக நேர வேலை ஊதியம் போன்றவற்றுக்கான 2000 ஆம் ஆண்டுக்குரிய நிதி மாகாண சபையால் ஒதுக்கப்படாமையால் இந்த ஊழியர்களுக்கு அக்கொடுப்பனவு வழங்கப்படவில்லை. அவற்றை விரைவில் வழங்க ஆவன செய்ய வேண்டும். மாகாணசபை ஊழியர்களுக்கு இடர்கடன் கொடுப்பனவுக்குப் பணம் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்படவில்லை. இதனால் சிற்றூழியர்கள் தங்கள் தேவைக்குக் கடன் பெற முடியாதுள்ளது. இவர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய இடர்கடனுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றுள்ளது. (க)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், செப்.2

சுன்னாகம் மேற்கு அறிஞர் ஐயன்னாசனசமூக நிலையமும் யாழ். சர்வோதய இயக்கமும் இணைந்து நடத்தும் அறிஞர் ஐயன்னா முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நிலைய விளையாட்டுமைதானத்தில் நிலையத் தலைவர் ந. அரசரத்தினம் தலைமையில் நடைபெறும்.

பிரதமவிருந்தினராக, வலிகாமம் தெற்கு பிரதேச சபைத் தலைவர் தி. மா. செல்வராசாவும், கௌரவ விருந்தினர்களாக சர்வோதயம், யாழ். செயற்திட்ட அத்தியட்சகர் எஸ். வி. சங்கரப்பிள்ளை, வலி. தெற்கு சமூக அபிவிருத்தி உத்தியோத்தர் திருமதி சி. செல்வவிநாயகம் ஆகியோரும் சிறப்பு விருந்திர்களாக வலி. தெற்கு உதவிக்கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் திரு. சிவாஜி ஆகியோரும் கலந்துகொள்வர்.

(ஐ-15)

## பணப்பை திருட்டு

குடத்தனை, செப். 2

வீட்டுவாசலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் இருந்து 60 ஆயிரம் ரூபாவுடன் கூடிய பிரயாணப்பை இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளது.

கடந்த வாரம் பருத்தித்துறை ஓடக்கரை வீதியில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலை வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் கே. மயிலேறும்பெருமாளின் பிரயாணப்பையே இவ்வாறு இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட பிரயாணப்பையில் 60 ஆயிரம் ரூபா பணத்துடன் தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, தொழில் அட்டை என்பனவும் அடங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் குறித்து பருத்தித்துறை பொலீஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

(ஐ-ரி)

## மின்சாரம் கிடைக்கவில்லை

சண்டிலிப்பாய், செப். 2

சில்லாலை சென். ஜேம்ஸ் வீதி. சில்லாலை அம்மன் வீதி ஆகிய பகுதிகளுக்கு மின்சாரம் இதுவரை வழங்கப்படவில்லை என்றும் விரைவில் இப் பகுதி மக்களுக்கு மின்சார விநியோகம் கிடைக்க ஆவன செய்யுமாறும் சில்லாலை சென். ஜேம்ஸ் கிராம அபிவிருத்திச் சங்கம் இலங்கை மின்சார சபையின் யாழ். பிரதேச பொறியியலாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் கோரிக்கை விடுத்துள்ளது. (ஐ-135)

## அலுவலகம் இடம் மாற்றம்

தென்மராட்சி, செப். 2

பளைப் பிரதேசத்திலுள்ள கிளாலி, புலோப்பளை கிழக்கு, பளை நகரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளின் அலுவலகம் தற்போது 159, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்குவதாகக் கிராம அலுவலர் சி. பாலசுந்தரம் தெரிவித்தார்.

(இ-117)

---


## மரண அறிவித்தல்

### செல்லையா பாலரட்ணம்

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த செல்லையா பாலரட்ணம் 31 - 08 - 2000 வியாழன் இரவு சிவபதமடைந்தார்.

இவர் தியாகேஸ்வரியின் கணவரும் சிரோஜிதாவின் அருமைத் தந்தையும், காலஞ்சென்ற நவரத்தினம், பஞ்சரத்தினம், தியாகரத்தினம், துரைரத்தினம், யோகரத்தினம், திரவியம் மற்றும் சோதிரத்தினம் (நவாலி), திலகவதி (உரும்பிராய்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் டாக்டர் இராஜேந்திரம் (உரும்பிராய்) ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 01 - 09 - 2000 வெள்ளி பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மகள்.

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு.

(77945)


---

# இறந்தவரின் மரணம் தொடர்பாக மனைவி கைது

மீசாலை கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்து துன்னாலைப் பகுதியில் தற்காலிகமாக வசித்து வந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கந்தையா யோகநாதன் (வயது 34) என்பவர் கடந்த புதனிரவு துன்னாலையில் அவரது வீட்டு முற்றத்தில் இறந்து கிடந்த சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் அவரது மனைவி நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

யோகநாதன் ஜெயந்தி (வயது 30) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

மேற்படி குடும்பத்தவரின் மரணம் குறித்து 6 பேர் அளித்த வாக்குமூலங்களை அடுத்தே நெல்லியடிப் பொலீஸார் மரணமானவரின் மனைவியைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்து நேற்று அவரைப் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

பருத்தித்துறை நீதிவான் சந்தேக நபரை இம்மாதம் 8 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

க. யோகநாதன் சாவகச்சேரி நகரசபையில் சந்தை வரி வசூலிப்பாளராகவும், உழவு இயந்திர தற்காலிக சாரதியாகவும் பணிபுரிந்தவர் என்பதும் —

சம்பவதினமான கடந்த புதனன்று அவர் வெளியில் சென்றிருந்தார் என்றும் அவர் திரும்பி வருவதற்கு தாமதமாகியதால் அவரது மனைவி படுக்கைக்குச் சென்றுவிட்டதாகவும் காலை எழுந்து பார்த்தபோது வீட்டு முற்றத்தில் அவர் மர்மமான முறையில் இறந்து கிடக்கக் காணப்பட்டதாகவும் — ஏற்கனவே தகவ்ல் வெளியாகியிருந்தது தெரிந்ததே.

(இ-7-117)

## அரசு யுத்த நிறுத்தம்...

(முதலாம் பக்கத் தொடர்)

எமது கட்சியின் தலைவர் குமார்பொன்னம்பலம் படுபாவிகளினால் கொல்லப்பட்டதன் பின்னர் ஓர் அரசியல் இடைவெளி ஏற்பட்டது. இதனை எவராலும் நிரப்ப முடியாது. இந்த வெற்றிடத்தை நிரப்ப நாங்கள் முயற்சி செய்கிறோம்.

அவரது கடமைகளைத் தொடரவே நாங்கள் தேர்தல் களத்தில் குதித்துள்ளோம். குமார்பொன்னம்பலத்தை யார் கொலை செய்தார்கள்? ஏன் அவரைக் கொலை செய்தார்கள்? என்பன அனைவருக்கும் தெரிந்த இரகசியம்.

இந்தக் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு பின்னடிக்கிறது அவர் இறந்த பின் அவரது காரில் இருந்த கைத்தொலைபேசி ரணசிங்க என்பவரிடமிருந்து பொலீஸாரால் கைப்பற்றப்பட்ட போதும் எந்த விதமான நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

குமார் யாருக்காக உயிரிழந்தார் என்பதனை அனைவரும் சிந்திக்கவேண்டும்.

கடந்த 6 வருடங்களும் தமிழர்களின் சரித்திரத்திலே கறைபடிந்த காலம் ஆகும். யாழ்ப்பாணத்தில் மட்டும் 30 ஆயிரம் குடும்பங்கள் இருப்பிடங்களில் வாழ்வதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

ஒரு லட்சம் வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. 20 ஆயிரம் பெண்கள் விதவைகள் ஆக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்காகக் குரல் கொடுத்ததற்காகத்தான் குமார்பொன்னம்பலத்துக்கு இந்தக் கதி ஏற்பட்டது.

தென்மராட்சியிலிருந்து முழு மக்களும் இடம்பெயர்ந்துள்ள நிலையில் அவர்களது வீடுகள், கட்டடங்கள் முழுவதும் அழிக்கப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தை நிர்மூலமாக்குவதற்கான நடவடிக்கையின் ஆரம்பக் கட்டமே தென்மராட்சியில் இடம்பெறும் அழிப்பு வேலைகள் என்பதனை நாம் உணர வேண்டும்.

அதிகாரத்தைப் பலவந்தமாகத்தம் கையில் வைத்திருக்கும் ஈ.பி.டி.பி.யினர் பல தடவைகள் எமக்கு கொலைப் பயமுறுத்தல் விடுத்துள்ளனர். எமது வேட்பாளர்களை அவர்களின் வீடுகளுக்குச் சென்றும் பயமுறுத்தியுள்ளனர். இதுதான் ஜனநாயகத்தின் மரபா? பயமுறுத்தல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் நாம்பணிய மாட்டோம். அதேவேளை விடுதலைப்புலிகளுக்கு எந்தவிதமான இடையூறுகளையும் ஏற்படுத்தமாட்டோம்.

1979ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்ந்து நீடிக்கப்பட்டுவருகிறது. 3 வருடங்கள் மட்டுமே இந்தச் சட்டம் அமுல் செய்யப்படும் என முதலில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சட்டத்துக்கு எதிராக எந்தத் தமிழரும் குரல் கொடுக்கவில்லை. இந்தச் சட்டத்தை நீக்குமாறு இதுவரை எவரும் கோரவில்லை.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தையும் அவசரகாலச் சட்டத்தையும் ஒரே காரணத்துக்காகப் பயன்படுத்துகின்றார்கள்.

தமிழர்களை சட்டரீதியாக சித்திரவதை செய்வதற்கு என்றே இது உருவாக்கப்பட்டது.

நாடாளுமன்றில் அவசரகாலச் சட்டத்துக்கு எதிராக வாக்களிக்க முடியாதவர்கள் இன்று தமிழ் மக்கள் முன் வாக்குக் கேட்க வந்துள்ளார்கள்.

தமிழ் காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் இச்சட்டத்துக்கு எதிராக செயற்படுவோம் என்பதனைக் கூறிக் கொள்கின்றோம்— என்றார்.

அ. மாணிக்கசோதி இந்த மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

ஈ.பி.டி.பியினரால் மட்டும் உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டுவருவதாக பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது.

ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் 1994 ஆம் ஆண்டு பதவியேற்றனர். அதற்கும் முன்னரே பல ஆண்டுகளாக வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த நிவாரண விநியோகத்தினைத் தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்துவதை அனைவரும்விளங்கிக்கொள்ள வேண்டும்.

எமது கட்சி யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் போட்டியிடுகிறது—என்றார்.

இ. இரட்ணராஜா கருத்து வெளியிடுகையில்— எந்த ஒரு நாட்டினதோ அல்லது அரசினதோ கைக்கூலிகளாக நாங்கள் ஒருபோதும் செயற்படமாட்டோம். இதுவரை காலமும் நாம்அவ்வாறு செயற்படவும் இல்லை.

அரசின் தீர்வுத் திட்டம் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளை ஏமாற்றி உதவிகளைப் பெறுவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு திட்டமாகும்.

சிங்கள மக்கள் மத்தியில் 60 சத வீதமான மக்கள் யுத்தத்தை எதிர்க்கின்றார்கள். ஆனால் சிங்கள அரசியல்வாதிகள்தான் யுத்தத்தை வளர்க்கிறார்கள்— என்றார்.

(இ-5-10)

# யாழ்ப்பாணத்தில் நேற்று வேட்புமனு தாக்கல் செய்த எட்டு அணிகள் விவரம்

நேற்று வேட்பு மனுத்தாக்கல் செய்த கட்சிகள் விபரமும் வேட்பாளர்களின் விபரமும் வருமாறு:-

### அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

★ முதன்மை வேட்பாளர் சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி.
★ அபிமன்னசிங்கம் மாணிக்கசோதி.
★ சட்டத்தரணி இராமசாமி உருத்திரா.
★ கந்தையா அருணாசலம்.
★ விஜயரட்ணம் இரட்ணராஜா
★ நடராசா இராஜகுரியர்.
★ கனகசபாபதி நமநாதன்.
★ ஆழ்வார் செல்லத்துரை.
★ இளையவன் மயில்வாகனம்.
★ அந்தோனிப்பிள்ளை மரியநாயகம் செபஸ்தியான்.
★ நவரட்ணம் ராகுலன்.
★ சிவகுரு இளங்கோ.

### பிரஜைகள் முன்னணி

★ முதன்மை வேட்பாளர் கந்தையா மகாலிங்கம்.
★ குழந்தைவேலு விஜேந்திரா.
★ ஸ்மைல் நவாஸ்.
★ நாகமுத்து அருணகிரிநாதன்.
★ முத்துராஜா சக்திவேல்.
★ எம்.கே.கனகசுந்தரம்.
★ இரட்ணராசா இரட்ணசிங்கம்.
★ வீரசிங்கம் சிறிகணநாதன்.
★ தம்பிப்பிள்ளை ரஞ்சித்குமார்.
★ முத்துச்சாமி சிவாநந்தன்.
★ தம்பிஜயா காசிநாதன்.
★ மொகமட் கனிபா மொகமட் அப்துல் ரசீட்.

### ருகுணு மக்கள் கட்சி

★ முதன்மை வேட்பாளர் அருணத சொய்சா.
★ லலித் தர்மகீர்தி.
★ தம்பு குலசேகரன்.
★ தம்பிராஜா கிறிஸ்தோபர் அரியராஜா.
★ சுப்பையா சங்கர்.
★ கே.ஏ.ஏச் சுமிந்திரா ஜெயக்கொடி.
★ களுகலகே மோகனந்த சில்வா
★ எம்.ஏ. தினேஷ் பிரியந்த
★ எம்.ஏ.எல். பிரியதர்சினி.
★ எம்.விலஸ்போலான்.
★ பி.டி. சமிந்த மட்டுக்கொட.

### தமிழர் விடுதலைக் கூட்டணி

★ முதன்மை வேட்பாளர் வீரசிங்கம் ஆனந்தசங்கரி.
★ சோமசுந்தரம் சேனாதிராஜா.
★ நடராஜா ரவிராஜ்.
★ சேவியர் பிலிப் பிரான்சிஸ்.
★ சண்முகராசா அரவிந்தன்.
★ கதிர்காமர் சின்னத்துரை.
★ தம்பு லோகநாதபிள்ளை.
★ சண்முகம் முத்துலிங்கம்.
★ சின்னத்தம்பி சிவமகாராசா.
★ சின்னத்தம்பி வேலாயுதம்.
★ விநாசித்தம்பி வைத்திலிங்கம்.
★ கந்தையா சிவசாமி பாலகிருஷ்ணன்.

### ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) - சுயேச்சைக் குழு

★ முதன்மை வேட்பாளர் தர்மராசா வில்சன்.
★ பசுபதி ஜீவரத்தினம்.
★ தம்பிப்பிள்ளை நித்தியானந்தன்.
★ நடராசா அலெக்சாண்டர் ஜெயக்கொடி.
★ அன்னலிங்கம் உதயகுமார்.
★ சத்தியசீலன் ஞானசீலன்.
★ கதிரவேலு பாலரஞ்சன்.
★ தம்பு தவதீபன்.
★ சுப்பிரமணியம் தங்கேஸ்வரன்
★ பரஞ்சோதி உருத்திரமூர்த்தி.
★ ஆசீர்வாதம் அன்ரன் ஜெயபாலா.
★ அமிர்தலிங்கம் திருச்செல்வம்.

### மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.)

★ முதன்மை வேட்பாளர் பேச்சிமுத்து நடராசா.
★ செல்லையா நடராசா
★ சுப்பையா இரட்ணசபாபதி
★ மெய்யன் இராசையா
★ சுந்தரம் கணேசமூர்த்தி
★ இராமலிங்கம் அரியமுத்து
★ பழனியாண்டி சாந்தமலர்
★ முருகன் ஜபாபுரி வேலுமணி வண்ணன்
★ பசீர் கிருஷ்ணமூர்த்தி
★ நாராயணசாமி இராசகோபால்
★ மாரிமுத்து கனககுமார்
★ பிச்சை லோகநாதன்

### ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட் - ஈரோஸ் கூட்டணி)

★ முதன்மை வேட்பாளர் தர்மலிங்கம் சித்தார்த்தன்
★ கதிரவேற்பிள்ளை சுதாகரன்
★ அன்ரன் பொன்னையா
★ சிவசங்கரம் பாலேந்திரன்
★ வேலு நவரட்னம்
★ பெனடிக்ற் தனபாலசிங்கம்
★ அந்தோனிப்பிள்ளை வின்சன் கெனடி
★ செல்வதுரை ஜெகநாதன்
★ இராசேந்திரம் செல்வராசா
★ சபாபதிப்பிள்ளை ஜெயச்சந்திரன்
★ செபஸ்ரியன் இதயராஜன்
★ கந்தசாமி தயாபரன்

### ஐக்கிய தேசியக் கட்சி

★ முதன்மை வேட்பாளர் தியாகராசா மகேஸ்வரன்
★ பொன்னையா சிவபாதம்
★ சந்திரலிங்கம் சிறிகஜன்
★ கோபாலபிள்ளை ஜெயந்திரா
★ சபாரட்னம் ஜெயரட்னம்
★ சோமசுந்தரம் சிவா
★ கந்தசாமி நந்தகுமார்
★ சிதம்பரப்பிள்ளை இராசதுரை
★ நாகலிங்கம் நாகராஜா
★ சண்முகம் சிவலிங்கராஜா
★ முத்துத்தம்பி கனகசுந்தரம்
★ கந்தையா வீரசிங்கம்

(இ-3-5-9)

# தமிழர் மகா சபை வேட்பு மனு தாக்கல்

## கூட்டணி தனித்துப் போட்டி

அம்பாறை,செப்.2

அம்பாறை மாவட்டத்தில் தமிழ்க்கட்சிகளை ஒரணியில் போட்டியிட வைக்கும் முயற்சி தோல்வியடைந்துள்ளதை அடுத்து தமிழர் மகா சபை நேற்று வேட்பு மனுவைத் தாக்கல் செய்தது.

தம்பியாப்பிள்ளை கோபால கிருஷ்ணனை முதன்மை வேட்பாளராகக் கொண்டு இந்த வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி தவிர்ந்த தமிழ்க்கட்சிகளைச் சேர்ந்த 10 பேர் இந்தப் பட்டியலில் போட்டியிடவிருக்கின்றனர்.

அதேசமயம் தமிழர் விடுதலைக் கூட்டணி தனித்து வேட்புமனுவை நாளை மறுதினம் திங்கட்கிழமை தாக்கல் செய்யவிருக்கின்றது. (இ-3)

# பொ. ஐ. முன்னணியின் வெற்றிக்கு பாடுபடுவேன் என்கிறார் அஷ்ரப்

கொழும்பு,செப்.2

எதிர்வரும் பொதுத்தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வெற்றிக்கு தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளப் போவதாக கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

தம்மாலும் தமது அங்கத்தவர்களாலும் வழங்கப்பட்ட ராஜினாமாக் கடிதங்கள் வாபஸ் பெறப்படும் என வும் -

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதானத்தின் சின்னம் என வும் - அவர் குறிப்பிட்டார். (இ-8)

# புலிகள் தரப்பில் உயிரிழந்த அறுவர் விவரம்

வவுனியா,செப்.2

இருவேறு சம்பவங்களில் தமது தரப்பில் உயிரிழந்த ஆறுபேரின் பெயர் விவரங்களை விடுதலைப் புலிகள் தமது வானொலி மூலம் அறிவித்துள்ளனர்.

கடந்த மாதம் 27ஆம் திகதி மட்டக்களப்பில் புல்லுமடுப் பகுதியில் விசேட அதிரடிப்படையினருடனான தாக்குதலில் லெப்ரினென்ட் ரதன் அல்லது இன்பராஜ் (மோகன் - ஜெயச்சந்திரன் - மட்டக்களப்பு) என்பவரும் -

நேற்றுமுன்தினம் வண்ணாத்திப் பாலப் பகுதியில் தவறுதலாக இடம்பெற்ற வெடிவிபத்தில் 2ஆம் லெப்ரினென்ட் மாலா (நாகராசா விஜிதா - கிளிநொச்சி), அன்ரனி (தேவதாஸன் அனுலா - யாழ்ப்பாணம்), 2ஆம் லெப்ரினென்ட் அகரைக் கோடன் (அந்தோனி பிறேமா - கிளிநொச்சி), 2ஆம் லெப்ரினென்ட் ரஜனி (சின்னராசா வசந்தகுமாரி- யாழ்ப்பாணம்) ஆகியோரும் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-8)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,செப்.2

யாழ்.குடாநாட்டிலிருந்து வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்யப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 1ஆம் திகதிவரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர்பிரிவு ரீதியாக வருமாறு:-

### யாழ்ப்பாணம்

511/156736/B

### ஊர்காவற்றுறை

511/156737/A

### கோப்பாய்

| | |
|---|---|
| 511/144985/A | 511/144985/B |
| 511/144989/A | 511/144989/B |
| 511/145198/A | 511/145198/B |
| 511/145198/C | 511/145198/D |
| 511/149672/A | 511/150840/A |
| 511/150840/B | 511/150840/C |
| 511/150840/D | 511/150840/E |
| 511/153183/A | 511/154298/A |
| 511/154347/A | 511/154347/B |
| 511/154411/A | 511/154422/A |
| 511/154422/B | 511/154422/C |
| 511/154466/A | 511/154466/B |
| 511/154466/C | 511/156807/A |
| 511/156807/B | 511/156812/A |
| 511/156812/B | 511/157109/A |
| 511/157442/A | 511/157442/B |
| 511/157654/A | 511/157671/A |
| 511/157671/B | 511/159688/A |
| 511/159688/B | |

### நல்லூர்

| | |
|---|---|
| 511/133224/A | 511/141165/A |
| 511/141165/B | 511/144875/A |
| 511/144878/A | 511/144955/A |
| 511/144982/A | 511/145120/A |
| 511/145120/B | 511/145363/A |
| 511/145607/A | 511/145611/A |
| 511/147713/A | 511/147713/B |
| 511/147713/C | 511/147713/D |
| 511/156701/A | 511/156702/A |
| 511/156705/A | 511/156708/A |
| 511/156710/A | 511/156712/A |
| 511/156716/A | 511/156724/A |
| 511/156817/A | 511/156817/B |
| 511/156817/C | 511/156817/D |
| 511/156860/A | 511/156861/A |
| 511/156862/A | 511/157069/A |
| 511/157111/A | 511/157111/B |
| 511/157115/A | 511/157502/A |
| 511/157518/A | 511/157518/B |
| 511/157630/A | 511/157630/B |
| 511/157630/C | 511/157630/D |
| 511/157630/E | |

### உடுவில்

| | |
|---|---|
| 511/143230/A | 511/144924/A |
| 511/144950/A | 511/144950/B |
| 511/144976/A | 511/144976/B |
| 511/144976/C | 511/144999/A |
| 511/145409/A | 511/151991/B |
| 511/156040/A | 511/156041/A |
| 511/156726/A | 511/156805/A |
| 511/156819/A | 511/156819/C |
| 511/156837/A | 511/156837/B |
| 511/156841/A | 511/157191/A |
| 511/157196/A | 511/157196/B |
| 511/157200/A | 511/157401/A |
| 511/157402/A | 511/157609/A |
| 511/157618/A | 511/157618/B |
| 511/157618/C | 511/157627/A |
| 511/157627/B | 511/157627/C |
| 511/157627/D | 511/157627/E |
| 511/157659/A | 511/157674/A |
| 511/157674/B | 511/157674/C |
| 511/157678/A | 511/157678/B |
| 511/157685/A | 513/157848/A |

# துர்க்கை அம்மன் உற்சவத்தையொட்டி மக்கள் வங்கியின் விசேட கருமபீடம்

யாழ்ப்பாணம்,செப்.2

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயவருடாந்த உற்சவத்தை முன்னிட்டு மக்கள் வங்கியின் சுன்னாகம் கிளை அங்கு விசேட கருமபீடம் ஒன்றை நிறுவுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகக் கிளை முகாமையாளர் க.ஆனந்தராசா அறிவித்துள்ளார்.

இதேவேளை தினமும் பிற்பகல் 2 மணிவரை யாழ்.பஸ்நிலையம், மானிப்பாய் மற்றும் சங்கானை, சுழிபுரம் பகுதிகளிலும் சிறப்புக் கருமபீடங்கள் செயற்பட்டு வருகின்றன எனவும் -

மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் கிங்ஸ்லி இராஜநாயகம் தெரிவித்தார். (இ-7)


*தொலைத்தொடர்பு நிலையம்*

## இடம் மாற்றம்

**கே.கே.எஸ்.வீதி, சுன்னாகத்தில் இயங்கிவந்த மொனரா தொலைத்தொடர்பு சேவை தற்பொழுது நிலோ தொலைத்தொடர்புச் சேவை ஏழாலை தெற்கு, சூராவத்தை, சுன்னாகம் எனும் முகவரியில் வாடிக் கையாளர்களின் நலன்கருதி இரவு - பகல் சேவையாக இயங்கிவருகிறது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.**

*தொலைபேசி இலக்கங்கள்:-*
**021-2165**
**021-2166**
**070-212899**

உரிமையாளர்,
**து.செல்வரத்தினம்**
(கற்கண்டு)

(C/12793)


# கொட்டடி, நாவாந்துறையில் இடம்பெயர்ந்து வசிக்கும் குருநகர், பாசையூர்ப் பகுதி மீனவர்கள் குருநகர் கடலில் தொழில் செய்ய அனுமதி

## படைத்தரப்புடனான சந்திப்பில் இணக்கம் ஏற்பட்டதாக ஈ.பி.டி.பி. தெரிவிப்பு

கொட்டடி, நாவாந்துறைப் பகுதிகளில் இடம்பெயர்ந்து வசிக்கும் குருநகர், பாசையூர்ப் பகுதி மீனவர்கள் மீண்டும் குருநகர்க் கடலில் தொழில் செய்யவும் -

மண்டதீவுக் கடலில் பாசையூர் மீனவர்களால் விடப்பட்ட வலைகளை எடுத்துவரவும் -

512 ஆவது படையணித் தளபதி அனுமதி வழங்கியுள்ளார் என ஈ.பி.டி.பி. அமைப்பு நேற்று விடுத்த பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடாக்கடலில் மீன் பிடிப்பதில் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக யாழ். நகரில் உள்ள 512ஆவது பிரிகேட் தளபதியின் அலுவலகத்தில் நேற்றுக் காலை கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது.

ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள், மற்றும் 512 ஆவது பிரிகேட் தளபதி, ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கலந்துகொண்டனர்.

அதேவேளை பாசையூர் மீனவர்கள் அவர்களது வள்ளங்களைப் பயன்படுத்தி நாவாந்துறைக் கடலில் தொழில்புரிய நாவாந்துறைக் கடற்றொழிலாளர் சங்கத்துக்கும் பாசையூர் கடற்றொழிலாளர் சங்கத்துக்கும் இடையே இந்தச் சந்திப்பில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

மேலும் தீவகத்திலுள்ள மீனவர் சங்கங்களுடன் கொட்டடி, நாவாந்துறை மற்றும் குருநகர், பாசையூர் ஆகிய பகுதிகளில் உள்ள மீனவர்கள் இணைந்து மீனவர்கள் எதிர் நோக்கும் மற்றும் சில பிரச்சினைகள் தொடர்பாக ஈ.பி.டி.பியின் தலைமைச் செயலகத்தில் சந்திப்பு ஒன்றை நடத்தவுள்ளனர் - இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# திகதி நீடிப்பு


யாழ்ப்பாணம்,செப்.2

தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்ப திகதி எதிர்வரும் 7ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க அறிவித்துள்ளார். கடந்த 26ஆம் திகதி முதல் நேற்று முதலாம் திகதிவரை விண்ணப்பிக்க முடியும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-9-5)

# நன்றி நவிலல்

கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம் (பிலி. 1:21)

தோற்றம்:
09-08-1975



மறைவு:
10-08-2000

## செல்வி மேபிள் சாம் குணரெத்தினம்

**(கலைப்பீட மாணவி, கொழும்பு பல்கலைக்கழகம்)**

கர்த்தருக்குள் நித்திரை அடைந்த எமது அன்பிற்குரிய மகளின் மரணத்தின்போது எம்முடன் தோளோடு தோள்நின்று இறுதிவரை ஒத்தாசை செய்த இலங்கை பெந்தகொஸ்தே சபையினர், ஊழியர்கள், விசுவாசிகள், பல்கலைக்கழக மாணவர்கள், தேசிய கிறிஸ்தவ சபையினர், கிறிஸ்தவ அமைப்புகள் மற்றும் இரங்கலுரை நிகழ்த்தியோருக்கும் எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் நேரில் வந்தும், கடிதம், தந்தி, தொலைபேசி மூலமும் எமக்கு ஆறுதல் கூறியோருக்கும், மலர்வளையங்களை வைத்தும், துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தவர்களுக்கும் மற்றும் பலவித அர்ப்பணிப்புக்கள், தியாகங்கள் செய்தோருக்கும் எமது இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*A 82, மத்துமகேவத்த வீடமைப்புத்திட்டம், நுகேகொட.*
தொ.பே. இல. 829968

A.சாம் குணரெத்தினம்
குடும்பத்தினர்.

(C/12794)

# பொது வேட்பாளரை நியமிக்கும் முயற்சி திருமலையில் தோல்வி!

## உண்ணாவிரதமும் கைவிடப்பட்டது

திருகோணமலை,செப்.2

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடும் தமிழ்க் கட்சிகளையும் சுயேச்சைக் குழுக்களையும் ஒரே அணியில் போட்டியிட வைக்கும் முயற்சி தோல்வி அடைந்து விட்டது.

திருகோணமலையில் உள்ள தமிழர் விழிப்புணர்வு ஒன்றியம் இதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்ததும் - இந்த முயற்சிக்கு ஆதரவு தெரிவித்து பிரஸ்தாப ஒன்றியத்தைச் சேர்ந்த யேசுதாசன் என்பவர் கடந்த புதன்கிழமை சாகும் வரையான உண்ணாவிரதத்தை ஆரம்பித்ததும் - தெரிந்தவையே.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவாக நேற்று திருகோணமலையில் பாடசாலைகள், கடைகள், தியேட்டர்கள் மூடப்பட்டிருந்தன. யேசுதாசனுடன் சுமார் ஆயிரத்து 500க்கு மேற்பட்டோர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

எனினும் இந்த ஒற்றுமை முயற்சி தோல்வி அடைந்ததை அடுத்து யேசுதாசனின் உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டது. அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். உண்ணாவிரதத்துக்கு ஆதரவாகத் துண்டுப்பிரசுரம் விநியோகித்துக் கொண்டிருந்த 15 இளைஞர்கள் கைதாகிப் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

தமிழ்க் கட்சிகளையும் சுயேச்சைக் குழுக்களையும் ஒற்றுமைப்படுத்துவதற்கு நேற்று நடத்தப்பட்ட கூட்டம் சுமார் மூன்று மணி நேர இழுபறிக்குப் பின்னர் தோல்வியில் முடிவடைந்தது.

(இ-150)

# புலிகளுடன் என்னைத் தொடர்புபடுத்தி பொய்ப் பிரசாரம் செய்ய வேண்டாம்

## ஜனாதிபதிக்கு ரணில் கடிதம்

கொழும்பு,செப்.2

விடுதலைப் புலிகளுடன் என்னைத் தொடர்புபடுத்தி என்மீது வீண்பழி போடவேண்டாம். இப்படியாகப் பொய்ப்பிரசாரத்தில் ஈடுபட்டால் வீணான பின் விளைவுகளை எதிர்நோக்க வேண்டிவரும்.

மேற்கண்டவாறு ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளார்.

நேற்று அவர் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள அவசர கடிதம் ஒன்றிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கொழும்பு நகரசபை வளாகக் குண்டுத் தாக்குதல் குறித்து எனக்கு முன்கூட்டியே தெரியும் என்று கூறியுள்ளீர்கள்.

இதில் எந்தவித உண்மையும் இல்லை. விடுதலைப் புலிகளுடன் தொடர்புபடுத்தி வீண்பழியை என் மீது போடாதீர்கள்.

ஜனாதிபதித் தேர்தலின் போது இதே போன்ற பிரசாரத்தை மேற்கொண்டு இருந்தீர்கள். எனக்கு எதிரான இத்தகைய பிரசாரத்தை உடன் நிறுத்தவேண்டும் - என்றுள்ளது.

(ஐ-3)

# ஆண்டு விழாவும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம்,செப்.2

தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகத்தின் 27 ஆவது ஆண்டு விழாவும், பரிசளிப்பு விழாவும் இன்றும், நாளையும் தும்பளை கணக்கிலாவத்தை ஆலயத்துக்கு அருகிலுள்ள விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

இன்றைய நிகழ்வுகளில் பிற்பகல் 2.30 மணிக்கு மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நடைபெறும்.

அமரர் வீ.ஏ.கிருஷ்ணராசா ஞாபகார்த்த சுழல் கேடயத்துக்கான துடுப்பாட்டப் போட்டியைத் தொடர்ந்து நாளைய நிகழ்வுகள் நடைபெறும்.


Institute of Business Management Studies

IBMS

MEMBER OF I TRAIN U.S.A

கணனிக் கற்கை நெறிகளுக்காக

IBMS இன் 5000 மாணவர்களுக்கான மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2000/2001

மேற்படி புலமைப்பரிசிலுக்கான அனுமதிப்பரீட்சை எதிர்வரும் 13.09.2000 அன்று நடைபெறும். அனேக மாணவர்கள் விண்ணப்பித்து வருவதால் விண்ணப்ப முடிவு திகதி 05.09.2000 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்

1000 மாணவர்களுக்கு 100% புலமைப்பரிசில்

(C/12789)

IBMS NO.701, K.K.S. ROAD, JAFFNA


# யாழ். மாவட்டத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஜே.வி.பி., றுகுணு மக்கள் கட்சி, பிரஜைகள் முன்னணி, புளொட், இடதுசாரி ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியனவும், ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) சார்பான சுயேச்சைக் குழுவும் இதுவரை வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

மேலும் ஒன்பது அணிகள் நாளை மறுதினத்துக்கு முன்னர் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யவிருக்கின்றன.

அதேசமயம் - இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளராக மாவை சேனாதிராசா நியமிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் நேற்று யாழ். செயலகத்துக்கு அறிவித்துள்ளார்.

வன்னி, கண்டி, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெயரில் ரஞ்சித் என்பவர் வேட்புமனுத் தாக்கல் செய்ததை அடுத்தே தேர்தல் ஆணையாளர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

தமிழரசுக்கட்சியின் செயலாளராக முன்னாள் திருமலை எம்.பி. அ.தங்கத்துரை இருந்து வந்தார். அவர் கொல்லப்பட்டதை அடுத்தே சேனாதிராசா நியமிக்கப்பட்டதாகத் தேர்தல் ஆணையாளர் தமது அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார். (இ-3)

# றுகுணு மக்கள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ழில் தாக்கல் செய்தன.

அதே சமயம் - வேட்புமனுத் தாக்கல் செய்வதற்காக முஸ்லிம் காங்கிரஸ், இடம்பெயர்ந்த முஸ்லிம்களின் சுயேச்சைக்குழு, லிபரல் கட்சி, சிங்கள மகாசம்மந்த பூமிபுத்திரக்கட்சி ஆகியவற்றின் தலைவர்கள் நாளை யாழ்ப்பாணம் வருகின்றனர்.

நாளை மறுதினம் அவர்கள் வேட்புமனுவைத் தாக்கல் செய்வர்.

இன்று வேட்புமனு தாக்கல் செய்யலாம் என்றும் -

நாளை விடுமுறை என்றும் செயலக அதிகாரி தெரிவித்தார்.


பிரமிட் வீடியோ CD வெளியீடுகள்

* வெற்றிக் கொடிகட்டு
* மாப்பிள்ளை கவுண்டர்
* கும்பக்கரை தங்கையா
* வருஷம் 16
* வண்ண வண்ண பூக்கள்
* திருஷ்ணா
* காலமெல்லாம் காத்திருப்பேன்
* காலமெல்லாம் காதல் வாழ்க
* இரவுப் பூக்கள்
* ஆனந்தக் கண்ணீர்
* சின்ன மருமகள்
* லட்சுமி வந்தாச்சு
* குரு தட்சிணை
* மகாகவி காளிதாஸ்
* வறுமையின் நிறம் சிவப்பு
* தேவராகம்
* இது நம்ம ஆளு
* என் ரத்தத்தின் ரத்தமே
* கோடி கண்மணி
* ராஜ காளி அம்மன்
* காதல் வாகனம்

(C/12791)

வீடியோ விமல்

யாழ்ப்பாணம்

புதிய வீடியோ CD வெளியீடு

அப்பாஸ் நடிப்பில்

* றிலக்ஸ் சுரேஸ்கோபி, ஷாய்குமார்
* கங்கா ஓர் தொடர்கதை
* எங்க மாப்பிள்ளை

திரையரங்கிற்கு முன்னுரிமை

(77946)

விஷ்ணு வீடியோ

K.K.S. Rd, கோண்டாவில்.


# நினைவு தினம்

கொழும்பு,செப்.2

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட தலைவர்களான வி.தர்மலிங்கம், எம்.ஆலாலசுந்தரம் ஆகியோரின் 15ஆவது நினைவுதினத்தையொட்டி விசேட அஞ்சலி நிகழ்வு இன்று காலை கூட்டணியின் யாழ். அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.


COMPUTER கல்வி பயில உள்ளீர்களா?

* உங்கள் கணனி நிறுவனத்தை நீங்கள் தெரிவுசெய்துவிட்டீர்களா?
* நீங்கள் தெரிவு செய்த கணனி நிறுவனம் அரசினால் அங்கீகரிக்கப்பட்டதா?
* பாடவிதானம் அங்கீகரிக்கப்பட்டதா?

இலங்கையில்

✓ இலங்கை அரசின் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சினால் NEICT அங்கீகரிக்கப்பட்டது.
✓ இலங்கை அரசின் NATTA வினால் நடாத்தப்படும் Sri Lanka Computer Driving Licenceக்கு வடக்கு கிழக்கில் சிபார்சு செய்யப்பட்ட ஒரே நிறுவனம்.
✓ இலங்கை அரசின் தொழில் மற்றும் மூன்றாம் கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது.
✓ இலங்கை கணனிகள் பயிற்சி நிலைய கூட்டமைப்பின் குழு உறுப்பினர்.

சர்வதேசம்

- இங்கிலாந்தின் கணனிசார் தொழில் கூட்டமைப்பின் உறுப்பாண்மை.
- அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து கணனிகள் சபையின் பரீட்சைக்கு மாணவர்களை தோற்றுவித்தல். உயர்ந்த சித்திவிதம்.

மற்றும் யாழ் நகரில்

- வடக்கு,கிழக்கு மாகாண அரச ஊழியருக்கான கணனி பயிற்சி நிறுவனமாக அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

தலைமை அலுவலகமும், கிளைகளும்

தலைமை அலுவலகம்:-

DCS, College of Computer Technology, No.339 1/1, Galle Road, Colombo - 04. T.PNo: 589899

கிளைகள்:-

DCS, No.124/2, Palaly Road, Thirunelvely. T.P.No:021-2596
DCS, N.M.M.V. Road, Nelliyadi.
DCS, No.171, Trinco Road, Batticaloa. T.P No: 065-23993
EDMS, No.156, Green Road, Trincomalee.T.P.No:026-21805
DCS, M.P.C.S Building Station Road, Vavuniya.
DCS, 89, Main Street, Kinniya - 02.

எமது நிறுவனத்தில் பதிவுகளை மேற்கொள்பவர்களுக்கு அவர்கள் விரும்பும்பட்சத்தில் தமது கல்விநெறியை மேற்குறித்த எமது தலைமை அலுவலகத்தில் அல்லது கிளைகளில் தொடர்வதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்து தரப்படும்.

மேற்குறிப்பிட்ட சிறப்புத் தகுதிகளை உடைய எமது நிறுவனம்

கணனி பயிற்சிக்கு!

அங்கீகரிக்கப்பட்டதா?

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தை நீங்களே தெரிவு செய்து கொள்ளுங்கள்.

On the Right Track

DCS - FOR THE NEXT GENERATION INFORMATION TECHNOLOGY NEEDS

DCS

COLLEGE OF COMPUTER TECHNOLOGY
(British ACP Recognized Training Centre)
(Reg.No N(PVS) 13073)
T.P NO.021-2596 E-mail: dcsjaf@sltnet.lk

DCS, 124/2,Palaly Road, Thirunelvely. (C/12770) DCS, N. M. M. V. Road, Nelliaddy.



கப்பமற்ற
கடத்தலற்ற
கொள்ளையற்ற வாழ்வுக்கு
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கு
எமது வாக்குகளை அளித்திடுவோம்!

ஈ.பி.டி.பி

வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்!!



X

(C/12790)

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் தலையீட்டையடுத்து கடற்படையினரால் மறிமுதல் செய்யப்பட்ட தருநகர் மீனவர்களது 60 மீன்பிடி அனுமதிப்பத்திரங்களும் 18 வள்ளங்களும் மீளப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02-09-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.